# மன்னா

MANNA — மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ்க் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை — MANNA


பொழிவு - 09
குவிப்பு - 11
பக்கங்கள் - 20
விலை ரூபா 20.00
நவம்பர் 2006

THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Manna Office, Pastoral Centre, Cathedral St, Mannar, Sri Lanka. T.P: 023 - 2232377


# பங்குப் பணித்தளங்கள்

# ஆதித்திருச்சபைச் சமூகங்களாக மாறவேண்டும்!


## திருத்தந்தை 16ம் பெனடிக்ற் வலியுறுத்துகிறார்



"நவீன காலப் பங்குத்தளங்கள் ஆதித் திருச்சபைச் சமூகங்களை (அன்பியங்களை) ஒத்திருக்க வேண்டும்" என்று திருத்தந்தை 16ம் பெனடிக்ற் அவர்கள் வலியுறுத்தியுள்ளார். கடந்த செப்டம்பர் 22ம் திகதி திருத்தந்தை அவர்கள் பொதுநிலையினருக்கான வத்திக்கான் ஆணையத்தின் பொறுப்பாளர்களைச் சந்தித்தார். அப்போதே அவர் இக்கருத்தை வலியுறுத்தினார். மேலும் அவர் கூறுகையில், "பங்குப் பணித்தளங்களைப் புதுப்பிப்பது என்பது வெறுமனே சிறப்பான மேய்ப்புப்பணித் திட்டங்களை மட்டும் சார்ந்ததல்ல, மாறாக பங்கின் உறுப்பினர்கள் நற்கருணையில் இயேசுவைச் சந்தித்த ஆதித்திருச்சபைச் சமூகங்களாக மாற வேண்டும்" என்று திருத்தந்தை கூறினார்.

வத்திக்கான் பொதுநிலையினர் ஆணையக்கூட்டம் அதன் தலைவர் பேராயர் ஸ்ரனிஸ்லோஸ் ரில்சோ தலைமையில் நடைபெற்றது. இதில் கர்தினால்கள், பேராயர்கள், ஆயர்கள், பொதுநிலையினர்கள் பங்குகொண்டனர். இக்கூட்டம் *'பங்குத் தளங்களைப் புதுப்பித்தல் - புதுப்பிக்கும் வழிகள்'* என்ற தலைப்பில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வழங்கப்பட்ட திருத்தந்தையின் செய்தியில், "நாம் விரும்பும் பங்குத் தளங்களைப் புதுப்பிக்கும் நோக்கம் எவ்வளவுதான் பயனுள்ளதாக இருந்தாலும் வெறுமனே மேய்ப்புப்பணித் திட்டங்களால் மட்டும் அது நிறைவேறாது. திருத்தூதர் பணி நூல் காட்டும் 'நாள்தோறும் கூடிவந்தார்கள். அப்போஸ்தலர்களின் படிப்பினைகளைக் கேட்டார்கள். அப்பங்களைப் பிட்டார்கள். ஒருமனப்பட்டுச் செபித்தார்கள். தங்களது உடைமைகளை பொதுவாகப் பகிர்ந்து வாழ்ந்தனர்' என்ற அடிப்படையில் அன்பியச் சமூகங்களாக நமது பங்கு பணித்தளங்கள் மாற வேண்டும்" என்று திருத்தந்தை கூறினார்.

## திருவுளச் சபையின் புதிய அதிபராக அருட்பணியாளர் டண்ஸ்ரன் நியமனம்




திருவுளச்சபையின் இலங்கைக்கான புதிய மாகாண அதிபராக அருட்பணியாளர் ஜேம்ஸ் டன்ஸ்ரன் செல்வரட்ணம் அடிகளார் இச்சபையின் மத்திய சபையால் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இவர் தனது இப்புதிய பணியினை இவ்வருடம் நவம்பர் மாதம் முதலாம் திகதி பொறுப்பேற்றார்.

இறையியலில் கலைமாணிப்பட்டமும், முதுமாணிப்பட்டமும் பெற்றுள்ள இவர், திருவுளச்சபையின் மத்திய சபையில் ஆசியாவுக்கான பிரதிநிதியாகவும், கண்டி திருவுளச்சபை உயர் குருத்துவப் பயிற்சியகத்தின் அதிபராகவும், கண்டி தேசிய குருத்துவக் கல்லூரியின் இறையியல் பீடத்தில் விரிவுரையாளராகவும் கடமையாற்றி வருவது குறிப்பிடத்தக்கது. அருட்பணியாளர் ஜேம்ஸ் டன்ஸ்ரன் அடிகளாரை, திருவுளச் சபையின் குருக்கள், மணத்துறவு ஆண்கள், திருமணத் தம்பதிகள் (இணை உறுப்பினர்கள்) ஆகிய அனைவரும் வரவேற்பதோடு, அவரது பணிசிறக்க வாழ்த்தி நிற்கின்றார்கள்.

இதேவேளை 1998 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் முதல் 2006 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் வரை தனது இரண்டு தவணைக் காலங்களில் திருவுளச்சபையின் இலங்கைக்கான மாகாண அதிபராக் இருந்து பொறுப்புடன் சிறந்த பணியாற்றிய அருட்பணியாளர் லோயிட் சாந்திக்குமார் அடிகளாரை திருவுளச்சபை உறுப்பினர்கள் அனைவரும் வாழ்த்தி நன்றி கூறுகின்றார்கள். புதிய பணிப்பொறுப்பை ஏற்றுள்ள டண்ஸ்ரன் அடிகளாரையும் பணிப்பொறுப்பில் இருந்து விடைபெறும் சாந்திக்குமார் அடிகளாரையும் மன்னா வாழ்த்திப் பாராட்டுகின்றது.

## செபமாலை மற்றும் பெனோ அடிகளார் நாடு திரும்பினர்

## புதிய பணிப் பொறுப்புக்களையும் ஏற்றனர்!



அருட்பணியாளர் ஏ. செபமாலை மற்றும் அருட்பணியாளர் பெனோ அலெக்ஸ்சாண்டர் ஆகியோர் வெளிநாட்டில் தமது உயர் கல்வியை நிறைவுசெய்துகொண்டு அண்மையில் நாடு திரும்பியுள்ளனர். அருட்பணியாளர் ஏ. செபமாலை அவர்கள் இரண்டரை வருடங்களாக அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் உள்ள வோர்டம் (Fordham) பல்கலைக்கழகத்தில் ***ஆன்மீக வழிநடத்தல*** என்னும் கற்கை நெறியை நிறைவுசெய்தார். அத்துடன் நியூயோர்க் நகரில் உள்ள புறோன்ஸ் (Bronx) என்ற இடத்தில் உள்ள புனித கெலனாள் பங்கில் துணைப் பங்குத்தந்தையர்களில் ஒருவராகவும் பணியாற்றினார். இவர் தற்போது வவுனியாப் பங்குத்தந்தையாகவும் வவுனியா மறைக்கோட்ட முதல்வராகவும் பணிப்பொறுப்பை ஏற்றுள்ளார்.

அருட்பணியாளர் பெனோ அலெக்சாண்டர் சில்வா அவர்கள் கடந்த மூன்று வருடங்களாக உரோமை கிரகோறியன் பல்கலைக்கழகத்தில் ***சமூகத் தொடர்புச் சாதனங்கள்*** பற்றிய கற்கை நெறியை நிறைவுசெய்துள்ளார். இவர் தற்போது மன்னார் மறைமாவட்டத்தின் சமூகத்தொடர்பு ஆணைக்குழுவின் இயக்குனராகவும் மன்னார் மறைமாவட்ட சர்வமத அமைப்பின் தலைவராகவும் புதிய பணிப்பொறுப்பை ஏற்றுள்ளார். உயர்கல்வியை நிறைவுசெய்து நாடு திரும்பி புதிய பணிப்பொறுப்புக்களை ஏற்றுள்ள அருட்பணியாளர்களை மன்னா வாழ்த்தி வரவேற்கின்றது.

## மன்னா விநியோகஸ்தர்கள் கவனத்திற்கு!

நாம் எவ்வளவு விரைவாக மன்னாவை அச்சிட்டு பங்குகளில் உள்ள விநியோகஸ்தர்கள் கைகளில் கொடுத்தாலும், அவர்களில் சிலர் உரிய நேரத்தில் அவற்றை வாசகர்களுக்கு கொடுக்காமல் காலம் தாழ்த்திக் கொடுப்பதாக நாம் அறிய வருகின்றோம். எனவே தயவுசெய்து, மன்னா விநியோகஸ்தர்கள் உங்கள் கைகளில் மன்னா பத்திரிகை கிடைத்ததும், அவற்றை கூடிய விரைவில் வாசகர்கள் கைகளில் ஒப்படைக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.- **மன்னா நிர்வாகம்.**

## மன்னார் மறைமாவட்ட அருட்பணித் திட்டமிடல் மாகாநாடு

மன்னார் மறைமாவட்ட அருட்பணி திட்டமிடல் மாகாநாடு எதிர்வரும் டிசம்பர் மாதம் 4ம், 5ம், 6ம் திகதிகளில் மன்னார் மறைக்கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது. "அன்பிய வாழ்வினூடாக கிறிஸ்தவ வாழ்வி[illegible] முதிர்ச்சியை நோக்கி" என்ற மையப்பொருளில் இம்மாநாடு நடைபெறவுள்ளது. இவ்வாண்டைத் தொடர்ந்து வரும் அடுத்த 5 ஆண்டு காலப்பகுதிக்கான அருட்பணித்திட்டமிடலை மேற்கொள்ளும் மாநாடாக இது அமையும்.

அதேவேளை எதிர்வரும் புதிய ஆண்டில் மறைமாவட்டத்தில் செப வாழ்வை ஊக்கப்படுத்தும் வகையில் செயற்திட்டங்கள் தீட்டப்படவுள்ளன. இம்மாநாட்டில் மறைமாவட்டத்தில் பணியாற்றும் குருக்கள், துறவற சபையின் பிரதிநிதிகள், துறைசார் வல்லுனர்கள், ஆணைக்குழுக்களின் பிரதிநிதிகள், பக்திச்சபைகளின் பிரதிநிதிகள், பங்குப் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர். இம்மாநாட்டின் வெற்றிக்காக செபிக்கும்படி இறைமக்கள் வேண்டப்படுகின்றார்கள்.


## வளனகத்திற்கு வாருங்கள்!

### மலிவு விலையில் கிறிஸ்மஸ் வாழ்த்து மடல்கள்!

கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு மலிவு விலையில் கிறிஸ்மஸ் புதுவருட வாழ்த்து மடல்கள், மற்றும் கிறிஸ்மசுடன் தொடர்புடைய ஏனைய பொருட்களை நீங்கள் பெற்றுக்கொள்ளலாம். வளனகத்திற்கு வாருங்கள்! பாருங்கள்!வாங்குங்கள்!


## தாழ்வுபாடு புனித வளனார் பாடசாலை சாதனை!

### 2006ல் முதல் தடவையாக உயர்தர பரீட்சையில் தோற்றி மாவட்டத்தில் முதல்நிலையும் 100% சித்தியும்!

பல சிரமங்களுக்கு மத்தியில் தாழ்வுபாடு புனித வளனார் பாடசாலையில் 2004ல் கா.பொ.த உயர்தர கலைப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. இதில் 2006ல் பரீட்சைக்கு முதற் தடவையாகத் தோற்றி மன்னார் மாவட்டத்தில் முதலாம் இடத்தை இப்பாடசாலை மாணவியான **செல்வி. அருள்நேசன் அனுஜா குரூஸ்** பெற்றுள்ளார். மேலும் மாவட்டத்தின் எட்டாம் நிலையை **செல்வி. செபஸ்ரியான அக்னோ டயஸ்** பெற்றுள்ளார். இவர்கள் இருவரும் **"3 A"** தரம் பெற்று சிறப்பாக சித்தியடைந்துள்ளனர். **செல்வி. சிமியோன் மேரி கிளினரா துரம்** முப்பத்திரண்டாவது தரத்தைப் பெற்றுள்ளார்.

இவர்கள் தமது இந்தக் கல்விச்சாதனையின் மூலம் பாடசாலைக்கும், தாழ்வுபாடு கிராமத்திற்கும் பெரும் புகழைப் பெற்றுத்தந்துள்ளனர். இவர்களின் இந்த வெற்றி பாராட்டுதலுக்கும், பெருமைக்குமுரிய விடயமாகும். இவர்களின் கல்வியை ஊக்குவித்த அனைவருக்கும் சிறப்பாக தற்போதைய அதிபர் திரு. தொ. இருதயராஜா குரூஸ், முன்னாள் அதிபர் திரு. இம்மானுவேல் ரவிக் குரூஸ், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் பாடசாலையின் நிர்வாகத்தோடு தொடர்புடைய அனைவருக்கும் மன்னா தனது மனம் நிறைந்த பாராட்டையும் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்து நிற்கின்றது.



1ம் நிலை பெற்ற
செல்வி அனுஜா குரூஸ்



8ம் நிலை பெற்ற
செல்வி அக்னோ டயஸ்



32ம் நிலை பெற்ற
செல்வி கிளின்ரா துரம்

# மன்னா

**மனப்பொழிவு பதிப்பாசிரியர் பகர்வது**

## செபம்!

## திருச்சபையின் இதயத் துடிப்பு

*இவ்வாண்டு டிசம்பர் மாதம் 4ம், 5ம், 6ம் திகதிகளில் மன்னார் மறைமாவட்ட அருட்பணித்திட்டமிடல் மாநாடு நடைபெற ஏற்பாடாகி உள்ளது. இம்மாநாட்டில் புதிய ஆண்டுக்கான அருட்பணித் திட்டமிடலில் செபவாழ்வு முன்னுருமைப்படுத்தப்பட்டு எதிர்வரும் புதிய ஆண்டு செப ஆண்டாக (The Year of Prayer) மன்னார் மறைமாவட்டத்தில் பிரகடனப்படுத்தப்பட உள்ளது. எனவே செபம் பற்றிய சிந்தனைகளை பகிர்ந்துகொள்வது இங்கே சிறப்பானதாகும்.*

### செபம் – இதயபூர்வமான ஓர் இறையனுபவம்

*காற்றைச் சுவாசிப்பதற்கு யார் கட்டளை தரவேண்டும்? உண்ணுவதற்கு யாரிடமிருந்து உத்தரவு வாங்கவேண்டும்? அன்பு செய்வதற்கு யாரிடமிருந்து ஆணை பெறவேண்டும்? பாசம் காட்டுவதற்கு யார் பரிந்துரைக்க வேண்டும்? அதுபோலதான் செபிப்பதும்! இயல்பான, இனிமையான, இதயபூர்வமான ஓர் இறையனுபவ நிகழ்ச்சியே செபம்.*

*நாம் பெற்றோருடனும், உடன் பிறந்தோருடனும் உறவு கொள்ளுகின்றோம். உறவு இன்றி மனித வாழ்வு இல்லை. உரையாடல் வழியாகவே உறவு வளர்கின்றது. நாம் ஒவ்வொரு நாளும் பெற்றோருடனும், உடன் பிறந்தோருடனும், நண்பருடனும் உறவில் வளர்வது போன்று இறைவனுடனும் உறவில் வளர வேண்டும். இந்த உறவிற்கு அடிப்படையே செபம். இறைவனோடு பேசுவது செபம், இறைவன் பேசுவதைக் கேட்பது செபம்.*

### செபம் – இயேசுவை செம்மையாக்கியது

*இயேசு செப வீரராகத் திகழ்ந்ததை நற்செய்தி நமக்கு நயம்படச் சித்தரிக்கின்றது. இயேசு தமது பணியை தொடங்குவதற்கு முன் பாலைவனத்தில் நாற்பது நாட்கள் செபித்தார். சீடர்களை தேர்ந்தெடுக்கும் முன் செபித்தார். புதுமைகளை செய்வதற்கு முன் செபித்தார். பாடுகள் போன்ற முக்கிய நிகழ்வுகளுக்கு முன் செபித்தார். அதிகாலை வேளையில் தனிமையாகச் செபித்தார். சில சமயங்களில் இரவு முழுவதும் செபித்தார். சிலுவையில் தொங்கும் போதும்கூட செபித்தார். செபத்தின் வழியாகவே இயேசு தந்தை கடவுளுடன் எப்பொழுதும் உறவு கொண்டிருந்தார். இயேசுவினுடைய அறிவு, ஆற்றல், ஆளுமை அனைத்தின் இரகசியமும் செபம்தான். ஆம்! செபம் இயேசுவின் வாழ்வைச் செம்மையாக்கியது, சீர்ப்படுத்தியது.*

### செபம் – புனிதர்களைப் புடமிட்டது

*சாதாரண மனிதர்களை அசாதாரண புனிதர்களாக்கியது செபம்தான். செபத்திலே நிலைத்திருந்து புடமிடப்பட்ட அவர்களின் அனுபவ மொழிகள் அழகானவை. "என்னைப் பொறுத்தமட்டில் இதயம் இறைவனைத் தேடுவது செபம், விண்ணை நோக்கி நம் கண்களைத் திருப்புவது செபம், மகிழ்ச்சியோடு கூடிய அன்பின் கூக்குரலே செபம்" என்கிறார் குழந்தை இயேசுவின் புனித சின்னத் திரேசம்மாள்.*

*"நீ செபத்தை நிறுத்திவிட்டால் தண்ணீரில் இருந்து தரையில் வீசி எறியப்பட்ட மீனுக்கு ஒப்பாவாய்" என புனித ஜோன் கிறிஸ்தோஸ்தம் குறிப்பிடுகின்றார். "ஆண்டவரின் பிரசன்னத்தை உணருவதுதான் செபம். இறைபிரசன்னமே செபத்தின் உறைவிடம்" என்கின்றார் புனித லிகோரியார். "செபிக்க விளைவதே செபம். எவன் நன்றாக செபிக்க அறிவானோ அவனே நன்றாக வாழத்தெரிந்தவன். செபிக்கத் தெரியாதவன் தானாகவே இறந்து விடுகின்றான்" என்கின்றார் புனித அகுஸ்தினார்.*

*இந்தியாவின் தேசத்தந்தை மகாத்மா காந்தி செபம் பற்றிக் கூறும் வார்த்தைகள் நமது கவனத்திற்குரியன. "சமய வாழ்வின் சாரமாக - ஆன்மாவாக செபம் அமைய வேண்டும். மனித வாழ்வின் மையம் செபம். ஏனெனில் செபம் இன்றி எந்த மனிதனும் உயிர்வாழ முடியாது. நான் செபத்தில் தான் மன அமைதியையும், மகிழ்ச்சியையும், ஆற்றலையும் பெறுகின்றேன். செபிக்கின்ற பழக்கத்தை விட்டிருந்தேன் என்றால் நான் பைத்தியகாரனாகியிருப்பேன்."*

### செபம் – திருச்சபையின் இதயத் துடிப்பு

*இறைவனின் அன்புக் குரலுக்கு நமது உள்ளத்தில் இருந்து எழும் பதில் குரல்தான் செபம். இறைவனுடன் நாம் கொண்டுள்ள நட்புறவின் உணர்வுநிலையே செபம். நமது சமூக விழிப்புணர்வு வாழ்வை இறைவனின் திட்டமாகக் காண்பது செபம். திருச்சபை இறைவனின் மறையுடல். செபம் இவ்வுடலின் இதயத்துடிப்பு.*

*காற்று இன்றேல் உயிர் ஒன்றும் வாழாது - இது இயற்கை உண்மை! பற்றி போடாவிட்டால் கடிகாரம் ஓடாது - இது செயற்கை நியதி! எண்ணை ஊற்றப்படாவிட்டால் விளக்கு எரியாது - இது அனுபவ உண்மை! செபம் செய்யாவிட்டால் அருள் வாழ்வு மலராது - இது ஆன்மீக உண்மை! ஆம் செபம் திருச்சபையின் இதயத் துடிப்பு! பணி இன்றி செபத்திற்கு அர்த்தமில்லை! செபம் இன்றி பணிக்கு ஆழமில்லை!*

*"செபத்தில் நிலைத்திருங்கள், அதில் விழிப்பாயிருங்கள். நன்றிகூற மறவாதீர்கள்" (கொலோசேயர் 4: 2)*

**மீண்டும் மறுமடலில் வந்து சந்திக்கும்வரை,**
**அன்புடன், அருட்பணியாளர் நேசன்**
**மன்னா பதிப்பாசிரியர்**



# வாசகர் எண்ணங்கள்



### எந்நாளும் நீ தரும் அமிர்த வார்த்தை



எந்நாளும் நீ தரும் அமிர்த வார்த்தை
அருமருந்தாய் பொன்னாக்கும் எம் வாழ்வை!
மணம் வீசும் மல்லிகையாம் இறைவார்த்தையை
மன்னாவில் மாதந்தோறும் மலரவிடுகின்றாய்.
வார்த்தையை இடைவிடாது வாசிப்பதன் மூலம்
இறைவனின் திருவுளத்தை அறிகின்றோம்.
என்றும் நீ இறைவன் அருளிய வாக்கைக் காவி வர
உனக்காக அயராது உழைக்கும் அனைவரும்
இறை அருள் பெற்று வாழ வாழ்த்துகிறேன்!

*அன்பு வாசகி : எம். லின்ரா,*
*பாலையடிப்புதுக்குளம், வட்டக்கண்டல்.*

### இணையற்ற மன்னா ஈர்த்தது உள்ளத்தை



அன்பு என்ற அரும் பொருளை
ஆர்வத்துடன் தேடித் திரிந்தபோது
இணையற்ற மன்னா பத்திரிகை
ஈர்த்தது எம் உள்ளங்களை!

உன்னை மாதம் ஒருமுறை காண
ஊக்கத்துடன் காத்திருக்கும் நான்
எப்போ மீண்டும் கையில் தவழ்வாய் என
ஏக்கமுடன் காத்திருக்கின்றேன்.



ஐக்கியமாய் எம் மத்தியில் வருவாய்
ஒன்று இரண்டு விடயங்களை அல்ல
ஓராயிரம் விடயங்களை சுமந்து வருகின்றாய்
அவ்விடம் இருந்து இவ்விடம் வரும்போது.

*ம. செ. எட்வட் கெனடி, புனித சூசையப்பர் ஆலயம்,*
*தெனியாய, காலி மறை மாவட்டம்.*

### கூடுதலாக விற்பனையாகும் முதன்மைப் பத்திரிகை!

இனிய மன்னாவே!
எமது நாட்டில் வெளியிடப்படுகின்ற கத்தோலிக்க தமிழ் சஞ்சிகைகள், பத்திரிகைகள் வரிசையில் உள்நாட்டிலும், கடல் கடந்து வெளிநாட்டிலுமாக பயணித்து மறைபரப்பும் ஊடகமாய்த் திகழ்வது நீதான். மிகக் கூடுதலாக விற்பனையாகின்ற பத்திரிகையாகவும் நீ முதன்மை பெற்றுள்ளாய்.

சிறுவர்கள் முதல் பெரியவர்கள்வரை மிக ஆவலோடு படிக்கத் தூண்டும் விதமாக புதிய அம்சங்களோடு பல ஆக்கங்களையும் சுமந்து எம் கரங்களில் தவழ்ந்து மகிழ்விக்கின்றாய். அதிலும் குறிப்பாக அண்மைக்கால உன் இதழ்கள் வழியாக, பிற மறைமாவட்டச் செய்திகள், பொதுநிலையினர், மாணவர்களது திறமை, சாதனைகளைப் புகைப்படங்களுடன் பிரசுரித்து முன்மாதிரிகை காட்டும் புதிய வரவாக மாதாந்தம் எம்மை வலம் வருகின்றாய். மென்மேலும் எம்முள்ளம் கவர்கின்றாய். இவற்றுக்கும் மேலாக இன்னும் இன்னும் புதுப்பொலிவுடன் உன் பணி தொடர, வளர சிறப்புற வாழ்த்துகின்றேன்.

*ஜீ. அல்பேட், பாலையூற்று, திருகோணமலை.*



### சிறிய உள்ளங்களில் இடம்பிடித்த மன்னா!

எம் சிறிய உள்ளங்களிலேயே இவ்வளவு இடம்பிடித்த எம் இனிய மன்னாவே! என் பெற்றோரைவிட, சிறுவனாகிய நான் எப்போது மன்னாப் பத்திரிகை வரும் என்று எதிர்பார்க்கும் வகையில் உன்னில் அமைந்துள்ள விடயங்கள் அமைகின்றன. எனக்கும் என்னைப் போன்ற மாணவர்களுக்கும் அறிவுத்திறனை வளர்க்கும் வகையில் உன்னைத் தொகுத்து வெளியிடும் அருட்பணியாளர் நேசன் அடிகளார் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகளைக் கூறி நிற்கின்றேன். மேலும் எமக்கு ஒளியூட்டும் வகையில் மன்னா தொடர்ந்து வெளிவர வாழ்த்துகிறேன்.

*ஏ. யேசுராஜ் (பிரதாப்), ஆண்டு 7 E*
*புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை,*
*மன்னார்.*

## சிரிக்க சிந்திக்க

ஒருவர் : "பாதர், எனது சைக்கிள் காணாமல் போய்விட்டது, ஆனால் ஆறாவது கட்டளை சொல்லும்போதுதான், நான் அதை எங்கு வைத்துவிட்டு வந்தேன் என்று ஞாபகம் வந்தது."

பாதர் : "கவலைப்படாதே எடுத்தவர்கள் ஏழாவது கட்டளை சொல்லும்போது மனம்மாறிக் கொண்டுவந்து வைத்துவிட்டு போய்விடுவார்கள்."



## கிறிஸ்தவ வாழ்வின் முதிர்ச்சியை நோக்கி...!

### அருட்பணியாளர் அலோசியஸ் பாக்கிய நாதர், அமெரிக்கா

ஒரு பெரியவர், தம் நண்பருடைய இல்லத்துக்குச் சென்றார். பெரியவரை அந்த இல்லத்தில் உள்ள எல்லோரும் வணங்கினார்கள். அங்கு ஐந்து வயதுச் சிறுவன் ஒருவன் நின்று கொண்டிருந்தான்.

"இவன் பெயர் என்ன?" என்று பெரியவர் கேட்டார். நண்பர், "இவன் என் மகன்தான். இவன் பெயர் மலையப்பன்" என்றார். பெரியவர், "தம்பி! நீ பள்ளிக்கூடம் போகின்றாயா? ஏதாவது படி பார்ப்போம்" என்றார். மலையப்பன் அரிச்சுவடி எடுத்து மழலை மொழியால் "அ..ரி" "ஆ..டு" "மா..டு" எ...லி" "ஏ..ணி" என்று எழுத்துக்களைக் கூட்டிப் படித்தான். பெரியவர் "பேஷ், நன்றாகப் படிக்கின்றாய். இந்தா இனிப்பு வாங்கிச் சாப்பிடு" என்று ஒரு இருபது ரூபாய் பரிசு கொடுத்தார்.

அதே பெரியவர் 10 வருடங்களுக்குப் பின் அந்த வீட்டுக்குச் சென்றார். முன்புபோல் எல்லோரும் அவரை வீழ்ந்து வணங்கினார்கள். மலையப்பனும் வணங்கி நின்றான். அவனுக்கு இப்போது வயது 17. பெரியவர் மலையப்பனை அன்புடன் பார்த்து, "அப்பா! மலையப்பா, நீ நன்கு படிக்கிறாயா? ஏதாவது படி" என்றார். மலையப்பன், ஓடி தன் புத்தகத்தைக் கொணர்ந்து படிக்கத் தொடங்கினான்.

"அ்..ரி" "ஆ..டு" "மா..டு!" "எ..லி" "ஏ...ணி" என்று எழுத்தைக் கூட்டித் தடுமாறிக்கொண்டு படித்தான்.

இதைக்கேட்ட பெரியவர் "பேஷ் என்றா கூறுவார்? அவன் அசட்டுத் தன்மையைப் பார்த்துச் சிரித்தார். "அட அறியாமைப் பயலே! மக்கு! பன்னிரு ஆண்டுகளுக்கு முன் படித்ததுபோலவே எழுத்தைக் கூட்டிப் படிக்கின்றாயே! உனக்கு இப்போது வயது பதினேழு ஆயிற்றே? உன் கல்வியில் ஒரு அங்குலம்கூட நீ முன்னேற வில்லையே? இந்த நல்ல குடும்பத்தில் நீ ஏன் பிறந்தாய்? உன்னால் இந்தக் குடும்பம் முன்னேறுமா? நீ பிறவாமல் இருந்தாலே நன்றாக இருக்குமே?" என்று எண்ணிச் சிரித்தார்.

இதுபோல நாம் 10 ஆண்டுகளுக்கு அல்லது 25 ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததுபோல் - வாழ்ந்ததுபோல் நமது கிறிஸ்தவ வாழ்க்கையில் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். காலையில் எழுவதும், கோப்பி குடிப்பதும், செய்தித்தாள் படிப்பதும், வேலைக்குப் போவதும், தொலைக்காட்சி பார்ப்பதும், உண்பதும், உறங்குவதுமாக இருந்தால், இறைவனின் சாயலாகப் படைக்கப்பட்ட நாம் அந்த சாயலைப் பிரதிபலித்து வாழாமல் இருந்தால் வயதில் மட்டுமல்ல அறிவிலும், ஞானத்திலும் வளராமல் இருந்தால் பலர் நம்மைப் பார்த்து சிரிப்பார்கள். ஏன் இந்த பூமியிலே பிறந்தீர்கள் என்பார்கள். நமது கிறிஸ்தவ வாழ்வும் முதிர்ச்சியை நோக்கிய வாழ்வாக அமைய வேண்டும்.

தொல்காப்பியர் கூறுகின்றார், "மாவு மாக்களும் ஜயறிவினவே மக்கள் தாமே ஆறறிவுயிரே" என்று.

ஆறறிவு படைத்த மக்களில் மூன்று பிரிவுகள் உண்டு

1. கீழ்மக்கள் 2. மக்கள் 3. மேன்மக்கள்

***கீழ்மக்கள்*** - மக்களாகப் பிறந்தும் மாக்களைப்போல (மிருகங்களைப்போல) உண்பதும் உறங்குவதும், பொருந்துவதுமாக காலங்கழிப்பவர்கள்.

***மக்கள்*** - மக்கள் பண்பாட்டைப் பெற்று அன்பு இரக்கம், சாந்தம், மன்னிக்கும் மனப்பான்மை ஆகிய நற்குணங்களையுடையவராய் வாழ்பவர்கள்.

***மேன்மக்கள்*** - மக்கள் பண்பாட்டைப் பெற்றதோடு அமையாது, தெய்வத்தன்மை பெற்று, அருள் நிறைந்தவர்களாக, பிறருக்கென்றும் வாழ்பவர்கள்.

அம்மேன்மக்கள் உயிருடன் உலகில் வாழும்பொழுது தமது வார்த்தையாலும், வாழ்க்கையாலும், இறைவனின் சாயலை பிரதிபலித்து வாழ்பவர்கள். அவர்களின் பூத உடம்பு நீங்கிய பின்னும் தமது அளவற்ற ஆன்ம சக்தியால் தொடர்ந்து நன்மை செய்பவர்கள். ஆதலால் இவர்கள் இறந்த பின்னும் ஆண்டவனருளால் அமரத்துவம் பெற்று என்றும் இருப்பவர்கள்.

## எதிர்பாருங்கள்!

அடுத்த மன்னா இதழ் பல வண்ணங்களுடன் கிறிஸ்மஸ் புதுவருட சிறப்பிதழாக வெளிவரவுள்ளது. எதிர்பாருங்கள்



## தென்பகுதிப் பாடசாலைகளில் நடாத்தப்படும்
# கிறிஸ்மஸ் நிகழ்வுகளுக்கு எதிராக அச்சுறுத்தல்

அடையாளம் காணப்படாத குழுவொன்று அண்மைய வாரங்களில் தெற்கில் உள்ள கிறிஸ்தவப் பாடசாலைகளுக்கு அனுப்பியுள்ள மிரட்டல் கடிதத்தில் பாடசாலைகளில் நடைபெறும் கிறிஸ்மஸ் நிகழ்வுகளைப் புறக்கணிக்க வேண்டும் என வேண்டுகோள்விடுத்துள்ளது. இந்தக் கோரிக்கையையும் மீறி பாடசாலைகளில் கிறிஸ்மஸ் நிகழ்வுகள் நடாத்தப்படுமானால் கடுமையான எதிர்விளைவுகளைச் சந்திக்க வேண்டும் என அக்கடிதத்தில் எச்சரிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மற்றும் கொழும்பின் புறநகர்ப் பகுதியில் உள்ள பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதங்களிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகி உள்ளன. ஒரு கடிதத்தில் இதற்கான காரணமும் வெளிப்படையாகவே குறிப்பிடப்பட்டிருந்தது. அதாவது மாணவர்கள் கிறிஸ்மஸ் நிகழ்வுகளை இரத்துசெய்துவிட்டு அதற்காகச் செலவிடும் பணத்தை வடக்கு கிழக்கில் பணியாற்றும் படையினருக்காக தியாகம் செய்ய வேண்டுமெனக் கோரப்பட்டுள்ளது. இந்த அனாமேயக் கடிதத்தினால் சில பாடசாலைகள் ஏற்கனவே தமது கிறிஸ்மஸ் நிகழ்வுகளை இரத்துச்செய்ய தீர்மானம் செய்துள்ளன.

இது விடயம் தொடர்பாக கத்தோலிக்க திருச்சபை சார்பாகக் கருத்துத் தெரிவித்த அருட்பணியாளர் சிறில் காமினி பெனாண்டோ அவர்கள், இந்த அச்சுறுத்தலானது ஜனநாயக உரிமைகளுக்கு எதிரான வன்முறை எனவும் இந்த நாட்டின் மக்கள் சுதந்திரமாக தமது மத நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இது தடையாக உள்ளது எனவும் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த அச்சுறுத்தலைப் பாரதூரமானதாக எடுக்கத் தேவையில்லை எனவும் குறிப்பாக தமது அடையாளத்தை தெரியப்படுத்த அச்சம்கொள்ளும் இப்படிப்பட்டவர்களின் செயல் பற்றி நாம் அதிகம் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை எனவும் தெரிவித்தார்.

## லசாலியன் ஆங்கிலப் பயிற்சிக் கல்லூரியின்
# சான்றிதழ் வைபவம்





லசாலியன் ஆங்கிலப் பயிற்சிக் கல்லூரியில் சான்றிதழ் விழாவானது கடந்த 10.10.2006 அன்று செவ்வாய்க் கிழமை காலை 10.00 மணிக்கு இப்பயிற்சி நெறியின் இயக்குனர் அருட்சகோதரர் பப்ரிஸ் குரூஸ் அவர்களின் தலைமையில் ஆரம்பமானது. இப்பயிற்சி நெறியானது 10. 07. 2006 – 10. 10. 2006 வரை நடைபெற்றது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக அருட்பணியாளர் விக்ரர் சோசை (குருமுதல்வர் - மன்னார்) அவர்களும், சிறப்பு விருந்தினராக திரு. யூட் பிகிராடோ (பிரதிக் கல்விப் பணிப்பாளர் - மன்னார்) அவர்களும் கலந்து சிறப்பித்தனர். ஆரம்ப நிகழ்வாக பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர், பயிற்சிநெறி இயக்குனர் ஆகியோருக்கு மாலை அணிவிக்கப்பட்டது. பின்னர் மங்கள விளக்கேற்றல் நிகழ்வு இடம்பெற்றது. தொடர்ந்து ஏனைய நிகழ்ச்சிகள் அனைத்தும் சிறப்பாக இடம்பெற்றன. இந்நிகழ்வின் இறுதியில் இப்பயிற்சி நெறியை மூன்று மாத காலமும் சிறப்பாகப் பூர்த்திசெய்த மாணவ, மாணவியருக்கு பிரதம விருந்தினரால் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இறுதியாக சிறிய செபத்துடன் இந்நிகழ்வு இனிதே நிறைவுற்றது. நன்றி. *தகவல்: நிகழ்ச்சி ஒழுங்கமைப்புக் குழு.*

## ஆசிய இளைஞர் மாநாடு

நான்காவது ஆசிய இளைஞர் தினம் **(Asian Youth Day IV – Hong Kong)** கடந்த ஜூலை 28 - ஆகஸ்ட் 5ம் திகதி வரை கொங்கொங் நாட்டின் YMCA youth City என்ற இடத்தில் இடம்பெற்றது. ஆசிய நாடுகள் அனைத்திலிருந்தும் ஏறக்குறைய 1000 இளைஞர் யுவதிகள் இதில் பங்கேற்றனர். இலங்கையில் இருந்து 2 குருக்களும் 6 இளைஞர்களும் 1 யுவதியும் என 9 பேர் பங்கெடுத்தனர்.

வடகிழக்கிலிருந்து மன்னார் மாவட்டத்தில் மன்னாரைச் சேர்ந்த திரு. எஸ். சந்திரபோஸ் அவர்கள் கலந்துகொண்டார். இவர் மன்னார் மறைமாவட்ட இளைஞர் ஒன்றியத் தலைவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த இளைஞர் தினத்தின் கருப்பொருள் "இளைஞர் – ஆசியக் குடும்பங்களின் நம்பிக்கை" **(Youth – Hope for Asian families)** என்பதாக இருந்தது. 5வது ஆசிய இளைஞர் மாநாடு 2009ல் அல்லது 2010ல் பிலிப்பைன்ஸ் நாட்டில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## பெண்கள் விழிப்பூட்டல் கருத்தமர்வு

மன்னார் மறைமாவட்ட பொதுநிலையினர் ஆணைக்குழுவின் கத்தோலிக்க பெண்கள் அமைப்பு பிரிவினரால் பெண்கள் வலுவூட்டல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மன்னார், முருங்கன் மறைக்கோட்டங்களிலுள்ள பெண்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தமர்வு கடந்த 2006.10.24 செவ்வாய்க்கிழமை நிலையத்தில் இடம்பெற்றது.

இதற்கு ஒவ்வொரு பங்கிலிருந்தும் நான்கு பெண்கள் வீதம் கலந்து பயன்பெற்றனர். இனிவரும் காலங்களில் இப்பயிற்சியானது பயிற்சியைப் பெற்ற பெண்களாலேயே மேற்கொள்ளப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆசிய இளைஞர் பணியாளர் ஒன்றுகூடல்

ஆசிய இளைஞர் பணியாளர் ஒன்றுகூடல் **(Asian Youth Ministers Meeting)** கடந்த ஓகஸ்ட் மாதம் 5ம் திகதி தொடக்கம் 9ம் திகதி வரை கொங்கொங் நாட்டில் இடம்பெற்றது.

ஆசிய நாடுகள் ஒவ்வொன்றிலுமிருந்து ஒரு இளைஞர், ஒரு யுவதி, 2 குருக்கள் என 4 பேர் மட்டுமே இதில் கலந்துகொண்டனர். இந்நிகழ்விலும் மன்னார் மறைமாவட்டத்தில் இருந்து திரு. எஸ். சந்திரபோஸ் அவர்களே கலந்துகொண்டார்.

ஆசிய இளைஞர்களை எப்படி இறைப்பணிகளில் ஈடுபடுத்தலாம் என்பதைக் குறித்தும் - இளைஞர் எப்படியான பணிகளில் ஈடுபடலாம் என்பதைக் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

- ♣ இளைஞர்களை வழிநடத்தும்போது எந்த முறைகளைக் கையாளவேண்டும்?
- ♣ இதுபற்றி திருச்சபையின் எதிர்பார்ப்பு என்ன?
- ♣ இன்றைய இளைஞர்களின் நிலைப்பாடு என்ன?
- ♣ இளைஞர்களின் எதிர்காலத் திருமண வாழ்வுக்கு திருச்சபை அவர்களை எவ்வாறு வழிநடத்துகிறது? அது போதுமா?

போன்ற கருப்பொருளில் உரைகளும் குழு ரீதியிலான கலந்துரையாடல்களும் இக்கூட்டத்தில் இடம்பெற்றன.

## சிலாப ஆயர் தனது பணிப்பொறுப்பை
# புதிய ஆயரிடம் கையளிக்கின்றார்

சிலாப மறைமாவட்டத்தின் ஆயர் மேதகு பிறாங் மாக்கஸ் பெனாண்டோ ஆண்டகை அவர்கள் தனது ஆயர் பணிப் பொறுப்பினை புதிதாக திருநிலைப்படுத்தப்பட்ட வாரிசு ஆயர் மேதகு வலன்ஸ் மெண்டிஸ் அவர்களிடத்தில் கடந்த ஒக்ரோபர் 28ம் திகதி கையளித்தார்.

இந்த சிறப்பு நிகழ்வையொட்டி இலங்கையின் கத்தோலிக்க ஆங்கில வாரப் பத்திரிகையான மெசஞ்சர் சிறப்பிதழை வெளியிட்டுள்ளது. இதில் ஆயர் பணியிலிருந்து ஓய்வுபெறும் ஆயர் பிராங் மாக்கஸ் அவர்களின் சேவையைப் பாராட்டி பல ஆக்கங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இலங்கையின் சில மறைமாவட்டங்களில் குறிப்பாக அநுராதபுரம், இரத்தினபுரி போன்ற மாவட்டங்களில் ஆயர் வெற்றிடம் ஏற்பட்ட போது அவற்றை நிரப்ப பல மாதங்கள் ஏன் சில வருடங்கள்கூட எடுத்தன. இக்காலதாமதம் பற்பல குழப்பங்களுக்கும், சந்தேகங்களுக்கும் இடமளித்தது. இரத்தினபுரி மறைமாவட்டத்தில் ஆயர் வெற்றிடம் இதுவரையும் நிரப்பப்படவில்லை. இப்படியான ஒரு சூழ்நிலையில் சிலாப ஆயர் அவர்கள் மதிநுட்பத்தோடு தனது பணிக்காலத்தின்பின் அடுத்த ஆயரை முன்னதாகவே திட்டமிட்டு, திருநிலைப்படுத்தி ஆயத்தப்படுத்தி மறைமாவட்ட பணிப்பொறுப்பை புதிய ஆயரிடம் சுமூகமாகக் கையளித்தமை பாராட்டிற்குரியதாகும்.

## திருவழிபாட்டு நாட்காட்டிகள்

மன்னார் மறைமாவட்டத்தில் உள்ள குடும்பங்கள் மத்தியில் விநியோகிக்கப்படுவதற்கான திருவழிபாட்டு நாட்காட்டி வழிபாட்டு ஆணைக்குழுவினால் அருட்பணியாளர் டலிமா அவர்களின் உதவியோடு இம்முறையும் அச்சடிக்கப்படவுள்ளது. ஒவ்வொரு பங்குகளும் தமக்கு எவ்வளவு நாட்காட்டிகள் தேவை என்ற விபரத்தை அறியத்தருமாறு வழிபாட்டு ஆணைக்குழுவின் இயக்குனர் அருட்பணியாளர் கிறிஸ்துநாயகம் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

## 2008ல் இரு திருநாட்களை வத்திக்கான் மாற்றுகின்றது

2008ம் ஆண்டில் புனித வளனார் திருநாளையும், கிறிஸ்து பிறப்பு அறிவிப்புத் திருநாளையும் மாற்றுவதற்கு வத்திக்கான் முடிவு செய்துள்ளது. 2008ம் ஆண்டு புனித வளனார் திருநாள் வழமைபோல் மார்ச் 19ல் கொண்டாடப்படுமாக இருந்தால் அது புனிதவாரத்தின் புதன்கிழமை அன்றும், கிறிஸ்து பிறப்பின் அறிவிப்பு விழா மார்ச் 25 கொண்டாடப்படுமாக இருந்தால் உயிர்ப்புச் செவ்வாய் தினமன்றும் கொண்டாடப்பட வேண்டியிருக்கும். இதனால் வத்திக்கான் பேராலயத்தின் முடிவின்படி 2008ம் ஆண்டு புனித வளனார் திருவிழா மார்ச் 15 என்றும் கிறிஸ்து பிறப்பின் அறிவிப்பு விழா மார்ச் 31 என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## மன்னார் மறைமாவட்ட வழிபாட்டு ஆணைக்குழுவின்
# வழிபாடு பற்றிய கருத்தரங்குகள்

மன்னார் மறைமாவட்டத்தின் வழிபாட்டு ஆணைக்குழுவினால் பங்குகள் தோறும் வழிபாடு பற்றிய கருத்தரங்குகள் நடாத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. மாதத்தின் முதலாவது மூன்றாவது சனிக்கிழமைகளில் இக்கருத்தரங்குகள் நடாத்தப்படும். கருத்தரங்கின்போது உரைகளை வழங்குவதற்காக அருட்சகோதரிகள் மற்றும் பொதுநிலையினரிடமிருந்து மொத்தம் 12 பேர் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளனர். வழிபாட்டு ஆணைக்குழுவின் இயக்குனர் அருட்பணியாளர் கிறிஸ்துநாயகம் அடிகளார் கருத்தரங்குகளை ஒழுங்கமைத்து வருகின்றார்.

## தோட்டவெளியில்
# மது ஆதிக்க விடுதலை மையம் திறப்புவிழா

கடந்த 06.11.2006 அன்று தோட்டவெளியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மது புனர்வாழ்வு மையத் திறப்புவிழா சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக மன்னார் அரசாங்க அதிபர் உயர்திரு எஸ். விஸ்வலிங்கம் அவர்களும் சிறப்பு விருந்தினராக மன்னார் பிரதேச செயலாளர் திருமதி எஸ். ஸ்ரான்லி டிமெல் அவர்களும் மன்னார் குருமுதல்வர் அருட்பணியாளர் எ. விக்ரர் சோசை அடிகளாரும், மன்னார் பங்குத் தந்தை அருட்பணியாளர் தேவராஜா அவர்களும் கலந்து சிறப்பித்தனர். இந்த மையத்தின் இயக்குனராக உள்ள அருட்பணியாளர் வின்சன் பற்றிக் அடிகளார் இந்நிகழ்வை நெறிப்படுத்தினார்.



## மன்னார் சர்வமத அமைப்பின்
# உப அலுவலகத் திறப்பு விழா

கடந்த செப்ரெம்பர் மாதம் 23ம் திகதி மன்னார் சர்வமத அமைப்பின் உப அலுவலகம் ஒன்று மன்னார் பள்ளிமுனை வேளாங்கண்ணி வீதியில் திறந்து வைக்கப்பட்டது. பிரதம விருந்தினராக மன்னார் அரசாங்க அதிபர் உயர்திரு வி. விஸ்வலிங்கம் அவர்கள் கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினராக மன்னார் பிரதேச செயலாளர். திருமதி. ஸ்ரான்லி டிமெல் அவர்களும் யுனிசெப் திட்டமிடல் அலுவலகர் திருமதி. ஜானகி கென்ரிக்ஸ் அவர்களும் கலந்துகொண்டனர். இந்நிகழ்வை அருட்பணியாளர் வின்சென்ற் பற்றிக் அடிகளார் நெறிப்படுத்தியிருந்தார்.

## குருக்களுக்கான வருடாந்த தியானம்

மன்னார் மறைமாவட்ட குருக்களுக்கான வருடாந்த தியானம் கடந்த செப்ரெம்பர் மாதம் 17ம் திகதி தொடக்கம் 23ம் திகதி வரை மன்னார் ஆயர் இல்லத்தில் நடைபெற்றது. கண்டி மறைமாவட்ட ஆயர் மேதகு வியான்னி பெனாண்டோ ஆண்டகை அவர்கள் இத்தியானத்தை நெறிப்படுத்தினார்.

ஆசாரத்திற்குரிய ஜோசப்வாஸ் அடிகளாரின் வாழ்வு, பணி, புனிதத்துவம், தியாகம், பணியார்வம், விசுவாசம் ஆகியவற்றை விளக்கி இன்றைய குருத்துவ பணிகளுக்கு ஜோசப்வாஸ் அடிகளாரை முன்னுதாரணமாகக் காட்டினார்.

ஆயருடைய இந்தத் தியான உரைகள் தமது உள்ளத்தைத் தொட்டதாக பல குருக்கள் கருத்துத் தெரிவித்தனர்.

# பங்குத்தள சங்கதிகள்

## வவுனியாவில் மறைக்கல்வி விழா!

கடந்த 15.10.2006 அன்று வவுனியாப் பங்கில் மறைக்கல்வி விழா பங்குத்தந்தை அருட்பணியாளர் அ. செபமாலை அடிகள் தலைமையில் நடைபெற்றது. மறைக்கல்வி மாணவர்களின், ஆற்றல்கள், திறமைகளை வெளிக்கொணருமுகமாக மறையறிவைப் புகட்டிய ஆசிரியர்களால் வழிநடத்தப்பட்டு சிறப்பாக நெறிப்படுத்தப்பட்ட நிகழ்வாக இவ்விழா அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

மூன்று குழுக்களாக மறைக்கல்வி மாணவர்கள் வகுக்கப்பட்டு, சமய சம்மந்தமான கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. போட்டிகள் ஏற்கனவே நல்லமுறையில் நடாத்தப்பட்டிருந்தமையால் அதற்கான பரிசில்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டன. இறுதி நாள் விழாவில் வெற்றியீட்டிய நாடகம் ஒன்றும் சிறந்த நெறியாள்கையில் அரங்கேற்றப்பட்டது. இதனை மறையாசிரியர்கள் ஒழுங்கமைத்திருந்தனர். நிகழ்வில் யாழ் மறைமாவட்ட அருட்தந்தை லியோ அவர்கள் பிரதம அதிதியாகப் பங்கேற்றார். ஒட்டு மொத்தத்தில் இறை அருளுடனும், ஆசியுடனும் நடைபெற்ற இந்நிகழ்விற்கு பலரது ஒத்துழைப்பும் பங்களிப்பும் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வங்காலையில் கத்தோலிக்க ஆசிரியர் தினம்

கடந்த் 08.10.2006 அன்று ஞாயிறு தினம் வங்காலைப் பங்கில் உள்ள அனைத்து ஆசிரியர்களுக்கும், (ஓய்வூதியம் பெற்ற ஆசிரியர்கள் உட்பட) பங்குத்தந்தை அருட்பணி. ஞானப்பிரகாசம், உதவிப்பங்குத்தந்தை டக்ளஸ் லோகு ஆகியோரின் தலைமையில் சிறப்புத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

மன்னார் ஆயரால் மூத்த குமாரத்தி என்று பாசமாக அழைக்கப்படும் வங்காலைப் பங்குதான் மன்னார் வலயப் பாடசாலைகள் அனைத்திற்கும் ஆசிரிய வளங்களை பெருமளவு அள்ளி வழங்குகின்றது என்பதை நினைக்கையில் உள்ளம் பெருமிதமும் பூரிப்பும் அடைகின்றது. ஆசிரியர்களின் காணிக்கைப் பவனி சிறப்பாக அமைந்திருந்தது. திருப்பலியின்பின் ஆசிரியர்களுக்கான காலை உணவும் ஒன்றுகூடலும் இடம்பெற்றது. வலயக் கல்விப்பணிப்பாளரும், திருக்குடும்ப கன்னியர்களும், இதில் கலந்து சிறப்பித்து ஆசியுரைகள் வழங்கினர். இத்தினம் ஆசிரியர்களுக்கு புதுத்தெம்பையும் உத்வேகத்தையும் அளித்தது.

## வங்காலையில் ஆயர் தலைமையில் முதியோர் சிறுவர் தினங்கள்

வங்காலைப் பங்கில் கடந்த 01.10.2006 அன்று ஞாயிறு காலையில் முதியோர் சிறுவர் தினத்தை முன்னிட்டு ஆயர் தலைமையில் சிறப்புத் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. அந்த நாள் முதியோருக்கும் சிறுவருக்கும் நன்னாளாக இருந்தது. பங்குத்தந்தை அருட்பணி. ஞானப்பிரகாசம், உதவிப்பங்குத்தந்தை அருட்பணி. டக்ளஸ் லோகு ஆகியோரின் வழிகாட்டலில் சிறுவர் அனைவரும் முதியோரை பூத்தெளித்து மாலையிட்டு வரவேற்றனர். அவர்களின் பாதங்களில் விழுந்து வணங்கி ஆசீர் பெற்றனர்.


மாலையில் முதியோருக்கான கலை நிகழ்ச்சிகளும் ஆசிரியர் குழுவினால் கதாகலாட்சேபமும் நடைபெற்றது. அகில இலங்கை ரீதியில் வங்காலை முதியோர் சங்கத்திற்கு கேடயம் வழங்கப்பட்டது. இந்த முதியோர் சங்கத்திற்கு வித்திட்டவர்கள் இளைப்பாறிய அதிபர் எஸ். பாக்கியம் லெம்பேட், இளைப்பாறிய அதிபர் லா. அதிரியான் குரூஸ் ஆகியோராவர்.

ஆயர் தலைமையில் இவர்கள் மூலமாக மன்னார் மறைமாவட்ட முதியோர் சமாசம் உருவாக்கப்பட்டமை பாராட்டுதற்குரியது. இச்சங்கத்தின் அயராத முயற்சியால் முதியோர் சங்கக் கட்டடம் ஒன்றிற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் ஆயர் அவர்களால் நடைபெற்றது. இது வரலாற்றில் இடம்பெறவேண்டிய ஒன்றாக அமைந்துள்ளது. வலயக்கல்விப்பணிப்பாளர் திரு. எம்.. எ. றெவ்வல் அவர்களும் இதில் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

## வங்காலைப் பாடசாலையில் முதியோர் கௌரவிப்பு

முதியோராம் சுவக்கீன் அன்னம்மாளின் பாதுகாவலில் வாழ்ந்துவரும் முதியோருக்கான விழா மன்/ புனித ஆனாள் மத்திய மகா வித்தியாலயத்தில் ஐப்பசி மாதம் 9ம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணியளவில் வித்தியாலய மாணவ மாணவிகளால் கல்லூரி முதல்வர் அருட்சகோதரர் செ. கி. விஜயதாசன் தலைமையில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

(தொடர்ச்சி 15ம் பக்கம்)



## கீரியில் கத்தோலிக்க இளைஞர் தினம்

கத்தோலிக்க இளைஞர் தினத்தை முன்னிட்டு இளைஞர் தினக் கொண்டாட்டமானது கீரி கர்த்தர் ஆலயத்தில் 08.10.2006 அன்று மாலை 8.00 மணியளவில் ஆரம்பமானது. இளைஞர் யுவதிகள் இரு பக்கமும் புடைசூழ தாழ்வுபாடு பங்குத்தந்தை ஞானாதிக்கம் அடிகள், போஷகர்களான அருட்சகோதரி கத்தரின், அருட்சகோதரர் பேனாட் ஆகியோரும் மாலையிட்டு வரவேற்கப்பட்டனர். பங்குத்தந்தையினால் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. திருப்பலியிலே இளைஞர் ஒன்றியத்திற்கு "புனித அன்னை திரேசா" எனும் பெயர் சூட்டப்பட்டது.

திருப்பலி நிறைவு பெற்றபின் திருப்பலியில் கலந்து சிறப்பித்த அனைத்து கீரி வாழ் கிறிஸ்தவ மக்களுக்கும் இளைஞர்களினால் சிற்றுண்டிகள் வழங்கப்பட்டன. பின் இளைஞர்களுக்கான ஒன்றுகூடல் நடைபெற்றது. அதில் எமது பங்குத்தந்தையும், போஷகர்களும் இளைஞர், யுவதிகளுக்கு வாழ்த்துக்களையும், பல நல்ல கருத்துக்களையும் பகிர்ந்துகொண்டனர். பின் மதிய விருந்துபசாரத்துடனும், சிறு விளையாட்டு நிகழ்வுகளுடனும் இவ்விழாக் கொண்டாட்டம் மிகவும் மகிழ்ச்சியாக நிறைவுற்றது.

## உயிலங்குளத்தில் முதியோர் தின விழா

கடந்த ஒக்டோபர் மாதம் 1ம் திகதி உயிலங்குளம் பங்கில் முதியோர் தினம் கொண்டாடப்பட்டது. இவர்களுக்கான சிறப்புத் திருப்பலியை வாழ்வுதய இயக்குனர் அருட்பணி பெப்பி சோசை அடிகளாரும், உயிலங்குளப் பங்குத்தந்தை வசந்தகுமார் அடிகளாரும் இணைந்து சிறப்பித்தார்கள்.

திருப்பலியைத் தொடர்ந்து உயிலங்குளம் பாடசாலை மாணவர்களால் கலை நிகழ்வுகள் நடாத்தப்பட்டன. தொடர்ந்து அன்பளிப்புகளும், காலையுணவும் வழங்கப்பட்டது. இவர்களுக்கான அன்பளிப்புகளை உலக தரிசன நிறுவனத்தாரும் (World Vision) குடும்ப நலப் பணியகத்தாரும் வழங்கி முதியோரை மகிழ்வித்தனர். இந்நிகழ்வில் 75ற்கும் மேற்பட்ட முதியோர் கலந்துகொண்டு நிகழ்வைச் சிறப்பித்தார்கள். (தகவல்: செ. சசி ஸ்ரெலா, காத்தான்குளம்.)



## உயிலங்குளத்தில் மறைக்கல்வி வார நிகழ்வுகள்

உயிலங்குளம் பங்கின் மறைக்கல்வி வார நிகழ்வானது கடந்த 01.10.2006 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. சிறப்பு அம்சமாக ஒவ்வொரு துணை ஆலயங்களிலும் *பெற்றோரே பிள்ளைகளின் முதல் மறையாசிரியர்* என்ற கருப்பொருளிலான பதாதைகள் போடப்பட்டு பங்குத் தந்தையின் அனுசரணையின்கீழ் பங்கின் நிரந்தர மறைவாழ்வு பணியாளர்களான திரு. சவிரி, திரு. செபஸ்ரியாம்பிள்ளை ஆகியோரால் பெற்றோர், பிள்ளைகளுக்கான கருத்தமர்வு நடாத்தப்பட்டது.

சிந்தனைக்கென இறைவார்த்தைப் பகுதிகள் அச்சிட்டு வழங்கப்பட்டன. தொடர்ந்து விவிலிய விளையாட்டுக்களும் நடாத்தப்பட்டன. இறுதியாக 08.10.2006 அன்று எமது பங்குத் தந்தையால் சிறப்புத் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. அதனை தொடர்ந்து கலை நிகழ்வுகளும் நடாத்தப்பட்டன. விவிலிய விளையாட்டுக்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன. இந்நிகழ்வானது பிள்ளைகளின் மறையறிவு வளர்ச்சிக்கு ஒரு உந்துசக்தியாக அமைந்தது.

## கண்டி அம்பிட்டியாவில் நடைபெற்ற
# கத்தோலிக்க தொழில் துறைப்பணியாளர்களுக்கான தேசியக் கருத்தமர்வு

கத்தோலிக்க தொழில்துறைப் பணியாளர்களுக்கான தேசியக் கருத்தமர்வு (National Seminar for Catholic Professionals) கடந்த செப்ரம்பர் மாதம் 15ம் திகதி தொடக்கம் 17ம் திகதி வரை கண்டி அம்பிட்டியா தேசியக் குருத்துவக் கல்லூரியில் நடைபெற்றது. இந்தக் கருத்தமர்வை தேசிய கத்தோலிக்க மறைபரப்புப்பணிகள் ஆணைக்குழு ஒழுங்கு செய்திருந்தது. (தொடர்ச்சி 15ம் பக்கம்)



மன்னார் மறைமாவட்டத்தில் இருந்து இக்கருத்தமர்வில் பங்குகொண்ட தொழிற்துறைப் பணியாளர்கள்



# நீங்கள் சாக மாட்டீர்கள்



## இறந்த விசுவாசிகளை நினைவுகூரும் நவம்பர் மாதச் சிந்தனைக் கட்டுரை

அருட்திரு. ஜெயந்தன் அ.ம.தி

மரணம் தினமும் கேள்விப்படும் விடயமாகிவிட்டது. சாவு தினமும் சந்திக்கும் நிகழ்வாகிவிட்டது. இறப்பு நிதமும் திகிலூட்டும் அனுபவமாகிவிட்டது. திரும்பும் திசையெல்லாம் மரண ஓலம். மணித்தியாலச் செய்தியெல்லாம் வன்முறை மயம். "அகாலமரணமானார்" செய்தியே என்றும். "அன்னார், இன்னாரின் பாட்டனாவார், இன்னாரின் பூட்டனாவார்…." என மரண அறிவித்தல் கேட்க ஆசையாக இருக்கிறது. "காவோலை விழ குருத்தோலை சிரித்த" காலமெல்லாம் மங்கலாகிப்போக குருத்தோலைகள் வெட்டி சாய்க்கப்பட காவோலைகள் கண்ணீர் வடிக்கின்றன.

சாவுக்கடலிலிருந்து வேறொரு மாய உலகிலேனும் சஞ்சரிக்க உள்ளம் விரும்புகிறது. ஜனரஞ்சக பொழுதுபோக்கில் நிஜத்தை மறந்து நிழலுலகிலேனும் சிரஞ்சீவியாக வாழ மனது துடிக்கிறது. எதிரிகளுக்கும், கத்திகளுக்கும், குண்டுகளுக்கும் இறக்காத கதாநாயகனுடன் எம்மையும் இணைத்து அடையாளப்படுத்தி 2 மணித்தியாலமேனும் இறப்பில்லாத உலகில் உலாவர திரை ஒரு வடிகாலாகின்றது. மாயத்திரையே! நிழல் உலகே! உனக்கு நன்றி. அந்த வகையில் அனைத்து எதிர்மறைகளின் மத்தியிலும் திரை ஒரு கைதட்டலை தனதாக்கிக் கொள்கிறது.

சாவு ஒரு திகில். சாவு ஒரு புதிர். சாவு ஒரு பலம். சாவு ஒரு திண்ணம். உயிருக்கு பிறப்பு நிச்சயமோ இல்லையோ இறப்பு நிச்சயம். – (பிறப்பும் உற்பத்தியும் ஒன்றல்ல) ஆக சாவு ஒரு திண்ணம். சாவு ஒரு பயங்கரம். மண்டை எவ்வளவுதான் காரண காரிய ரீதியில் நியாயம் கற்பித்தாலும் மரண பயங்கரத்திலிருந்து வெளிவந்தவர்கள் பற்றி எனக்குத் தெரியாது. – (எனக்குத் தெரியாது என்பதும் எவருமில்லை என்பதும் ஒன்றல்ல) மாண்டவர் மீண்டிலர். சாவு எப்படியிருக்கும்? சாவு அனுபவம் என்ன? அதன் பிற்பாடு எப்படியிருக்கும் என ஆய்வுகூட அவதானிப்புகளோ பரிசோதனை முடிவுகளோ எதுவும் இல்லை. அது இன்னும் புரியாத புதிராகவே இருக்கிறது. உண்பதும் உழைப்பதும் இயங்குவதும் சாவிற்கஞ்சியே. அந்த வகையில் சாவே இயக்க சக்தி, இயற்கைச் சக்தி. சாவே பலம். என்றோ ஒரு நாள் உயிரும், உடலும் தோற்றுப்போகிறது. உடற்பலமும் முடிவிற்கு வருகிறது. சாவே வெல்கிறது. சாவு ஒரு பலம் வாய்ந்த உண்மை.

உயிரிகளின் உற்பத்தியில் இன்று பலபடி முன்னேறி வெற்றி பெற்றிருக்கும் விஞ்ஞானம் சாவின் முன்னால் இன்னும் வாய்ச்சவாலோடுதான் நிற்கிறது. மரணத்தை வெல்லும் மார்க்கத் தேடலில் இன்னும் அது பயணிக்க வேண்டிய பரப்பு விசாலமானது. மருந்து மாத்திரைகள் ஏதோ மரணத்தை சற்று பின்போடப் போதுமானதாக இருக்கின்றதே யொழிய மரணக்கடலை நீந்திக்கடக்க மார்க்கமாகவில்லை. கைவசம் இருக்கும் விஞ்ஞானங்களையும் வசதிகளையும் பயன்படுத்தி கடைசி 75, 80 வயதுவரை மூச்சுக்காற்றை உடலோடு ஒட்ட வைத்துக் கொண்டாலே போதும் என மனித இனம் மல்லுக்கட்டி நிற்கின்றது.

மரணத்தைவென்று விட்டால் "இறைவனே" கேள்விக்குறியாகிவிடும் என்கின்றனர் ஒரு சாரார். சாவு வெற்றிகொள்ளப்பட்டு விட்டால் மனித உயிரின் பூரண கட்டுப்பாடும் மனித கரங்களுக்குள் வந்துவிடும் என்கின்றனர் வேறு சாரார். சிரஞ்சீவி ஔடதத்தை அடைய மனித விஞ்ஞானங்கள் வீறு நடைபோடுகின்றன என நம்பிக்கை தெரிவிப்போர் இன்னும் சிலர். அப்படியான மெஞ்ஞான மருந்தொன்றை மனிதனான கிறிஸ்துவிலே கொண்டிருக்கின்றோமே என்கின்றனர் விசுவாசிகள். வாழ்வு மாறுபடுகின்றதேயன்றி அழிக்கப்படுவதில்லை என்பது அவர்கள் நம்பிக்கை. மரணத்தை தற்காலிகமாக அல்ல நித்தியத்திற்கும் நிறுத்தும் மார்க்கம் கிறிஸ்துவிலே உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. இவ்வுலக இயலாமைகளும், இல்லாமைகளும் தீர்ந்து இயற்கை இயற்பியல் வரையறைகளைக் கடந்து மனிதன் சிரஞ்சீவியாக வாழ வழி இருக்கின்றது. வாழ்வும் வழியும் உயிரும் ஒளியுமான கிறிஸ்துவே அந்த மெஞ்ஞானம். "இறைவன் மாண்டுவிட்டான்" என நாஸ்தீகம் கற்பித்துக் கொண்டிருந்த நீட்ச்சேயின் கல்லறையை உயிர்த்த கிறிஸ்து கடந்து செல்கின்றார்.

கண்ணுக்கு கவர்ச்சியாகத் தோன்றிய மரத்திலிருந்து வந்தது சாவு. கடந்து செல்கின்றவர்கள் அருவருப்பைப் பார்த்துவிடக்கூடாது என பார்வையை மறுபக்கம் திருப்பிக் கொள்ளுகின்ற அலங்கோல மரத்திலிருந்து வந்தது வாழ்வு. பசுமையான ஏதேன் நடுமரத்திலிருந்து வந்தது சாவு. பாலையான கல்வாரி நடுமரத்திலிருந்து வந்தது வாழ்வு. பசுமரத்திலிருந்து சாவுவர பட்டமரத்திலிருந்து வாழ்வு வந்தது. செழுமையிலிருந்து தண்டனை வர, இங்கு கல்வாரியில் தண்டனையிலிருந்து விமோசனம் வந்தது. "*பறித்துச் சாப்பிடுங்கள்*" என்ற வாசகம் மரணம் கொண்டுவர "*வாங்கி உண்ணுங்கள்*" நித்தியம் கொண்டு வந்தது.

"ஆண்டவரே நீர் இங்கே இருந்திருந்தால் என் தம்பி இறந்திருக்க மாட்டான்" – மார்த்தாள் மாரடித்து அழுகின்றாள். ஆண்டவரின் உடனிருப்பில், பிரசன்னத்தில் சாவு நெருங்காது என விசுவாச அறிக்கை செய்கின்றாளா? அல்லது ஆண்டவரைப் பிரிந்திருந்தாலே மரணம்தான் என அடையாளப்பொருளில் பேசுகின்றாளா? கடலுக்கும் காற்றுக்கும் அலைக்கும் புயலுக்கும் பரிச்சயமாயிருந்தவர்கள் "ஆண்டவரே சாகப்போகிறோம்" என அலறுகிறார்கள். உறங்கிக் கொண்டிருந்தவர் உறுதியளிக்கிறார். ஆண்டவருடன் மிக நெருக்கமாக இருக்கும்போதே யோபு துன்பச் சாகரத்தில் மூழ்கிப் போகிறார். ஆண்டவருக்கு உவப்பாக வாழ்ந்து கொண்டிருக்கும்போதே அவர் பிரிவுகளினாலும் வேதனைகளினாலும் பரீட்சித்துப் பார்க்கப்படுகின்றார்.



"அருள் மிகப் பெற்றவள்" ஆண்டவரை ஈன்றவள் தன் மைந்தன் கடந்து வென்ற கல்லறைச் சாவை தவிர்த்துக்கொண்டவளல்ல. மரணம் அவளுக்கு விதிவிலக்கானதல்ல. சீரிய பந்தயத்தை வெற்றிகரமாக ஓடி முடித்தவள். "நன்று நன்று நம்பிக்கைக்குரிய நல்ல ஊழியனே உன் தலைவனின் மகிழ்ச்சியில் பங்குகொள்" என மரணத்தைக் கடந்து சம்பாவனை பெற்றுக் கொண்டாள்.

விசுவாசக் கண்களுக்கு சாவு வெளிச்சமாகத் தெரிந்தாலும் நடைமுறையில் ஒவ்வொரு பிரிவும் வலியின் சுவடுகளையே விட்டுச் செல்கிறது. இறப்பினால் ஏற்படும் இழப்பு, ஏக்கம், வெற்றிடம், சோகம், பிரிவு அத்தனையும் வெறும் தற்காலிகமானதுதான் என விசுவாசி உறுதியாக நம்பினாலும்கூட நெஞ்சத்துக்கு நெருக்கமானவர்களின் பிரிவு காரணகாரிய விஞ்ஞானங்களைத் தாண்டி வாட்டுகின்றது, வருத்துகின்றது, கொல்லாமல் கொல்லுகின்றது.

அந்த "வருத்துதல் உணர்வு" நாம் அன்பு செய்வதை அன்பு செய்யப்படுவதை உயிரின் அடிநாதமாகக் கொண்டிருக்கின்றோம் என்பதை நிரூபிக்கப் போதுமானதல்லவா. மனிதனை அவன் மனிதத் தன்மையில் இருந்து துண்டாடிப்பிரித்து வெறும் தர்க்க சாஸ்திர வஸ்து/ உயிரியாகப் பார்க்கின்றவர்கள் தம் அன்பரின் பிரிவிலே பரிதவித்து அழுகின்றபோது அவர்களின் அந்தரத்து சாஸ்திரங்கள் அர்த்தம் கெட்டுப் போகின்றன. அவற்றின் அத்திவாரம் சிதைந்து போகின்றது. மனிதன் வெறும் மண்ணுக்கல்ல விண்ணுக்காகவும் படைக்கப் பட்டவன் என்பதை ஏற்றுக்கொள்ள மறுப்போரும்கூட "ஏதோ ஒன்று இருக்கிறது" என விசுவாச உச்சாரணம் ஒன்றை உச்சரித்துக் கொள்கிறார்கள்.

எம்மிடமிருந்து பிரியாவிடை பெற்றவர்களை அல்லது எமக்கு முன்பாக பயணம் வைத்தவர்களை நினைவுகூருகின்றோம். சிறப்பாக நவம்பர் மாதத்தில் நினைவு கூறுகிறோம். மண்ணுக்கு கையளித்த கல்லறையை தரிசிக்கின்றோம். பழைய நினைவுகளை புதுப்பிக்கின்றோம். கண்ணீரோடு சம்பாசிக்கின்றோம். நிரவப்படாத இடைவெளியைப் பற்றி அவர்களிடம் எடுத்துச் சொல்லுகின்றோம். அவர்களின் அன்பின் தாற்பரியத்தை அதன் கனாகனப்பை அறிக்கை - யிடுகிறோம். உறங்கிக்கொண்டிருப்பவர்கள் பதில் கூற மாட்டார்களேயொழிய அவர்களால் அதைப் புரிந்துகொள்ள முடியும். எம்மோடு உரையாடமாட்டார்களேயொழிய எம் உரையாடலை, உறவாடலை ஏற்றுக்கொள்ள முடியும். எம் அன்பை அதன் ஆழத்தை அதன் அகலத்தை அவர்கள் அறிந்துகொள்ளுவார்கள்.

அவர்கள் மெய்ஞான ஒளியில் ஏலவே இணைத்துவிட்டிருந்தால் எமக்காக, இவ்வுலகிற்காக இறைவனிடம் இரந்து வேண்டுவார்கள். இன்னும் இணைய வேண்டியிருந்தால் எம் செப உதவியை, எம் சீரான ஆன்மீகத்தை எதிர்பார்ப்பார்கள்.

கிறிஸ்தவ விசுவாசிகள் எப்பொழுதும் தனியன்களாக அல்லாமல் குழுவாக மீட்கப்பட்டவர்கள். இறந்து இறைவனில் கலந்தோர் இருப்போருக்காகவும், இருப்போர் இறைவனில் இணையக் காத்திருப்போருக்காகவும் செபிக்கிறார்கள். ஆளுக்காள் மீட்பின் உறுதுணையாகின்றார்கள்.

நவம்பர் மாதம் இறந்தோரை நினைவுகூரும் மாதம் மாத்திரமல்ல அது உயிர்ப்பை, உயிர்ப்பு ஒளியை, நித்திய வாழ்வை, முடிவில்லா வாக்குறுதிகளை நினைவூட்டும் மாதமும்தான். அன்பரின் அன்பையும் அருமையையும் சிறப்பாக நினைவுகூரும் மாதம். எம் சொந்த பயணத்தின் முக்கிய தரிப்பாகிய மரணத்தை தியானிக்க வழங்கப்பட்டிருக்கின்ற சந்தர்ப்பமாதம்.

# பொன்விழாக்காணும் திருக்குடும்ப அருட்சகோதரிகள்



"என்னைப் பின் செல்" என்று கூறி இறையாட்சிப் பணிக்குத் தம் சீடரை அழைத்த இறைவன் இற்றைக்கு 50 ஆண்டுகட்கு முன்னர் எமது சகோதரிகளான பேணாட், வேபியன், மரியறோசா, வுளோறன்ஸ், பெற்றோணிலா, வெலிஷியா, டனியலா, லில்லி றீற்றா, கனிஸ், அக்னஸ்மாறி, அனக்கிளற், பிரான்சிஸ்கா, பொஸ்கோ, கொஸ்கா, மெற்றில்டா, பார்பரா ஆகியோரை அழைத்து, திருக்குடும்ப சபை என்னும் பாரிய விருட்சத்தில் மணம்பரப்பும் மலர்களாக இணைத்தார். தமது இனிமை ததும்பும் இளமையை இறைவனுக்கு அர்ப்பணித்த இவர்கள் "முன்னேறிச் செல்லுங்கள்" எனும் சபை நிறுவுனரின் அருள்மொழிகளுக்கு ஏற்ப இறையன்பிலும், பிறரன்பிலும், அர்ப்பண வாழ்விலும், பணியிலும் ஆர்வத்துடன் ஈடுபட்டு உழைத்து வருகின்றனர்.

"அர்ப்பணித்தேன் இறைவா என்னை" என்று கூறி இறைபாதம் சரணடைந்த இவர்களது வாழ்வும், பணியும் அன்றுதொட்டு இன்றுவரை இறைவனையே மையமாகக் கொண்டதாகவும், அனைவருக்கும் எடுத்துக்காட்டானதாகவும் அமைந்துள்ளது. இவர்கள் அனைவரும் நாட்டின் பல்வேறுபட்ட இடங்களிலும், பல்வேறுபட்ட நிலைகளிலும், பல்வேறுபட்ட பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். கல்விப்பணி இவர்களில் அனேகரது முதன்மையான் பணியாயிருந்த அதேவேளை ஏனையோர் சபை தம்மிடம் வேண்டிநின்ற அனைத்துப் பணிகளிலும் முழுமனதுடன் தம்மை அர்ப்பணித்து நின்றனர். இன்று இவர்கள் அனைவரும் பல்வேறுபட்ட பணிகளிலும் தம்மை அர்ப்பணித்து நிற்கின்றனர்.

இன்னும் விசேடமாக "உலகெங்கும் சென்று நற்செய்தியை அறிவியுங்கள்" எனும் இறைமகனின் வார்த்தை இதயத்தில் ஒலிக்க "இதோ வருகிறேன்" எனப்பதிலளித்து அருட்சகோதரிகளான கனிஸ், பிரான்சிஸ்கா ஆகியோர் இந்திய உபகண்டத்திலும் அருட்சகோதரி. லில்லிறீற்றா தென் ஆபிரிக்காவிலும் மறையறிவிப்புப் பணியாற்றிவருகிறார்கள். இடம், காலநிலை, மொழி போன்ற எவையும் இவர்களது புணியார்வத்திற்கு தடைபோடவில்லை. இறையரசுப்பணி ஒன்றையே தம் குறிக்கோளாகக் கொண்டு அவ்விடங்களிலெல்லாம் மறையறிவிப்பு பணிக்கு முற்றிலுமாக தம்மை அர்ப்பணித்து நிற்கின்றனர். மற்றும் அருட்சகோதரி அனக்கிளற் உரோமாபுரியில் எமது தலைமையகத்தில் குழுத்தலைவியாகத் திறமையுடன் பணியாற்றி வருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவர்களுள் அருட்சகோதரிகளான அக்னஸ் மாறி, பார்பரா, பிரான்சிஸ்கா, கொஸ்கா ஆகியோர் மன்னார் மாவட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள். அதுமட்டுமல்ல இம்மாவட்டத்தின் உயர்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் அயராது உழைத்தவர்கள்.

மற்றும் அருட்சகோதரிகளான வெலிஷியா, பொஸ்கோ, மெற்றில்டா, பேணாட், டனியலா ஆகியோர் மிக நீண்ட காலமாக மன்னார் மாவட்டத்தின் கல்விப்பணியில் ஈடுபட்டதோடு இளைஞர் பணி, பக்திச்சபைகளை நெறிப்படுத்தல், அருட்சாதன ஆயத்தம், மன்னா விநியோகம், அன்பிய ஊக்குவிப்பு போன்ற பணிகளிலும் மற்றும் தலத்திருச்சபை தம்மிடம் வேண்டிநின்ற அனைத்து விதமான பணிகளிலும் தம்மை ஈடுபடுத்தி உழைத்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. விசேடமாக அன்றைய கால இடப்பெயர்வுகள், நாட்டுப் பிரச்சனைகளின்போது மக்கள் மத்தியிலிருந்து அவர்களுக்கு ஆறுதலளித்து, உறுதியூட்டியதோடு அனைத்து வழிகளிலும் அவர்களுக்குப் பக்கபலமாயிருந்துள்ளனர்.

இவ்வாறாக எம் சகோதரிகளான பொன்விழா நாயகிகள் அனைவரும் எமது நிறுவுனரின் பொன்மொழியான "உங்கள் ஓட்டத்தைத் தடைசெய்யக்கூடியது ஒன்றுமில்லை" என்பதற்கேற்ப அன்றைய இளமைக்காலத் துடிப்புடனும், ஆர்வத்துடனும், தம்மிடம் வேண்டிநிற்கும் பணிகள் எப்படிப்பட்டவையாய் இருந்தபோதிலும், எத்தகைய இடர்வந்து பணியின் பாதையில் குறுக்கிட்ட வேளையிலும், களைக்காது, சளைக்காது அனைத்திலும் தம்மைக் கையளித்து நின்கின்றனர். இவர்களது துடிப்பான, வீரத்துவமான அர்ப்பணவாழ்வும், பணியார்வமும், பணிகளை முன்னெடுத்துச் செல்லும் திறனும் இன்றைய இளம் துறவிகளுக்கு எடுத்துக்காட்டாய் அமைந்துள்ளன. இன்னும் பல்லாண்டுகாலம் இவர்களது பணி சிறக்கவும், உடல், உள, ஆன்மீக நலன்களை இறைவன் இவர்களுக்கு நிறைவாய் அளிக்கவும் அருள் வேண்டி மன்னா சார்பாக எம் வாழ்த்துக்களையும் அளித்து நிற்கின்றோம்.

அருட்சகோதரி. கனிஷியஸ், தி.கு.க.

# சிறுவர் பொழிவு




## எஜமானுக்குப் புத்தி புகட்டிய கழுதை
### - சிறுவர் சிறுகதை -

கழுதை ஒன்று தன் எஜமானரின்மேல் மிகவும் விசுவாசமாய் இருந்தது. எப்பொழுதும் அவனது அன்பை நினைத்து மகிழ்ந்தது. காரணம் அந்த எஜமான் அதற்கு தினமும் நல்ல உணவு கொடுத்து நல்ல முறையில் பராமரித்ததுதான். உடலும், உள்ளமும் பூரிப்படைந்ததால் கழுதை நல்ல திடகாத்திரமாய் இருந்தது. அதனால் எஜமானன் கொடுத்த அத்தனை வேலைகளையும் திறம்படச் செய்ய முடிந்தது.

வருடங்கள் பல சென்றன. இப்போது அது வயது முதிர்ந்த கழுதை. அதனால் முன்புபோல் எந்த வேலையையும் செய்ய முடியவில்லை. அது தெரிந்தும் எஜமானன் அதை சும்மா விடவில்லை. இடுப்பொடிய வேலை வாங்கினான். அது நடக்க முடியாமலோ சுமைகளைச் சுமக்க முடியாமலோ துவண்டு சரியும்போதே அடி அடியென்று அடித்தான். சரியான உணவும் அதற்குக் கொடுப்பதில்லை. சரியான பராமரிப்பும் இல்லை. கழுதை தன் தலையெழுத்தை எண்ணி அழுதது. இந்தப் பாவியிடமிருந்து எனக்கு விடுதலை கிடையாதா! என்று நினைத்து நினைத்து அழுதது. ஆனால், அந்த எஜமானனோ, அந்தக் கிழட்டுக் கழுதை சாகும்வரை அதை வைத்தே வேலை வாங்குவது என்ற முடிவிலிருந்தான். அவன் ஒரு மட்பாண்டத் தொழிலாளி. களிமண்ணால் பல்வேறு அளவுகளில் கலைநயத்தோடு விதம் விதமான மட்பாண்டங்கள் செய்வான். அவற்றை ஏராளமாகக் கழுதையின்மேல் ஏற்றி சந்தைக்குக் கொண்டு சென்று விற்று பணம் சம்பாதிப்பான்.

ஒரு நாள் அந்தக் கழுதையின் முதுகில் ஏராளமான மட்பாண்டச் சுமையை ஏற்றினான். அவன் அந்தக் கழுதைக்கு சரியாக உணவுகூடக் கொடுக்கவில்லை. அந்தப் பெருஞ்சுமையைத் தாங்கும் உடல் வலுவும் அதனிடம் இல்லை. அதனால் சுமையை வைத்ததும் அது நிற்க முடியாமல் தள்ளாடியது. எஜமானன் அதைப் பொருட்படுத்தாமல் கழுதையை சந்தையை நோக்கி ஓட்டினான். கழுதை கண்ணீர் விட்டவாறு இங்கும் அங்கும் ஆடி ஆடி நடந்து சென்றது. காலையில்கூட வயிற்றுக்கு உணவு கொடுக்கவில்லை. தண்ணீர்கூட சரியாக அவன் கொடுக்கவில்லை. முதுகிலோ பெருஞ்சுமை. தள்ளாத வயது. ஒரு மைல் தொலைவு நடப்பதற்குள் கழுதைக்கு நாக்கு வரண்டுவிட்டது. "கிர்.... கிர்......கிர்!" என்று கனைத்தபடி அது நடந்தது. தொடர்ந்து அதனால் நடக்க முடியவில்லை. ஓரிடத்தில் பள்ளம் இருப்பது தெரியாமல் காலை வைத்துவிட தடால் என்று தடுமாறி கீழே விழுந்தது கழுதை. அதன் முதுகில் ஏற்றப்பட்டிருந்த மட்பாண்டங்கள் சரிந்து, அருகில் இருந்த பாறையின் மேல் விழுந்தன. அடுத்த வினாடி.... அத்தனை மட்பாண்டங்களும் நொறுங்கிச் சிதறின. ஒரு மட்பாண்டம்கூட உருப்படியாகத் தேறவில்லை. எஜமானனுக்கு வந்ததே கோபம். அருகிலிருந்த புளிய மரத்திலிருந்து ஒரு கிளையை ஒடித்தான்.



கழுதையின் மேல் சுளீர்... சுளீர் .... என்று அடித்தான். "முட்டாள் கழுதையே! உனக்கு அறிவில்லையா! நாசமாய்ப்போன கழுதையே! என் பிழைப்பையே இன்று நாசமாக்கி விட்டாயே. உன்னை ... என்று கத்திக்கொண்டே மீண்டும் அதை அடிக்கக் கிளையை ஓங்கினான். அப்போது – 'நிறுத்து' என்றது கழுதை. "நிறுத்தவா? நீ செய்த வேலைக்கு அவ்வளவு சீக்கிரம் நிறுத்த முடியுமா? உன்னைக் கொன்றுவிட்டுத்தான் மறுவேலை!" என்றான் எஜமானன்.. "என்னை எதற்காகக் கொல்லப்போகின்றாய்?

"உன் கவனமின்மை... அதனால் எனக்கு ஏற்பட்ட நஷ்டம்..... அதற்காகத்தான் உன்னைக் கொல்லப்போகின்றேன்!

"இந்த நஷ்டம் ஏற்பட்டது யாரால்?"

"உன்னால்தான் முட்டாள் கழுதையே!" "எப்படி?"

"கடமையில் கவனமின்மை. கீழே பள்ளம் இருப்பதை நீ பார்த்து நடந்திருந்தால், இன்று இந்த நஷ்டம் ஏற்பட்டிருக்காது!"

"நீ சொல்வது தவறு. இந்த நஷ்டம் ஏற்பட்டதற்கு என் கவனமின்மை காரணமல்ல. உன்னுடைய சுயநலம்தான் காரணம். அதாவது நீதான் காரணமென்கிறேன்!" "என்ன, நானா?" "ஆமாம்! உனக்கு எப்படியாவது நான் உழைத்துக்கொண்டே இருக்க வேண்டும். ஆனால், நான் எப்படிப் போனால் உனக்கென்ன?... எனக்கு மூன்று வேளையும் வயிற்றுக்கு உணவு கொடுக்கின்றாயா? என்று முதலில் சொல்!"எஜமானன் அப்படியே நின்றான். "சரியான உணவும் முறையான பராமரிப்பும் செய்தாயா? என் விஷயத்தில் இவை எதுவும் இல்லாவிட்டால், என் உடலில் எப்படி வலு இருக்கும்? என்பதை சிறிதளவாவது யோசித்தாயா? நீ எது செய்யாவிட்டாலும், நான் உழைத்துக்கொண்டே இருக்க வேண்டும். இல்லாவிட்டால் என்னைக் கொன்றுவிடுவாய் அப்படித்தானே?" எஜமானன் வெட்கப்பட்டுத் தலை குனிந்தான்.

*ச. நி. சிந்துஜா, சூரிய கட்டைக்காடு, நானாட்டான்.*

# கவிதைப் பூக்கள்

## கொடி!

வாளெடுத்தவன் சாவான் வாளால்!
துப்பாக்கியேந்தியவன் சாவான் துப்பாக்கியால்!
ஆகவே தூக்கி எறி துப்பாக்கிகளை!
தூக்கிப்பிடி சமாதானக் கொடிகளை.

*ப. டினோஜா,*
*மளுவராயர் கட்டையடம்பன், மடுறோட்*

## விபரீதம்!

பிஞ்சு மனங்களில் நஞ்சைத் தூவும் நையாண்டி....
குழந்தைத்தனமாய் பாட்டி காட்டும் பூச்சாண்டி.....
இன்று – களிப்பில் தனைமறந்து புன்னகைக்கும் பேராண்டி...
நாளை – கேட்பான் 'வாங்கித் தா பாட்டி எனக்கும் ஒரு துப்பாக்கி'

*P. ஜோய் பிரின்ரன்,*
*மளுவராயர் கட்டையடம்பன், மடுறோட்.*

## கனவு காணுங்கள்...

கனவுகள் ஒருநாள் நனவாகுமென்றால்
கனவு காணுங்கள்.
மதங்கள் யாவும் ஒரு நாள் சம்மதம் கொள்ளும்
எனும் கனவு காணுங்கள்.

ஈழத்தில் போர் ஓயும்.
தமிழ் சிங்களம் ஒரு நாள் சமத்துவம் பெறும்
எனும் கனவு காணுங்கள்.

அணு ஆயுதம் ஒழியும்.
உலகில் போர்கள் கழியும்.
யாதும் ஊரே யாதும் நாடே யாதும் இனமே
யாதும் மொழியே யாவரும் கேளீர் என
யாவரும் உணரும் நாளொன்று உண்டு
எனும் கனவு காணுங்கள்.

இவையென்ன இன்னும் எவை எவை
நல்லனவோ அவற்றையெல்லாம்
கனவாய்க் காணுங்கள். *தே. ஜெர்மா, சாளம்பன்.*

## வாழ்க்கை!

பிறக்கும் முன் கருவறையில் இறந்தபின் கல்லறையில்
இடையில் ஏன் இந்தக் குழப்பம்?

*பெ. டெரன்சியா, மட்டக்களப்பு.*

## இறைவா நீ பதில் தரவேண்டும்!

பொன்னான பூமியைப் படைத்து
மானிடர்களின் பாவக் கரங்களில் கொடுத்து
பாவம் ஏதுமின்றி நீர் பாரினில் பிறந்தது ஏனோ?
பாவிகளை மீட்கப் பிறந்த நீர்
ஏழ்மையில் மனிதனாகக் கருவுற்றீர்.
பாவம் செய்த மனிதரெல்லாம் மாடமாளிகையில் உறங்கிட
மாபரனான நீர் ஏன் மாட்டுக் குடிசையில் தவழ்ந்தீர்?
தவழ்ந்து புரண்டு வாழ்ந்த தாய்மண்ணே
இன்று பூகம்பம் வெடித்து புலம்ப வைத்ததே
கடல் அலையெல்லாம் பொங்கி எழுந்ததே
அழித்து நின்று சலனற்று கிடந்து சவங்களானதே
பரமனின் செயலோ பாவிகளின் பாவக் குற்றமோ
இறைவா நீதான் பதில் தர வேண்டும்

*திருமதி. ஜெயா நடேசன்,*
*ஜேர்மனி.*

## சுவைக்க... சுவைக்க....!

**பணம்** : தேடினால் வராது, வந்தால் சொல்லாமல் போகும்.
**குணம்** : அந்நிய மண் புகும்போது இருந்தது, அன்றாட வாழ்வில் தொலைந்தது.
**குலம்** : தாய் மண்ணில் புயல் அபாயம், அந்நிய மண்ணில் கானல் நீர் ஆதரவு.
**கடிதம்** : பெற்றோரின் எதிர்பார்ப்பு, பிள்ளைகளின் அசட்டை.
**பிடிவாதம்:** வென்றால் வடை, தோற்றால் பாடை.
**ஆடு, கோழி, மாடு** : வெட்டிய உடனே சமையல் எம் மண்ணில், வெட்டி அடைத்து குளிரில் பல மாதங்கள் இங்கு.
**நாள்** : புதிய தாளில் பழைய பேனா.
**மாதம்** : ஆரம்பம் சந்தோஷம், முடிவு சோகம்.
**வருடம்** : இனி வராத வரமுடியாத களம்.
**புது ஆடை:** இங்கு ஒரு முறைமட்டும் மேனியில், மறுநாள் என்றும் அலுமாரியில்.

*ஏ. றி. இம்மானுவேல், ஜேர்மனி.*

## சிந்தனைத் துளிகள்

காட்டிடு : அன்பையும், பாசத்தையும்
காத்திடு: மானத்தையும், கற்பையும்
வளர்த்திடு: உண்மையையும், நேர்மையையும்
வாங்கிடு: மதிப்பையும், மரியாதையையும்
போக்கிடு: தற்பெருமையையும், பேராசையையும்
அழித்திடு: ஆசையையும், அறிவீனத்தையும்
விழுங்கிடு: உன் கோபத்தையும், துக்கத்தையும்
உடுத்திடு: உயர்வையும், உண்மையையும்
உழைத்திடு: ஏழைகளின் நன்றிகளையும், அநாதைகளின் அன்பையும்

*செ. வினோதினி (யூலி), தரம் 11A,*
*மன்/ பரிகாரிகண்டல் அ.த.க.பாடசாலை*

# கொஞ்சமாச் சிரிங்க ..... கொஞ்சமாச் சிரிங்க .....

மூன்று நாட்டவர்கள் குற்றம் செய்துவிட்டார்கள். தூக்கு தண்டனையாய்ப் போச்சு. ஒருத்தன் அமெரிக்கக்காரன், ஒருத்தன் ரசியாக்காரன் மற்றவன் இலங்கையன். அமெரிக்கக்காரனைக் கூப்பிட்டு சாகப்போகிற நீ உன்னுடைய மூன்று ஆசைகளையும் கூறுவாயாக என்றார் நீதிபதி. "முதல் ஆசை அப்பிள் யூஸ், இரண்டாவது ஆசை கிறேப்ஸ் யூஸ், மூன்றாவது ஆசை நான் செத்த பிறகு எனது உடலை ஆபிரகாம் லிங்கனின் சதுக்கத்துக்குப் பக்கத்தில் புதைக்கணும்" என்றான். "ஆகா என்ன நாட்டுப்பற்று!" நீதிபதி அசந்துவிட்டார்.

ரசியாக்காரனைக் கூப்பிட்டு, "உன்னுடைய மூன்று ஆசைகளையும் கூறு" என்றார் நீதிபதி "முதல் ஆசை பிறியாணி, இரண்டாவது ஆசை சிக்கன். மூன்றாவது ஆசை நான் இறந்தபிறகு எனது உடலை எனது நாட்டின் தலைவன் லெனின் சதுக்கத்துக்குப் பக்கத்தில புதையுங்க" என்றான்.

நம்ம இலங்கையனைக் கூப்பிட்டு "உன் முதல் ஆசை என்ன?" என்று நீதிபதி கேட்டார். நீதிபதி கேட்ட மாதம் மார்கழி மாதம். அவன் அப்படியே நீதிபதியைப் பார்த்து "என்னுடைய முதல் ஆசை ஒரு டசின் மாம்பழம் வேண்டும்" என்றான். "ஏய் இது டிசம்பர் மாதம். மாம்பழம் மே மாதம்தான் கிடைக்கும்" என்றார். அதற்கு அவன் "கிடைச்சிட்டுப் போகட்டும். எப்போ கிடைக்குதோ அப்ப சாப்பிட்டு தண்டனையை நிறைவேற்றுங்க" என்றான். அப்படியே ஆறு மாதம் முடிய மாம்பழத்தை வாங்கிச் சாப்பிட்டு "இரண்டாவது ஆசை என்ன?" என்று நீதிபதி கேட்டார்."எனக்கு ஒன்றும் வேண்டாம், ஆனால் ஒரு கிலோ செரிப்பழம் வேண்டும்" என்றான். "செரிப்பழம் மார்கழி மாதம் மட்டுந்தாய்யா கிடைக்கும்." என்றார் நீதிபதி. அதற்கு இலங்கையன், "கிடைச்சிட்டுப் போகட்டும், எப்ப கிடைக்குதோ அப்ப சாப்பிட்டு தண்டனையை நிறைவேற்றுங்க" என்றான். "மூன்றாவது ஆசை என்ன கேக்கப் போகிறாய்" என்று நீதிபதி கேட்டார். அவன் "ஒண்ணுமில்ல" என்று சாகிற கவலை இல்லாமல் பேசினான். "நான் செத்த பிறகு எனது உடலை நீதிபதியின் சதுக்கத்துக்குப் பக்கத்தில புதையுங்க" என்றான். ஜெயிலர் அவனைப் பார்த்து "அவர் இன்னும் சாகலடா" என்றான். அதற்கு அவன் "நான் என்ன சாகவா சொன்னேன். அவர் என்றைக்குச் சாகிறாரோ அவர் சதுக்கம் போனபிறகு என்னைய புதையுங்க" என்றான்.



*சு. தனுராஜ், சாற்குழி, வவுனியா.*



**டாக்டர்** : உங்க கையில் இவ்வளவு பெரிய வெட்டுக்காயம் எப்படி வந்தது?
**நோயாளி** : தலைவருக்கு பொன்னாடை போர்த்தும்போது அவர் முதுகுக்குப் பின்னாடி ஒளிச்சு வைச்சிருந்த அரிவாள் வெட்டிடுச்சு டாக்டர். ********************

**ராமு:** சாமியாருக்கு வீட்டை வாடகைக்கு விட்டது தப்பாப் போச்சு
**சோமு** : ஏன்டா?
**ராமு** : வாடகையை கேட்டா காலி பண்ணிடுவேன்னு சொல்றாரு! **************************

**நோயாளி** : டாக்டர்! செல்போனை ரொம்ப சின்னதா வாங்கினது தப்பாப் போச்சு.
**டாக்டர்** : ஏன்...?
**நோயாளி:** பேசும்போது, வாய்க்குள்ளே போயிடுச்சு!

*ஏ. சிசிலியா*

**ஒருவர்** - மாப்பிள்ளை கிரிக்கட் வீரர்னு சொல்றியே எப்படி?
**மற்றவர்** - லட்டு கொடுத்தா ஜீன்ஸ்ல தேய்ச்சுக்கிறாரே.
*************

**கமல்** - என் மாமனாருக்கு ஏதாவது ஒண்ணுன்னா நான் அப்படியே ஆடிப்போயிடுவன்.
**விமல்** - அட அவர்மேல உனக்கு அத்தனை பிரியமா?
**கமல்** - பின்னே, இன்னும் வரதட்சனை பணம் பாக்கி இருக்கில்ல.

*ஞா. நவோமி, ஆலங்குளம், வட்டக்கண்டல*

# சிக்குன் குனியா காய்ச்சலை இனம் காண்போம்

## மன்னாரில் வெகுவாக பரவிவரும் நோய்



**திரு. சின்கிலேயர் பீற்றர், மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியம், மன்னார்.**

கடந்த சில மாதங்களாக இந்தியா, பாக்கிஸ்தான், இலங்கை, பங்காளதேஷ், மாலைதீவு போன்ற நாடுகளில் ஒரு வகை நுளம்பினால் நாட்டைக் கலக்கும் நோயாக சிக்குன் குனியா காணப்படுகின்றது.

இந்தியாவில் இந்நோய் முதலில் ஆந்திராவில் காணப்பட்டது. 2005ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் பல ஆயிரக்கணக்கானோர் சிக்குன் குனியா எனப்படும் நுளம்பு காய்ச்சலினால் பாதிக்கப்பட்டனர். இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் தொழிலாளர்களும் சிறுவர்களுமே. காரணம் சிக் என்னும் வைரஸ் கிருமிகளுக்கான நோயெதிர்ப்பு சக்தி மனித ஜீன்கள் பெருமளவில் இவர்களுக்கு குறைந்ததினால்தான். மேலும் ஆல்பா ஜீன்ஸ் வகையைச் சேர்ந்த சிக் வைரஸ் தனது புரத சுவர் அமைப்பை அடிக்கடி மாற்றிக்கொள்ளும் தன்மை கொண்டது. தற்போது ஒருவகை நுளம்பு, கொசுக்கள் மூலம் இந்நோய் பரவி வருவதாக விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

இவ்வைரஸ் கிருமிகளினால் ஏற்படும் காய்ச்சலானது உடலில் கடும் வெப்பத்தை ஏற்படுத்துவதுடன், உடல் அசதி, நித்திரையின்மை போன்றவற்றுடன் மூளையைப் பாதிக்கும் காய்ச்சலாக மாறுகிறது. வீட்டு வளவுகளில் தேங்கி நிற்கும் நன்னீரில் ஏடேஸ் எஹிப்டி எனும் கொசுக்கள், நுளம்புகள் மூலம் சிக் வைரஸ் கிருமிகள் ஒவ்வொருவரையும் தாக்குகின்றன. பொதுவாக டெங்கு நுளம்பு போன்று இவை பகலிலேயே மக்களை தாக்குகின்றன. இக்காய்ச்சல் ஒருவரிடமிருந்து ஒருவருக்கு பரவக்கூடியது. சிக்குன் குனியா நோயிற்கு எதிர் உயிரி மருந்துகள் பெரும்பாலும் நிவாரணம் தருவதில்லை. இருப்பினும் உடல் வலியை நீக்கும் வலி நிவாரணி மாத்திரைகள் பேருதவி புரிகின்றன. ஆனால் இம்மாத்திரைகளை அதிகளவில் உட்கொண்டால் பின்பு கடும் பக்க விளைவுகளை எதிர்கொள்ள வேண்டி வரும். எனவேதான் இந்நோய் காணப்பட்டவர்கள் நன்கு ஓய்வு எடுத்துக்கொள்வதுடன் "பரசிட்டமோல், பனடோல், டெற்றா சைக்லின் போன்றவற்றை எடுப்பதுடன் அதிக நீரருந்தி எளிய உடற்பயிற்சி செய்வதுடன் இரத்தத்தை சுத்திகரிக்கும் கீரை வகைகளை உண்ணுதல் நலம்.

இந்நோய்க்கான அறிகுறியானது 1 - 2 நாட்களில் திடீரெனத் தோன்றும். அதிகமான காய்ச்சல், உடல் அசதி அதைத் தொடர்ந்து கை, கால், கழுத்து, மூட்டுக்களில் கடுமையான வலி, தோலில் சிவப்பு நிறத் தடிப்பு, சொறி போன்றவை தோன்றுவதுடன் இவை 2 - 12 நாட்கள் வரை நீடிப்பதுண்டு. கடும் காய்ச்சல் 2 - 3 நாட்கள் வரைதான் அதிகமாகக் காணப்படும்.

பெரும்பாலும் கை, கால் விரல்கள், மணிக்கட்டு, கணுக்கால், பாதம், முதுகெலும்பு, கழுத்தின் பின்புறம், தண்டு வடபகுதியில் சிறு மூட்டுக்களில் அதிக வேதனையை ஏற்படுத்தும். இதனால் பாதிக்கப்பட்ட மூட்டுக்கள் வீங்கும். சிலசமயம் ஒரு மாதம் வரை இவ்வலி நீடிக்கும். மேலும் இவ்வலியானது தசைப்பகுதிகள், முதுகு மற்றும் தோள்பட்டையில் தீவிரமாகப் பரவும். அத்துடன் முகம், கழுத்துப் பகுதிகளில் சிவப்பு நிறத் தடிப்புக்களுடன் இலேசான அரிப்புகளும், எரிச்சலும் காணப்படும். இந்நோயை இரத்த பரிசோதனை மூலமே கண்டுபிடிக்க முடியும். "எலிசா" என்னும் சோதனை மூலம் சிக்வைரஸ் கிருமிகளுக்கான ஆன்டிவடிகளை அடையாளம் காணலாம்.

இப்புதிய நோயைப்பற்றி அறிந்திராத பல வைத்தியர்கள் மலேரியா, டெங்கு, டைபொயிட் போன்ற நோய் இருப்பதாக கணித்து தேவையற்ற மருந்துகளை மக்களிற்கு சிபாரிசு செய்வதினால் இந்நோய் வெகு விரைவாகப் பரவி வருகிறது. மன்னாரில் இந்நோய் இந்தியாவிலிருந்து வருகை தரும் அகதிகள் மூலம் பரவுகின்றது என்றும் கொழும்பில் ஆகாய விமானங்கள் மூலம் வருகை தரும் பயணிகளால் பரவுவதாகவும் அவதானிக்கப்பட்டுள்ளது.

இந்நோயைக் கட்டுப்படுத்த இலங்கையில் காணப்படும் ஆயுள் வேத மூலிகைகள் பெரிதும் உதவுகின்றன.

- காய்ச்சலைக் கட்டுப்படுத்த – நிலவேம்பு, மஞ்சள், கீழ்க்காய்நெல்லி, வேம்பு, பற்படாகம் போன்றனவும்
- தோலின் தடிப்பைக் கட்டுப்படுத்த - அறுகம்புல், பறங்கிப்பட்டை போன்றவையும்
- மூட்டு வலியை நீக்க - வாத நாராயணன், முடக்கறுத்தான், நொச்சி, தழுதாழை, தேன் மெழுகு, மஞ்சிட்டி, கஸ்தூரி மஞ்சள், குங்குழியம் போன்றவற்றையும் பாவிக்கலாம்
- உடல் வலி நீங்க - சிற்றாறத்தை, நிலவேம்பு, திப்பிலி, சுக்கு மிளகு, கோரைக் கிழங்கு போன்றனவற்றையும் உபயோகிக்கலாம்.

மேற்கூறிய நிவாரணங்களை கருத்திற்கொண்டு சிக்குன்குனியா நோயை இலங்கையிலிருந்து ஒழித்துக்கட்டுவோம்.

---

அர்ப்பணத்திற்கு அர்த்தமூட்டி

## வெள்ளி விழாக் காணும்

அருட்பணியாளர்

## வின்சன் பற்றிக் (அ.ம.தி)



அர்ப்பண வாழ்வில் ஈர்ப்பத்தைந்தாண்டைக் காணும்
அருட்தந்தை வின்சன் பற்றிக் அ.ம.தி. அடிகள்
அர்ப்பணத்திற்கு அர்த்தமூட்டிய வாழ்வை
அருளிய அருட்கொடைக்காக
ஆண்டவனுக்கு நன்றி சொல்வோம்.

வழிபாடும் வாழ்வும் என்று முடங்கி விடாமல்
வழிகாட்டும் பணிகளால் பலர் வாழ்விற்கு ஒளியூட்டி
"வாழ்வோம் வாழவைப்போம்" என எல்லைகள் கடந்த பணியில்
நற்செய்தியை நடைமுறை வாழ்வில் செயற்படுத்தும் தூதரானார்

அல்லலுற்ற சிறுவர்களுக்கு புதுவாழ்வூட்டும் அன்பக ஸ்தாபகராய்
போதையில் சிக்கியோர்க்கு மறுவாழ்வூட்டும் புதிய உதயமாய்
சர்வமத பேதம் கடந்து ஒன்றிணைக்கும் அன்பு மயமாய்
உடலுளத் தாக்கம் போக்க உளவியல் உலகில்
தடம் பதித்த "நான்" சஞ்சிகை ஸ்தாபகராய்
பொதுநிலையினருக்கு பொறுப்புக்கள் பகிர்ந்து பணி செய்யத் தூண்டி
- உருவாகி உருவாக்க - பல பயிற்சிக் களங்கள் அமைத்து
பல்துறை வல்லோரை வெளிப்படுத்தி சரித்திரம் படைக்க வைத்து
படைப்பாற்றலால் பல நூல்கள் தந்து இலக்கிய உலகில் தடம் பதித்த
வெள்ளி விழா நாயகன் வி. பி ஒரு விசித்திரமானவரே!

குருக்களின் உருவாக்கத்தில் நல்ல ஆசானாய்
இறை வாழ்வில் மக்களை ஒன்றிணைத்த அருட்பணியாளராய்
யாழ் பல்கலைக்கழக முன்னாள் விரிவுரையாளராய்
பல நூல்களின் படைப்பாற்றல் மிக்க சிறந்த எழுத்தாளராய்
பயிற்சிகளால் பல்துறையில் உருவாக்கும் நல்ல வளவியலாளராய்
கத்தோலிக்க கலை இலக்கிய வட்டத்தின் ஸ்தாபகராய்
மதுபோதைத் தவிர்ப்புக் குழுவுக்கு வாழ்வூட்டும் வழிகாட்டியாய்
போரின் வடுக்களில் தவித்த சிறார்களுக்கு
மறுவாழ்வூட்டும் அன்பகத் தலைவராய்
அ.ம.தி குடும்பத்தின் ஆற்றல் துடிப்பு மிக்க அருட்பணியாளராய்
பணிகளால் அர்ப்பணத்திற்கு அர்த்தமூட்டி
"பணியாளர் பணிபெறவல்ல - பணி செய்யவே"
என்ற இறை வார்த்தை மிளிர
ஈர்பத்தைந்தாண்டு ஆற்றிய பணிகளுக்காய் மன்னார் ஆயரும்
அருளாளர்களும், சர்வமத மக்களும் மனதார வாழ்த்துகிறார்கள்.


விடத்தல்தீவு, பேசாலை பங்கு பணிவாழ்வின் நினைவுகளில்
உடக்குப் பாஸ் முதல், உயர்ந்து நிற்கும்
பேசாலை வெற்றி நாயகி ஆலயமும்
பக்தி நூல்களுடன், இறைபுகழ் பாடல் ஒலி நாடாக்களும்
அயல் நாட்டுக் குருக்களின் இறைதியான வழிபாடுகளும்
அன்பியமுடன் அறப்பணியில் இணைந்து பங்கு மக்களோடு
இன்னல்களிலும் இணைந்து நின்ற பங்களிப்பே சாட்சி சொல்லும்.

வெள்ளி விழா நாயகரின் பணி வாழ்வு மேலோங்கி வளர்ந்திடவே
புதிய பணித்தளங்கள் இன்னும் பல காத்திருக்க
கல்வியிலும் பல்கலைக்கழக கலாநிதியாய் உயர்வு காண
கட்டிடங்கள் அல்ல மனித மனங்களைக் கட்டுவதற்காய்
படித்த உயர்கல்விப் பட்டங்களைப் பயன்படுத்த
இறை அன்பைப் பகிர்வதிலே இன்பம் காணும்
அறப்பணியாளர் அருட்தந்தை வின்சன் பற்றிக் அடிகள் வாழ்வில்
அமலன் யேசு அருளாசி நிறைவாய்ப் பெற்று வாழ
இறையாசி வேண்டி வாழ்த்துகிறோம்.

**ஆக்கம் : ஜோசப் பாலா**
**கத்தோலிக்க கலை இலக்கிய வட்டம், யாழ்ப்பாணம்.**

---

## மாதோட்ட வரலாற்றில் இடம்பெறும் ஸ்ரேசன் மாஸ்ரர்



மாதோட்டத்தின் சிறப்புக்களுள் முக்கியமான வரலாற்றுத் திருத்தலங்களுள் ஒன்று பாடல் பெற்ற திருத்தலமாம் திருக்கேதீஸ்வரம். அந்த திருக்கேதீஸ்வர ஆலயத்திற்கு சிறப்பினை அளித்தது திருக்கேதீஸ்வர புகையிரத நிலையம். அந்தப் புகையிரத நிலையத்திற்கு பெருமை தேடிக்கொடுத்தவர் ஸ்ரேசன் மாஸ்ரர் திருவாளர். ஆரோக்கியம் பிரான்சிஸ் மார்க் அவர்கள். கடந்த 37 வருடங்கள் சேவையினை கண்ணுங் கருத்துமாகப் புரிந்தவர்! வாழ்வும் பணியும் ஒன்று என்று கண்டவர்! இவர் ஓர் கௌரவமான மனிதனாக வாழ்ந்தார். அறிவாளி, அனுபவசாலி, மும்மொழிகளிலும் பேசத் தெரிந்த மூதறிஞர், கடமை வீரன், 88 வயது வரை குடும்ப வாழ்வில் தன் துணைவியாருடன் இன்பமாக வாழ்ந்தவர். பிள்ளைகளுக்கு அன்புத் தந்தையாகவும், உறவினருக்கு உறவினராகவும், நண்பர்களுக்கு இனிய நட்பாளனாகவும் வாழ்ந்தவர். இவரின் ஆன்மா சாந்திபெற வேண்டுகின்றோம். முன்பு ஓடிக்கொண்டிருந்த தலைமன்னார் புகையிரதத்தினை நினைவில் கொண்டுவருகையில் இவர் ஓர் வரலாற்றில் இடம்பெறும் ஸ்ரேசன் மாஸ்ரர் என்பது வெள்ளிடைமலைதான்.

- திருமதி. பெப்பி விக்ரர் லெம்பேட

---

## மன்னார் மறைமாவட்ட

## அருட்பணித் திட்டமிடல் மாநாடு - 2006

இவ்வாண்டைத் தொடர்ந்துவரும் அடுத்த ஐந்து ஆண்டு காலப்பகுதிக்கான, மன்னார் மறைமாவட்டத்தில் முன்னெடுத்துச் செயற்பட வேண்டிய ஆக்கபூர்வமானதும், அத்தியாவசியமானதுமான அருட்பணிகளை இனங்கண்டு அவற்றை பங்குகள் தமது கருத்துப் பரிமாற்றம் மூலமாக அருட்பணித்திட்டமிடல் குழுவிற்கு வழங்கியிருந்தன. பங்குகள் அனுப்பிவைத்த மேலான, ஆக்கபூர்வமான கருத்துக்களைக் கவனத்திற்கொண்டு அருட்பணித் திட்டமிடலுக்கென நியமிக்கப்பட்ட குழு கடந்த 2006.11.01ம் திகதி புதன்கிழமை ஆயர் இல்லத்தில் ஒன்றுகூடி இம்மகாநாட்டு செயற்திட்டம் பற்றிய சில முடிவுகளை எட்டியது.

© மையப்பொருள :- அன்பிய வாழ்வின் ஊடாக "கிறீஸ்தவ வாழ்வின் முதிர்ச்சியை நோக்கி" (Towards Christian Maturity)
© கால எல்லை :- 03 நாட்கள்
© காலம் :- 04 - 06.12.2006 (04ம் திகதி மாலை 05.00 மணிக்கு ஆரம்பம்)
© பங்கேற்போர் :- பங்குப் பிரதிநிதிகள், பக்திச் சபைகளின் பிரதிநிதிகள், ஆணைக்குழுக்களின் பிரதிநிதிகள், துறைசார் வல்லுனர்கள், மறைமாவட்டத்தில் பணியாற்றும் துறவற சபைகளின் பிரதிநிதிகள், மறைமாவட்டத்தில் பணியாற்றும் குருக்கள்.

### § பங்குப் பிரதிநிதிகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கோமரசன் குளம் | 02 | வவுனியா | 03 | ஓமந்தை | 01 |
| பம்பைமடு | 02 | இலுப்பைக்குளம் | 02 | செட்டிகுளம் | 02 |
| பண்டிவிரிச்சான் | 02 | தட்சனாமருதமடு | 01 | ஆட்காட்டிவெளி | 02 |
| அடம்பன் | 02 | விடத்தல்தீவு | 02 | தேவன்பிட்டி | 01 |
| கற்கிடந்தகுளம் | 02 | குஞ்சுக்குளம் | 01 | முருங்கன் | 02 |
| அரிப்பு | 02 | முள்ளிக்குளம் | 01 | அளவக்கை | 02 |
| நானாட்டான் | 02 | வஞ்சியன்குளம் | 01 | உயிலங்குளம் | 02 |
| வங்காலை | 03 | பள்ளிமுனை | 02 | மன்னார் பேராலயம் | 03 |
| தாழ்வுபாடு | 02 | தோட்டவெளி | 02 | யோசவ்வாஸ் நகர் | 01 |
| பேசாலை | 03 | கீளியன்குடியிருப்பு | 01 | தலைமன்னார் | 02 |

### § துறவறசபைகள்

| | | | |
|---|---|---|---|
| அ. ம. தி. குருக்கள் | 03 | திருவுளப்பணி. பொதுநிலைச் சகோதரி | 01 |
| சலேசிய சபைக் குருக்கள் | 01 | செபமாலை மாதா சபைக் குருக்கள் | 01 |
| பிரான்சிஸ்கன் அருட்சகோதரர்கள் | 01 | டிலாசால் அருட்சகோதரர்கள் | 01 |
| செபமாலை மாதா அருட்சகோதரிகள் | 01 | திருக்குடும்ப அருட்சகோதரிகள் | 03 |
| அன்புக் கன்னியர் அருட்சகோதரிகள் | 01 | அப்போஸ்தலிக்க கார்மல் அருட்சகோதரிகள் | 01 |
| நல்லாயன் அருட்சகோதரிகள் | 01 | திருச்சிலுவை அருட்சகோதரிகள் | 01 |
| டோமினிக்கன் அருட்சகோதரிகள் | 01 | அமல உற்பவ அருட்சகோதரிகள் | 01 |
| | | பிரா. சமா. மறைபரப்பு அருட்சகோதரிகள் | 01 |

மறைமாவட்ட ஆணைக்குழுக்களின் பிரதிநிதிகள். *(ஒவ்வொரு ஆணைக்குழுவிலிருந்தும் ஒருவர்)*
பக்திச் சபைகளின் பிரதிநிதிகள். *(ஒவ்வொரு பக்திச் சபையிலிருந்தும் ஒருவர்)*
துறைசார் வல்லுனர்கள் - Professionals *(ஒவ்வொரு மறைக்கோட்டத்திலிருந்தும் இருவர்)*
*(பொறுப்பான மறைக்கோட்ட முதல்வர்கள் தங்கள் மறைக்கோட்ட குருக்களுடன் கலந்துரையாடி தெரிவுசெய்யலாம்.)*

*§ பங்குப் பிரதிநிதிகள்:- பங்குகள் தமது பங்குப் பிரதிநிதிகளை இம்மகாநாட்டிற்கு அனுப்பும்போது பின்வருவனவற்றைக் கவனத்திற் கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். பங்கு/ ஆலய அருட்பணிப்பேரவைச் செயலர் அல்லது உறுப்பினர், பங்கில் தலைமைப் பொறுப்பைச் சிறப்பாக ஏற்று நடாத்தக்கூடியவர், பணியார்வம் உள்ளவர், முன்மாதிரிகையானவர், இம்மகாநாட்டில் சிறப்பாகப் பங்களிப்புச் செய்யக்கூடியவர் இவ்வகைக்குள் அடங்கும் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்து அனுப்புவது சிறப்பான திட்டமிடலுக்கு உதவியாக அமையும்.*

# கலை இலக்கியச் சாரளம்

# கவிதைக் களம்

## சீதனத்துச் சீமான்கள்...

"உழைப்பேன் நான், உறுதியாய்
உன்னைக் காப்பேன்" - என
முயற்சிக்கும் வழி மறந்து,
"பெண்ணே நான் சோம்பேறி,
ஆண்மை மட்டும் தருவேன்,
அஃதின்றி வேறொன்றும்
இங்கில்லை என்னிடம்.
வேண்டிவா பெற்றவரிடம்
வேண்டியளவு சீர்வரிசை வாழலாம்"
எனக் கேட்கிறானே மானம் கெட்ட ஆடவன்
சீச்சி..... வெட்கம் ....!
ஒரு பெண்ணைக்
காப்பாற்ற முடியாத ஆண்
சீதனத் தீயில் வேகி
சீர்வரிசை கேட்கிறானே
கை நீட்டும் பிச்சைக்காரனும்
இவனும் சமம் போலும்...


*A. தர்சினி, அரிப்பு*

## மன்னார்ப் பாலம்

அன்று ஆங்கிலேயர் போட்ட
கறிச்சட்டிப் பாலம்.
இன்று அரசாங்கம் போட்ட
சீனெட்டிப் பாலம்.
எண்பத்தொன்பதாமாண்டு
தகர்க்கப்பட்ட பாலம்.
தொண்ணூற்றி ஐந்தில் சீனெட்டி
கொண்டு சரிசெய்யப்பட்ட பாலம்!
சுமார் பதினொரு ஆண்டுகள்
காலாவரியாகிப் போன பாலம்.
நாளை எத்தனை அப்பாவி
மக்களின் உயிரைக் காவுகொள்ளப்
போகுமோ தெரியவில்லை?

இதை எடுத்துக்கூற
இங்கு யாருமில்லை... "பத்துத் தொன்
மேல் சென்றால் உடைந்து போகும்"
என நலன் விரும்பி ஒருவன்
விளம்பரப்பலகை போட்டுவிட்டுச் சென்றான்...!
அந்தரத்திலே தொங்கும் பாலம்
என்று ஆழ்கடலிலே பேருந்துடன்
பயணிகள் உயிரை பறிக்கப் போகிறதோ.....!
மன்னார் மாவட்டத்தில் குரல் கொடுக்க
பாவம் இங்கு யாருக்கும்
துணிவும் இல்லை திடமும் இல்லை
மன்னா என் மனக் குமுறலை நீயே - உன்
மேனிசுமந்து எடுத்துச் சென்று
என் மக்களுக்கு விழிப்பை ஏற்படுத்து.......

*பி. சசி, நானாட்டான்.*



## பட்டம்...

பள்ளிக்கூடம் சென்றவனுக்கு
படித்தவன் என்று பட்டம்
பணம் மட்டும் சேர்த்தவனுக்கு
பணக்காரன் என்று பட்டம்
வாய் மூடி அழுபவனுக்கு
ஊமை என்று பட்டம்
வாழ்க்கையில் அழுபவனுக்கு
கோழை என்று பட்டம்
கணவனை இழந்தவளுக்கு
விதவை என்று பட்டம்
கண் இழந்த மனிதனுக்கு
குருடன் என்று பட்டம்
பெருமை கொண்டு வாழ்பவனுக்கு
மன்னன் என்று பட்டம்
பொறுமை கொண்டு வாழ்பவனுக்கு
மனிதன் என்று பட்டம்.

*தே. ஜெர்மா, சாளம்பன்.*

## தாயன்பு

பத்து மாதம் சுமந்தேன்
பத்து நிமிடம்
உயிர் துறந்து பெற்றேன்
பல வருடங்கள்
கண்ணுக்குள் வைத்து
காத்து வளர்த்தேனே!

என் அன்பு மகனே!
இன்று பசியின்
வாட்டத்தால் உன்னிடம்
கையேந்தி நிற்க!
ஒரு பிடி என அளந்து
கொடுக்கின்றாயே!
அன்று நீ அழும்போது நான்
அளந்துதான் பால் கொடுத்தேனோ?

இன்று உனக்கு நான் பாரம் என
நீ கூறுகின்றாயே! ஆனால்
அன்று நீ எனக்குப் பாரம் என்று
நான் நினைத்திருப்பின் இன்று
இந்நிலையில் நீ இல்லை.
காலம் மாறியபோதும்
தாயன்பு ஒருபோதும் மாறாது மாறாது!

*A. வேணுகா கூஞ்ஞு, தரம் 11 B,*
*மாணவியர் இல்லம் முருங்கன்.*

# மன்னா சிறுகதை

## மல்லிகா வேலைக்குப் போகின்றாள்

**செல்வி. வ. மேசி அஞ்சலா,**
**பெரியமுறிப்பு, முருங்கன்.**



மல்லிகா தூக்கம் வராமல் படுக்கையில் புரண்டுகொண்டிருந்தாள். எங்கும் ஒரே அமைதி. எனினும் தூரத்தில் எங்கோ கேட்கும் கிழட்டு நாயின் ஊளைச் சத்தம். மனதில் நிம்மதி இல்லை. கண்களில் ஓடிய கண்ணீரைத் துடைத்துக்கொண்டு மெதுவாக எழுந்து அமர்ந்து கொண்டாள். அப்போது மல்லிகாவின் பாட்டி 'என்ன புள்ள மல்லிகா நீ... .இன்னும் நித்திரை கொள்ளவில்லையா?.... லாம்பு வேற எரியுது.... அதை நூத்து வைத்துவிட்டு, படுத்து நித்திரையைக் கொள்ளு" எனக் கூறிவிட்டு, பாட்டி மறுபக்கமாகச் சாய்ந்து படுத்துக்கொண்டார். அப்போதுதான் மல்லிகா மூலைப் பக்கமாகப் படுத்திருந்த தம்பி ராஜனையும், தங்கை ராணியையும் பார்த்தாள். அவர்கள் நன்றாக அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தார்கள்.

மல்லிகா மீண்டும் படுக்கையில் படுத்துக் கொண்டு, கண்களை இறுக மூடிக்கொண்டு புரண்டு புரண்டு படுத்தாள். எனினும் அவளுக்கு நித்திரை வந்தபாடில்லை. ஊரே அடங்கிவிட்ட பிறகும் இவளின் மனம் மட்டும் அமைதியின்றித் தவித்துக்கொண்டிருந்தது.

அவளது மனத்திரையில் பழமையான நிகழ்வுகள் எல்லாம் வந்து போயின. எனினும், இந்த நினைவுகள் மட்டும் அவளின் மனத்திரையை விட்டு நீங்க மறுத்தது.

அன்று வெள்ளிக்கிழமை. வழமைபோல பாடசாலைக்குச் செல்கிறாள். கணித பாட ஆசிரியர் வீட்டுப் பாட வேலைகளைத் திருத்திக் கொண்டிருக்கின்றார். அது ஆறாம் பாட வேளை. ஒரு மாணவன் வகுப்பிற்குள் ஓடி வந்து, "சேர் அதிபர் சொல்லிவிட்டவர் உடனே மல்லிகா அக்காவைக் கூட்டி வரட்டாம்" என்றான். அப்போது ஆசிரியர், "ஏன்ராப்பா? என்ன விசயம்" எனவும், அவன் "தெரியல்ல சேர் உடனே புத்தகத்தையும் எடுத்துக்கொண்டு, ஒவ்விசுக்கு வரட்டாம்" என்று கூறிவிட்டு அவன் வந்த வேகத்தில் தனது வகுப்பறைக்குச் சென்றுவிட்டான். உடனே, கணித ஆசிரியர், "மல்லிகா என்னமோ தெரியல்ல.. உடனே நீ அதிபரிட்ட போ. சேர் என்னண்டு சொல்லுவார்" என்று கூறி அவளை வகுப்பால் அனுப்புகிறார்.

இவள் அலுவலகம் நோக்கிச் செல்லும் போது, அங்கே அலுவலகத்தின் முன்னே பக்கத்து வீட்டு ரஞ்சன் மாமாவும், அதிபரும் ஏதோ கதைத்துக்கொண்டு நின்றார்கள். மல்லிகாவைக் கண்டதும் அதிபர், "மல்லிகா உன்னை உடனே வீட்டுக்கு வரட்டாம். அம்மாவுக்கு சுகமில்லையாம்... நீ வீட்ட போகலாம்." என்றார். மல்லிகாவிற்கு மனதிற்குள் ஏதோ போராட்டம். அம்மா காலையில் நல்லாத்தானே வேலைக்குப் போனாங்க.... பிறகு என்ன திடீர் வருத்தம்! காய்ச்சலா? தலையிடியா? ... என்று கேட்ட போது ரஞ்சனால் என்ன சொல்லுவதென்றே தெரியவில்லை. ரஞ்சன் பதில் ஏதும் கூற முடியாதவனாய், முன்னே நடந்தான். "என்ன மாமா! என்ன நடந்தது! பயமாயிருக்கு எதுவானாலும் சொல்லுங்க..." என்று கட்டாயப்படுத்தினாள். அப்போது ரஞ்சன் "மல்லிகா அம்மா வயல்ல வேலை செய்து கொண்டிருக்கையில் பாம்பு.....!" என்று சொல்லி முடிக்க முன்னமே ரஞ்சனைத் தாண்டி சுமார் நூறு மீற்றர் தூரம் முன்னே சென்றுவிட்டாள். வீட்டிற்குச் சென்றபோது, அங்கு தம்பி, தங்கை, அப்பா, பாட்டி இன்னும் அவர்களது உற்றார், உறவினர், சுற்றத்தார் என்று எல்லோரும் அழுது கொண்டிருந்தார்கள். அப்போது நன்கு புரிந்தது. 'அம்மா இப்போது உயிருடன் இல்லை' என்பது. இவளும் ஓ.... வென்று கதறி அழுதாள். நடக்க வேண்டிய காரியங்கள் எல்லாம் நடந்து முடிந்தன.

அந்தக் காரியங்களில் எல்லாம் பாடசாலை மாணவர்களும், ஆசிரியர்களும் அதிபர் எல்லோரும் கலந்துகொண்டனர். எல்லோரும் இவளுக்கு ஆறுதல் சொன்னார்கள். இவை எல்லாம் அவள் மனதில் படமாய் வந்து போயின.

சில நாட்களின் பின்னர் அப்பா அவளை அழைத்தார். "புள்ள நான் மட்டும் உழைத்து நம்மட வீட்டப் பார்க்க ஏலாதம்மா... என்னாலயும் ஏலாது...." என்று இழுத்தார். அப்போது மல்லிகா, "என்னப்பா . சொல்லுங்க... என்ன விசயம்" என்றாள். "இல்ல மகள்.... அது வந்து... நீயும் பள்ளிக்கூடத்தை விட்டுவிட்டு வேலைக்குப் போனாத்தான் இனி முடியும். அதுதான் சொல்ல வந்தன்" என்றார்.

அப்போது மல்லிகா, "இல்லப்பா சோதனை முடிஞ்சதும் நான் வேலைக்குப் போய் உழைக்கிறன்... அது வரைக்கும் படிக்க விடுங்க..." என்று கெஞ்சினாள். ஆனால் தகப்பனோ அவளைப் படிக்க விடுவதாக இல்லை. அதிபர், ஆசிரியர்கள் எல்லோரும் வந்து சொன்னார்கள், "நல்லாப் படிக்கிற பிள்ளை. கடைசி ஓ. எல். சோதனை வரைக்கும் படித்துப் பரீட்சை எழுதட்டும். பிறகு மீதியைப் பார்க்கலாம்! என்றார்கள். அதற்கும் தகப்பன் அசைவதாயில்லை.

அப்போது அவ்வூரிலே அரிவு வெட்டு வேலைதான் நடந்துகொண்டிருந்தது. எனவே அவளும் அடுத்த நாள் அரிவு வெட்டும் வேலைக்குச் செல்ல வேண்டும். அந்த அடுத்த நாளும் வந்து விடிந்தது. தகப்பனுடன் அவளும் அம்மாவின் அரிவு வெட்டுக் கத்தியுடன் வேலைக்குப் புறப்பட்டுச் சென்றாள். போகும் பாதையில் பாடசாலைக்குப் போகும் மாணவர்களைக் காணுகிறாள். இவளுக்கு அழுகை அழுகையாக வருகிறது. அம்மா இருந்திருந்தால் இந்த நிலை வந்திருக்குமா? .. என எண்ணியவளாக அரிவு வெட்டச் செல்கின்றாள்.

சில வருடங்களின் பின்னர் தகப்பனும் எறிகணை வீச்சில் சிக்கி இறந்து போகவே, குடும்பப் பொறுப்பு முழுவதும் இவளின் தலையிலேயே வந்துவிட்டது. அந்தப் பொறுப்புக்களுடன் இன்னும் அவள் கூலி வேலை செய்து வாழ்கின்றாள். இவள் மட்டுமல்ல ... இவளைப்போல் எத்தனையோ மல்லிகாக்கள் இன்னும் வாழ்கின்றார்கள் என சிந்தித்தவாறே அப்படியே நித்திரையாகிப் போனாள்.

"என்ன புள்ள மல்லி, இன்னும் எழும்பலியா? வேலைக்குப் போறது இல்லையா? கெதியாய் எழும்பம்மா... நேரமும் இப்ப ஆறரையாகுது" என்று மல்லிகாவைத் தட்டி எழுப்பினாள் பாட்டி. மல்லிகா அவசரமாக எழுந்து வேலைக்குப் புறப்பட்டாள்.

"எனக்கு வந்த இந்த நிலை என்ர தம்பிக்கோ, தங்கைக்கோ வரக்கூடாது. அவர்கள் சமூகத்தில் பெரியவர்களாக வரவேண்டும்" என்ற நினைப்புடன் வயல்வெளி நோக்கிப் புறப்படுகின்றாள்.

**தொடர் கட்டுரை – அங்கம் 43**

## கத்தோலிக்க கலை இலக்கிய பாரம்பரியங்கள்

**- அருடபணியாளர் விக்ரர் பிலேந்திரன் -**



### பகுதி II தவக்கால பன்முக மரபுகள்

#### 18. "பாசோ" Passo: தோற்றமும் - வளர்ச்சியும்

பாசோ என்னும் பதம் போர்த்துக்கேய மொழியின் அடியிலிருந்து தோன்றியதாகும். கிறிஸ்துவின் பாடுகளைக் குறிக்கும் சில பக்தி முயற்சிகளும், பாடுகளின் நிகழ்வுகளின் பிரதிபலிப்புக்களும், இந்தியாவில் கோவா மாநிலத்திலும், ஏனைய பகுதிகளிலும் காட்சியமைப்பாக இடம்பெற்றன. இவற்றைக் குறிக்க பாசோ என்னும் 'பதம்' பயன்படுத்தப்பட்டது. கிறிஸ்துவின் பாடுகளுடன் தொடர்புடைய நிகழ்வுகளின் சில காட்சியமைப்பாக உருவங்களைக்கொண்டு உறைநிலை அமைப்பாக இவை ஏற்படுத்தப்பட்டாலும், ஒரு காலத்தில் இவற்றில் மனிதர்களும் பங்கு கொண்டிருந்தனர்.

இயேசு சபையினரின் இந்திய வரலாற்று ஆவணப் பதிவாளர் அருட்தந்தை பிரான்சிஸ்கோ டீ சொய்சா என்பவரின் கருத்துப்படி, பாசோ என்னும் சடங்குக் காட்சி அமைப்பு வரலாறு கீழ்க்கண்டவாறு அமைந்தது. புனிதர்கள் இஞ்ஞாசியார், பிரான்சீஸ் சவேரியார் என்போரின் வேண்டுகோளின்பேரில், இந்தியாவிற்கு யூபிலி ஆண்டிற்கான சிறப்புச் சலுகை வழங்கப்பட்ட போது, இதற்கான ஆயத்தங்களை மேற்கொள்ளும் பொறுப்பு அருட்தந்தை கஸ்பார் வார்சியோ (Gaspar Varzeo) என்பவரிடம் கையளிக்கப்பட்டது.

அடிகளாரின் மறையுரை கோவா மக்கள் பலரையும் வேகமாக மனம் மாற்றியது. இவ்வாறான புதுப்பித்தலையும், பக்தி உணர்வு நிலைமையையும் தொடர்ந்து நிலைநாட்ட பார்சியோ அடிகளார் வருடத்தின் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் பாடல்கள், மன்றாட்டுக்களுடன் கூடிய திருப்பவனியையும், ஒருவர் தனக்குத்தானே செய்யும் கசையடி நோன்பையும் அறிமுகம் செய்தார். இதைத் தொடர்ந்து, நீண்ட மறையுரையும் இடம்பெற்றது. மறையுரையைத் தொடர்ந்து, மௌனமான நிலையில் தியானிப்பதற்கு இடமளிக்கப்பட்டது. இவ்வேளையில் ஒவ்வொருவரும் தமது கடந்தகால வாழ்வு பற்றிச் சிந்திப்பதற்கு அழைக்கப்பட்டனர். மீண்டும் அரைமணித்தியாலமளவில் கிறிஸ்துவின் பாடுகள் பற்றிய மறையுரை ஆற்றப்படும். மக்கள் தங்கள் பாவங்களுக்கு மனம் வருந்தி, கண்ணீர் சிந்தி, கசையடி நோன்பை மேற்கொண்டனர். இதை ஆரம்பமாகக் கொண்டு, மறையுரைகள், திருப்பாடுகளின் காட்சி அமைப்புக்கள், புனித பவனிகள் தவக்காலப் பாரம்பரியங்களாகப் பேணப்பட்டு வந்துள்ளன. தவக்கால வார இறுதியில் மறையுரை வழங்கப்பட்டு வந்துள்ளன. தவக்கால வார இறுதியில் மறையுரை வழங்கப்பட்டு, அதைத் தொடர்ந்து ஆலயத்தினுள் திருப்பாடுகளின் சில காட்சிகள் காண்பிக்கப்படும். திருப்பவனியுடன் வார நிகழ்வுகள் நிறைவடையும்.

(தொடரும்)



## தவிப்பு



**கதவு**
வீடு தேடி வருவோரை பேசி
வரவேற்கும் பெண் சலங்கை.

**வண்ணத்துப் பூச்சி**
மணப் பூக்களுக்கு காதலன்
இவன்.

**சுனாமி**
கடற்கரையை முத்தமிட்டு
வந்த அலை
மனிதர்களையும் முத்தமிட
முந்திவிட்டது.

**பதவி**
நாம் இருக்கும் இடத்தை
நிதானமாக ஞாபகப்படுத்துவது

**சினிமா**
கற்பனையை விற்பனை
செய்யும் காவியன்

**மனைவி**
தாலிக்குச் சொந்தமான
உறவுகளின் ஊற்று

**ஒளி**
இருளை வெளிச்சமாக்கும்
விடிவெள்ளி

**சுமை**
தம்முள்ளே புதைந்து
இதயத்தை வருத்துவது.

எம். லின்ரா,
பாலையடிப் புதுக்குளம்,
வட்டக்கண்டல்.

**அன்பு**
வாழ்க்கைச் சக்கரம் சீராக உருள
தேவை இந்த அச்சாணி.

**நாக்கு**
இந்த ஆயுதத்தின் தாக்கத்திற்கு
இல்லை ஒரு மருந்து.

**பேராசை**
இருப்பதையும் இழக்க வைக்கும்
கொடிய நோய்

**கவிதை**
பொய் எனும் ஆபரணத்தால்
தன்னை அலங்கரிப்பாள் இந்த
மங்கை.

*ம. சுதர்ஸன் லோகு,*
*பேசாலை.*

## செபமாலைத்தாசர் சபையின் புதிய உயர் தலைவர்

# அருட்பணியாளர் ஸ்ரீபன் அடிகளார்

### மன்னாவுக்கு வழங்கிய சிறப்பு நேர்காணல்



நேர்கண்டவர் – நேசன் (சென்ற மாதத் தொடர்ச்சி)

**இன்றைய யுத்த சூழ்நிலையில் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த திருச்சபையின் பங்களிப்பு**

கேள்வி :

*இப்பொழுது நமது நாடு ஒரு யுத்த அபாய சூழ்நிலையிலேயே இருக்கின்றது. இன்றைய யுத்த சூழ்நிலையில் கத்தோலிக்க திருச்சபையின் பங்களிப்பாக எது அமைய வேண்டும் என்று நீங்கள் கருதுகின்றீர்கள்?*

பதில் :

இந்த உலகத்திற்கு வந்த இயேசு ஒரு சமாதானத்தின் வேந்தன். அவர் இந்த உலகத்திற்கு வந்ததன் நோக்கம் எல்லோருமே சமாதானமாக வாழவேண்டும் என்பதற்காகத்தான். அவர் தனது உயிரைக் கொடுத்ததும் அதற்காகத்தான். இறுதியாக அவர் தன்னுடைய சீடர்களுக்கு கொடுத்ததும் சமாதானத்தைத்தான். எனவே இன்றைய சூழ்நிலையிலே இந்த சமாதானத்தின் தூதுவர்களாக திருச்சபை செயற்படும்போது மட்டும்தான் அது திருச்சபையாக இருக்க முடியும்.

திருச்சபைக்கு ஒரு பெரிய பணி இருக்கின்றது என்பதை நான் உணர்கின்றேன். எப்படி என்று சொன்னால் திருச்சபையினுடைய ஒவ்வொரு ஆயரும் திருச்சபையினுடைய ஒவ்வொரு குருவும் இறைமக்களும் இந்த சமாதானத்தை முக்கியமென்று கருதி செயற்பட வேண்டும்.

குறிப்பாக நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையிலே வடபகுதியில் இருப்பவர்கள் தென் பகுதியில் இருப்பவர்களை அன்பு செய்வதற்கும் ஏற்றுக்கொள்வதற்கும் அதேவேளை தென் பகுதியில் இருப்பவர்கள் வடபகுதியில் இருப்பவர்களை அன்பு செய்து ஏற்றுக்கொள்வதற்கும் ஏற்ற மனநிலையை இருபகுதியினரும் ஏற்படுத்த வேண்டும். அப்போதுதான் திருச்சபை சமாதான முயற்சிக்கு ஆக்கபூர்வமான பங்களிப்பை ஆற்ற முடியும்.

கேள்வி :

*இன்று மன்னார் ஆயர் அவர்கள் உண்மைக்குச் சாட்சியம் பகருகின்ற முயற்சியிலே இங்கு நடைபெறுகின்ற மனித உரிமை மீறல்களை எடுத்துச் சொல்கின்றபொழுது அவர் ஒருதலைப்பட்சமாக செயற்படுகின்றார் - அல்லது புலிகளுக்கு ஆதரவாகச் செயற்படுகின்றார் என்ற குற்றச் சாட்டுக்கள் எழுந்துள்ளன. இதைப்பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?*

*பதில்:*

என்னுடைய ஆரம்ப குருத்துவக் காலங்களில் இருந்தே மன்னார் ஆயரோடு நான் பழகி வந்துள்ளேன். அவருடைய பணியைப் பொறுத்தவரையிலே அவர் ஆயராக இருந்தாலும் சரி, குருவாக இருந்தாலும் சரி அவர் அனைவரையும் அன்பு செய்யும் பண்பு அன்றிலிருந்தே இன்றுவரை அவரிடம் இருக்கின்றது. வெளியிலே யாருக்கும் தெரியாத விதத்தில் ஏழைகளுக்கு உதவி செய்பவர். அவர் குருவாக இருக்கும்போது ஒவ்வொரு மாதமும் ஒரு தொகுதி ஏழை மக்கள் அவரிடம் வந்துகொண்டே இருப்பார்கள். இது மற்றவர்களுக்கு தெரியாது. நான் அவருடைய பணித்தளத்திற்கு அருகிலே இருந்தபடியினாலே இதைப்பற்றி அறியக்கூடியதாக இருந்தது. அத்தோடு மட்டுமல்ல அவரிடம் போய்வரும் மக்களே என்னைச் சந்தித்து என்னிடம் சொல்லியிருக்கிறார்கள்.

எனவே அவர் மனித உரிமைக்காக குரல் கொடுக்கின்றார் என்று சொன்னால் அது நிச்சயமாக என்னைப் பொறுத்தவரையிலே அவர் மொழிக்காகவோ, அல்லது தனி இனத்திற்காகவோ செய்கின்ற பணி மட்டுமல்ல. அவருடைய உண்மையான உள்நோக்கத்தை அறிந்துகொண்டோம் என்று சொன்னால் உண்மையைக் கண்டுகொள்வோம். அதாவது துன்புறும் ஒவ்வொரு மனிதனுக்காகவும்தான் அவர் குரல் கொடுக்கின்றார். எந்தவொரு ஏழை, ஒடுக்கப்பட்டவர் என்று யார் வரும்பொழுதும் நிச்சயமாக அவர் எவரையுமே தள்ளிவிட்டதாக நான் அறியவேயில்லை.

அதே நேரத்திலே எமது நாட்டில் உள்ள ஒவ்வொரு மறைமாவட்டங்களையும் பொறுத்தவரையில் மன்னார் மறைமாவட்ட சூழமைவானது வித்தியாசமாகத் தெரிகின்றது. இங்கே வாழுகின்ற மக்களில் அநேகமானோர் கத்தோலிக்க சமயத்தைச் சார்ந்தவர்களாக இருக்கின்றார்கள்.

இங்கே பெரும்பாலான கிராமங்கள் கத்தோலிக்க கிராமங்களாகவே இருக்கின்றன. இந்த மறைமாவட்டத்திலே ஆயருடைய குரலானது மிகவும் முக்கியமான ஒன்றாக இருக்கின்றது. அத்தோடு அன்று தொடக்கம் இன்றுவரை அந்த மக்களுக்காகக் குரல் கொடுப்பது கத்தோலிக்கத் திருச்சபைதான். எனவே மற்றைய அரச குரல்களுக்கு மேலாக ஒரு ஆயருடைய குரல் நிச்சயமாக இந்த மறைமாவட்டத்தைப் பொறுத்தவரையிலே இருக்கவேண்டும்.

ஏனென்றால் மக்களுக்காக பணியாற்றுவதுதான் திருச்சபையினுடைய, ஆயருடைய பணியாக இருக்கின்றது. இன்றைய சூழ்நிலையிலே - மொழி ரீதியில் வேறுபட்ட பிளவுகளாக இருக்கின்ற சந்தர்ப்பங்களிலும் சரி, சமூக வேறுபாடுகளுக்கு மத்தியிலே வாழ்ந்துகொண்டிருக்கும்போதும் சரி பிரச்சினைகள் மக்களுக்கு தொடர்ந்து வந்துகொண்டு இருக்கும்பொழுது ஆயர் அநீதிகளுக்கு எதிராகத் தனது குரலை வெளிப்படுத்தும்பொழுதுதான் மக்களுக்கு ஒரு ஆறுதல் கிடைக்கும். இல்லையென்று சொன்னால் மக்கள் முழுவதுமாக அழியக்கூடிய ஒரு சூழல் ஏற்பட்டிருக்கும். எனவே ஆயர் அவர்கள் உண்மைக்குசாட்சியம் பகரும் வேளையிலே மற்ற இடங்களில் இருந்து பார்க்கும்போது வேறுபட்ட ஒரு கண்ணோட்டத்தில்தான் தெரியும்.

**இன்றைய திருச்சபையின் நற்செய்திப்பணியிலே ஊடகங்களின் பங்களிப்பு பற்றிய கருத்துக்கள்.**

கேள்வி :

*ஈழத்து கத்தோலிக்கத் திருச்சபையிலே அதாவது இலங்கை தமிழ் மறைமாவட்டங்களைப் பொறுத்தவரையில் நற்செய்திப் பணியிலே ஊடகங்களினுடைய பயன்பாடு எப்படி இருக்கின்றன என்று நீங்கள் கருதுகின்றீர்கள்?*

*பதில்:*

இது மிகவும் முக்கியமான ஒரு கேள்வி. நான் ஒரு தியான யோக சபையிலே இருந்தாலும்கூட திருச்சபையின் வளர்ச்சியிலே சிறு வயதில் இருந்தே மிகவும் ஆர்வம் உள்ளவனாக இருந்து வந்துள்ளேன். ஆகவே நான் அடிக்கடி இதைப்பற்றி சிந்திப்பதுண்டு. ஊடகத்துறையோடு சம்மந்தப்பட்ட ஒரு சில குருக்களோடுகூட நான் இது தொடர்பாகப் பேசுவதுண்டு. ஏனென்றால் எங்களுடைய சபையினுடைய பணியின் தன்மை வேறு. அப்படியான சூழ்நிலையிலே மற்றவர்களை - ஊடகத்துறை சார்ந்தவர்களை ஊக்கப்படுத்துவது என்னுடைய சுபாவம்.

ஊடகத்துறையையும் மறைபரப்புப் பணிகளையும் பார்க்கும் போது இன்றைய நாளிலே உலக நாடுகளின் வெவ்வேறு திருச்சபைகள் இவ்விடயத்தில் மிகவும் முன்னேறி இருக்கின்றன. நேற்று திருத்தந்தை என்ன சொன்னார் என்பதை இன்று நாம் கொம்பியூட்டர் மூலம் அறியக்கூடியதாக இருக்கின்றது.

இன்றைய சூழ்நிலையிலே நம்முடைய கத்தோலிக்கத் திருச்சபையைப் பொறுத்தவரையிலே இந்த ஊடகத்தின் பயன்பாடு மிகவும் குறைவாக உள்ளமை கவலைக்குரிய விடயம். எனவே ஊடகத்துறையை நாம் நன்றாக பயன்படுத்த வேண்டும் என்பது என்னுடைய எண்ணமும் ஆசையும்.

கேள்வி :

*அச்சு ஊடகத்துறையான மன்னா பத்திரிகை கடந்த ஒன்பது வருடங்களாக மன்னார் மறைமாவட்டத்திலே பத்திரிகை வடிவத்திலே தொடர்ச்சியாக வெளிவந்து கொண்டிருக்கின்றது. இதனுடைய வளர்ச்சியைப் பற்றி அல்லது இன்னும் இதிலே முன்னேற்றம் காணக்கூடிய விடயங்களைப் பற்றி உங்களுடைய கருத்துக்களைச் சொல்லுங்கள்?*

*பதில்:*

மன்னாப் பத்திரிகை ஆரம்பித்த நாளில் இருந்தே அது படிப்படியான வளர்ச்சியை கண்டுகொண்டு வந்துள்ளதை நான் அறிவேன். அதிலும் இன்றைய நாளிலே இது மிகவும் ஒரு உயர்ந்த நிலைக்கு வந்துகொண்டிருக்கின்றது.

மன்னா பத்திரிகை இந்திய நாட்டிலும், வெளிநாடுகளிலும்கூட விநியோகிக்கப்படுகின்றது. அங்குள்ள எனது நண்பர்கள் மன்னா பத்திரிகை பற்றி என்னிடம் கூறியிருக்கின்றார்கள். கொழும்பிலும்கூட பல துறவிகளும் என்னுடன் பேசியவர்களும் இந்த மன்னாப் பத்திரிகை பற்றி அதிகமாகப் பேசியிருக்கின்றார்கள். மன்னா தங்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக உள்ளதாகச் சொல்லி இருக்கின்றார்கள். இந்த நாட்டு செய்திகளையும் வெவ்வேறு மறைமாவட்டத்தின் செய்திகளையும் அறியக்கூடியதாகவும் அதேவேளை பொதுவான சிந்தனைகளை, படிப்பினைகளை வழங்கக்கூடிய ஒரு நிலையில் மன்னா வெளிவருகின்றது எனப் பலரும் சொல்லுகிறார்கள்.

அதேவேளையிலே நானும் மன்னாவைத் தவறாமல் பெற்று வாசிக்கின்ற ஒருவன். நானும் மன்னாவை எடுத்தவுடனே வாசிப்பதுண்டு. அதனுடைய செய்திகளை துணுக்குகளை வாசித்து மகிழ்ச்சியடைவதுண்டு. எனவே இந்த ரீதியிலே இதனுடைய பொறுப்பாளராக இருக்கின்ற அருட்பணியாளர் நேசன் அடிகளாருக்கு என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன். அவருடைய முயற்சி நன்றாக வளர்ந்துகொண்டிருக்கின்றது. அது தொடரப்பட வேண்டும் என என்னுடைய செபத்தில் நாளாந்தம் மன்றாடுகின்றேன்.

**செபமாலைத்தாசர் சபையின் வளர்ச்சி மற்றும் இருப்பு நிலை சார்ந்த விடயங்கள்**

கேள்வி:

*உங்களுடைய சபையின் வளர்ச்சி, குறிப்பாக இந்தியாவில் எந்த இடங்களில் உங்களுடைய மடங்கள் இருக்கின்றன எனச் சொல்ல முடியுமா?*

*பதில்:*

எங்களுடைய இந்த சபையைப் பொறுத்தவரையிலே தோமஸ் அடிகளாருடைய நோக்கம் இலங்கை நாட்டிலும், இந்திய நாட்டிலும், இன்னும் ஒவ்வொரு மறைமாவட்டத்திலும் இச்சபை பரவவேண்டும் என்பதாகும். அதற்குப் பிற்பாடு மற்றைய இடங்களிலும், நாடுகளிலும் தேவைக்கேற்ப இச்சபை பரவவேண்டும் என்று அவர் விரும்பியிருந்தார். எனவே அதன்படி இலங்கை நாட்டிலே எமது சபை வளர்ந்துகொண்டு வருகின்ற காலத்திலே - அவர் இருக்கின்ற காலத்திலேயே இந்தியாவிலே வட இந்தியாவிலும் தென்னிந்தியாவிலும் எமது மடங்கள் ஆரம்பிக்கப்பட்டன. தென்னிந்தியாவிலே தூத்துக்குடி மாவட்டத்திலேதான் எமது மடம் முதன் முதல் ஆரம்பிக்கப்பட்டது.

றோச் ஆண்டகை அவர்கள் தூத்துக்குடியிலே ஆயராக இருந்தபொழுது அவர் தோலகட்டிக்கு வந்து தோமஸ் அடிகளாரைச் சந்தித்து எமது சபையின் வாழ்வை நன்றாக உணர்ந்துகொண்ட பிற்பாடு அந்த வாழ்வை தன்னுடைய மறைமாவட்டத்திலே ஆரம்பிக்க வேண்டும் என்று தோமஸ் அடிகளாரைக் கேட்டிருந்தார். அதன் பிற்பாடு தூத்துக்குடி மறைமாவட்டத்தில் பனிமய மாதா என்ற ஆலயத்தின் பங்குத்தந்தையாக இருந்த அருட்தந்தை அந்தோனி சூசைநாதன் அவர்கள்தான் முதன் முதலாக இந்த செப தப வாழ்வை வாழ வேண்டும் என்றும் எமது சபையில் சேரவேண்டும் என்றும் தனது ஆயருடைய உத்தரவைப் பெற்றுக்கொண்டு தோலகட்டிக்கு வந்து தோமஸ் அடிகளாரின் அடியிலே இருந்து பயிற்சிபெற்று மீண்டும் இந்தியாவிற்குச் சென்று அங்கு இந்த சபையை ஆரம்பித்தார்.

இந்தியாவிலே இன்று தமிழ் நாட்டிலே தமிழ் பேசுகின்ற பகுதியிலே ஆறு ஆச்சிரமங்களும் அதேவேளையிலே இந்தி பேசுகின்ற வட இந்தியாவிலே இமயமலை அடியிலும், மத்திய பிரதேசம், ஓரிசா என்னும் இரண்டு மாவட்டங்களிலுமாக இப்பொழுது நான்கு ஆச்சிரமங்கள் நிறுவப்பட்டுள்ளன. அங்குள்ள துறவிகள் எல்லோரும் இந்தி பேசுகின்றவர்கள். அங்குள்ள ஆயர்கள் எல்லோரும் இந்த வாழ்வுக்கு மிகவும் ஒத்துழைப்புக் கொடுக்கின்றார்கள்.

அதேபோல தோமஸ் அடிகளார் வாழ்ந்து கொண்டிருக்கின்றபொழுதே கேரள மாநிலத்திலே எமது சபை ஆரம்பிக்கப்பட்டது. எங்களுடைய சபையிலே முதற்குருக்கள் கேரளாவைச் சார்ந்தவர்களாகத்தான் இருந்தார்கள். எனவே அந்த குருக்களினுடைய வளர்ச்சியோடு இன்று அந்த கேரள மாநிலத்திலே மூன்று பெரிய மடங்கள் ஆரம்பிக்கப்பட்டு இன்றும் அழைத்தல்கள் வந்துகொண்டிருக்கின்றன.

அத்தோடு பெங்களூர் கர்நாடக எஸ்ரேட், கர்நாடக கார்மலகம் என்ற இடத்திலே எங்களுடைய தலைமை மடம் அமைக்கப்பட்டிருக்கின்றது. அதற்கு பக்கத்திலேயே இன்னுமொரு ஆச்சிரமம் இருக்கின்றது. அது முதலிலேயே ஆரம்பிக்கப்பட்டது. அதை ரொசேரியன் ரெய்னிங் சென்றர் என்று அழைப்பார்கள். எமது சபைக்குரிய குருத்துவப் பயிற்சியாளர்கள் அங்கிருந்து படிக்கின்றார்கள். எனவே இந்த கர்நாடக எஸ்ரேட்டிலே இரண்டு மடங்கள் இருக்கின்றன. அங்கு கன்னட மொழி பேசப்படுகின்றது. அதேபோல ஆந்திராப் பிரதேசத்தில் தெலுங்கு பேசுகின்ற இடத்திலேயும் ஒரு ஆச்சிரமம் இருக்கின்றது.

இப்படியாக பல ஆச்சிரமங்கள் இந்தியாவிலே பெரும் வளர்ச்சி கண்டுகொண்டு இருக்கின்றன. அங்குள்ள ஆயர்களும் எங்களுக்கு மிகவும் ஒத்துழைப்பு தந்துகொண்டு இருக்கின்றார்கள். எமது சபையானது அங்கு அதிகமாக பரவிக்கொண்டிருக்கின்றது. இதைப்போல இங்கும் இலங்கையிலும் எமது சபை வளர்ச்சிகண்டுகொண்டே இருக்கின்றது.

கேள்வி :

**செபமாலைத் தாசர் சபையின் உயர் தலைவர் என்ற வகையில் உங்கள் சபையை மற்றவர்கள் எப்படி பார்க்க வேண்டும் அல்லது அணுக வேண்டும் என நினைக்கின்றீர்கள.**

பதில் :

செபமாலைத்தாசர் சபை நம்முடைய நாட்டிலே ஏற்படுத்தப்பட்ட ஒரு துறவற - தியான யோக சபை. ஆகவே இது இந்த சபையைச் சார்ந்தவர்களுடைய சபை மட்டுமல்ல. இலங்கை நாட்டிலே அல்லது இந்திய நாட்டிலே வாழுகின்ற ஒவ்வொருவருமே இது எங்களுடைய சபை என்ற உணர்வைக் கொண்டிருக்க வேண்டும். எந்த துறவற சபையைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், எந்த மறைமாவட்டத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் எந்த மறைமாவட்டத்தைச் சார்ந்த ஆயராக இருந்தாலும் உரிமையோடு இது எங்களுடைய சபை என்று உரிமை பாராட்டக்கூடிய ஒரு சபை இருக்கின்றது என்று சொன்னால் அது செபமாலைத் தாசர், செபமாலைக் கன்னியர் சபைதான்.

தோமஸ் அடிகளாரைப் பொறுத்தமட்டிலே அவர் நம்முடைய மண்ணிலே பிறந்து நமக்கு இறை வழியைக் காட்டியிருக்கின்றார். இறையொன்றிப்பின் சக்தியை நமக்கு வெளிக்காட்டியிருக்கின்றார். அவர் நம்முடைய மண்ணிலே பிறந்தபடியால் அவருடைய வழியை நிச்சயமாக பின்பற்றக்கூடிய சக்திகளும் வரங்களும் நமக்கு இருக்கின்றன. எனவே இந்த செப வாழ்வு - இறையுணர்வு வாழ்வை நம்முடைய சொந்த வாழ்விலேயே கட்டிக் காக்கவேண்டும்.

குடும்பங்களிலும் நமது சமூகத்திலும் சமாதானம் பெருகுவதற்கும் கொலைகள் நிறுத்தப்படுவதற்கும் ஒரே ஒரு வழி நாம் எல்லோரும் செபிக்கின்ற மக்களாக மாறவேண்டும் என்பதாகும். நற்கருணை நாதருடைய பிரசன்னத்திலே மாதாவின் வழியாக செபிக்கின்ற அந்த மேலான வரத்தை நாம் அனைவரும் பெறவேண்டும் என்றும் நான் விரும்புகின்றேன்.

நேர்கண்டவர் :

உங்களுடைய சபையின் உயர் தலைவர் என்கிற இந்த புதிய பணி சிறப்பாக அமைய வேண்டும் என்று செபிக்கின்றோம். உங்களது அனுபவம் அறிவு ஆற்றல் அனைத்தையும் கொண்டு இந்த செபமாலைத் தாசர் சபையை ஸ்தாபகருடைய இலட்சியத்தில் இருந்து வழுவாமல் தொடர்ந்து கொண்டு நடத்துவீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கின்றது.

எம் அனைவரதும் விருப்பமாக இருக்கக்கூடிய தந்தை தோமஸ் அடிகளாருக்கு விரைவிலே புனிதப்பட்டம் கிடைக்கின்ற அந்த முயற்சியும் உங்களுடைய காலத்திலே தீவிரப்படுத்தப்பட்டு நிறைவை அடைய வேண்டும் என்ற எங்களுடைய விருப்பத்தையும் வெளிப்படுத்தி நிற்கின்றோம். உங்கள் உள்ளத்து உணர்வுகளை சிறப்பாக எங்களுக்கு வெளிப்படுத்தியதற்காக உங்களுக்கு நன்றி சொல்லுகின்றோம். (முற்றும்)

# Asian Mission Congrass October 18 - 22, 2006


# ஆசிய மறைத்தூதுப் பணி மாநாடு - நிகழ்வுகளின் நிழல்கள்



தாய்லாந்து நாட்டின் சியாங் மாய் நகரில் உள்ள மாநாடு நடைபெற்ற பிரமாண்டமான நட்சத்திர விடுதி.



2500 பேர் அமரக்கூடிய பிரமாண்டமான மாநாட்டு மண்டபம்.




மாநாட்டின்போது இந்திய நாட்டியக் கலைஞர்களின் நடனம்.



மாநாட்டில் திருத்தந்தையின் சிறப்புப் பிரதிநிதியாக வருகை தந்திருந்த கர்தினால் செபே அவர்களுடன் திரு. மாட்டின் டயஸ்.



கர்தினால் செபே அவர்களுடன் அருட்பணியாளர் நேசன்.





தாய்லாந்துத் திருச்சபையின் வரலாற்றை தாய்லாந்து சிறுவர்கள் நாடகமாக நடித்துக் காட்டுகின்றனர்.



மாநாடு ஆரம்பமான வேளையில் மாநாட்டுக்கு வருகை தந்திருந்த கர்தினால்மார், தாய்லாந்து நாட்டின் அரச தலைவர்கள் மற்றும் சர்வ மதத் தலைவர்கள் ஆகியோர் புகைப்படத்திற்காக மாநாட்டு மேடையில் அணிவகுத்து நிற்கின்றனர்.



மாநாட்டில் பங்கெடுத்த இலங்கை நாட்டின் பிரதிநிதிகள் 25 பேர். இதில் மறைபரப்புக் பணிகளுக்கான தேசிய ஆணைக்குழுவின் தலைவர் - பதுளை ஆயர் வின்ஸ்ரன் பெனாண்டோ, மறைபரப்புப் பணிகளுக்கான தேசிய இயக்குனர் அருட்பணி. றெஜினோல்ட், முன்னாள் இயக்குனர் அருட்பணி. ரொணி மாட்டின், இலங்கையின் துறவற சபைகளின் சார்பில் பங்கேற்ற அருட்சகோதரி சகாயராணி (தி. கு), அருட்சகோதரர் ஜெயகாந்தன் (டிலாசால் சபை) ஆகியோரும் அடங்குவர்.



வத்திக்கானில் உள்ள மறைபரப்புப் பணிகளுக்கான ஆணைக்குழுவின் உலகளாவிய தலைவர் கர்தினால் ஜவன் டயஸ் அவர்கள் திருப்பலியின்போது மறையுரையாற்றுகின்றார்.



600க்கும் மேற்பட்ட சிறுவர்கள் தாய்தாலாந்துத் திருச்சபையின் வரலாற்றை மாநாட்டு விடுதியில் உள்ள திரையரங்கில் நாடகமாக நடித்த பின்னர் கர்தினால்மாருடன் புகைப்படத்திற்காக நிற்கின்றனர். இந்நிகழ்வு அனைவரையும் கவர்ந்தமை குறிப்பிடத்தக்கது.

# Asian Mission Congrass

## ஆசிய மறைத்தூதுப் பணி மாநாட்டு அனுபவங்கள்

**மன்னார் மறைமாவட்டத்தில் இருந்து இம்மாநாட்டில் பங்கேற்ற பிரதிநிதிகளில் ஒருவரான திரு. மாட்டின் டயஸ் அவர்கள் தனது மாநாட்டு அனுபவங்களைப் பகிர்ந்துகொள்கிறார்**

கிழக்கு என்றுமே உதயத்தின் உறைவிடம்தான் . ஞானமும் அறிவும் தத்துவமும் தியானமும் சமயமும் இங்கிருந்துதான் உதயமாகின்றன!
பௌத்தமாகட்டும் இஸ்லாமாகட்டும் கொன்பியூசியமாகட்டும் ஏன் கிறீஸ்தவம்கூட கீழரைக் கோளத்தின் உதயங்கள்தான்!
ஆசிய நாட்டின் அரும் சொத்துக்கள்தான்!

ஐப்பசித் திங்கள் 19ம் நாள் தாய்லாந்து நாட்டின் உல்லாசப் பிரயாணிகளைக் கவர்ந்திழுக்கும் மலைநாட்டு நகரத்தின் கிழக்கு வானில் உதித்த ஆதவன் சியாங் மாய் (Chiang Mai) என்ற அந்த நகரத்திற்கு விடியலை மட்டும் கொண்டுவரவில்லை, ஆசிய நாடுகள் அனைத்திலும் இருந்து திரண்டிருந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட யேசுவின் சீடத்துவத்தில் பங்கேற்றுக்கொண்ட மக்களின் உள்ளத்தில் ஒளி பாய்ச்சும் நிகழ்வுக்குக் கட்டியம் கூறும் ஆதவனாகவும் உதித்தான்.

சியாங் மாய் உள்ளூர்ச் சேவை விமான நிலையத்திலிருந்து சுமார் 20 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது சியாங் மாய் நகரம். இது ஒரு மலைநாட்டு நகரமென எண்ணப்பட்டாலும் கடல் மட்டத்திலிருந்து அதிகளவு உயரத்தில் இல்லை என்பதை அதன் உள்ளூர் தட்ப வெப்ப நிலையிலிருந்து உணரக்கூடியதாக இருந்தது. கண்டி மாத்தளை கோடைக்காலச் சுவாத்தியத்தை இம்மாரி காலத்தில் உணரக்கூடியதாக இருந்தது.

### மாநாடு நடைபெற்ற விடுதி

இந்நகரம் ஒரு உல்லாசப் பிரயாண மையமாக உள்ளது என்பதற்கு இங்கிருக்கும் பல ஐந்து நட்சத்திரக் ஹொட்டல்களே சான்று. இவற்றில் முக்கியமானது லோட்டஸ் ஹொட்டல் (Lotus Hotel) 16 அடுக்கு மாடிகளைக் கொண்ட பாரிய கட்டிடத்தொகுதி. இது சுமார் ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

இதன் ஒரு பகுதி ஹொட்டலாகவும் மற்றைய பகுதி நவீன அங்காடியாகவும் (Super Market) செயற்படுகின்றது. பல்வேறு பொருட்களைச் சந்தைப்படுத்தும் பல நூறு கடைகளும் இரு சினிமாத் தியேட்டர்களும் இதற்குள் அடங்கும். இதன் தளங்கள் எல்லாம் மாபிள் பதிக்கப்பட்டு எல்லா இடங்களுமே பிசிறில்லாமல் பளிச்சென வைக்கப்பட்டிருந்தன. ஒரு மாடியிலிருந்து அடுத்த மாடிக்குச் செல்வாற்கு தானியங்கிப்படிகள் மேலுங்கீழுமாக இயங்கின.

லோட்டஸ் ஹொட்டல் 2000க்கும் அதிகமான படுக்கை அறைகளைக் கொண்டது. ஒவ்வொரு அறையிலும் இருவர் துயிலக்கூடிய நவீன படுக்கைகள், குளியல் அறை, ரெலிபோன் தொலைக் காட்சிப்பெட்டி, குளிர்சாதனப்பெட்டி போன்ற வசதிகள் கொண்டவை. அறையின் வெப்பத்தைக் கூட்டியோ குறைத்தோ வைத்துக்கொள்ளக்கூடிய இயக்கிகளும் அறையினுள்ளேயே பொருத்தப்பட்டிருந்தன.

கூட்ட மண்டபங்களே பல்வேறு அளவுகளில் பல அமைந்திருந்தன. 2500 பேர் ஒரே வேளையில் அமரக்கூடிய நான்கு தட்டுக்களில் இருக்கை வசதிகளைக்கொண்ட கலை அரங்கும் இதன் ஒரு சிறப்பம்சமாகும். இக்ஹொட்டலின் 6வது மாடியில் அமைந்திருந்தது அந்தப் பிரமாண்டமான 2000 பேர் அமரக்கூடிய வசதிகளைக் கொண்ட மாநாட்டு மண்டபம். இதன் பெயர் *பாண் லான் ரொங் மாநாட்டு மண்டபம* (*Baan Lan Tong Convention Hall)*

ஐப்பசித் திங்கள் 19ம் நாள் 9.00 மணிக்கு எல்லாப் பிரதிநிதிகளும் தங்கள் காலை உணவை முடித்துக்கொண்டு பாண் லாங் ரொங் மாநாட்டு மண்டபத்தில் ஒன்றுகூடினர். திருச்சபையின் வரலாற்றில் சிறப்பாக ஆசிய திருச்சபையின் வரலாற்றில் பிரமாண்டமானதும் உன்னதமானதுமான நிகழ்வு ஆசிய திருச்சபையின் மறைத்தூது மாநாடு ஆரம்பித்த பொன்னான வேளை அது.

### ஆரம்பத் திருப்பலி

திருத்தந்தையின் சிறப்புத்தூதர் மேன்மைமிகு கருதினால் கிறசென்சியோ செப்பே (Cardinal Greseenizio Sepe) (உரோமையின் நேப்பிள்ஸ் என்ற மறைமாவட்டத்தின் பேராயர்) உட்பட 8 கருதினால்மார் 100 ஆயர்கள் பொன் நிறத்திருப்பலி ஆடை அணிந்து தங்களின் ஆயர் நிலைத் தலைக்கவசத்தை தலையிற்தாங்கி யேசுவின் திருப்பலிக்காக அணிவகுத்து மாநாட்டு மண்டபத்தில் நுழைகின்றனர்.

இவர்களோடு 600க்கும் மேற்பட்ட குருக்களும் 300க்கும் மேற்பட்ட துறவியர், பொதுநிலையினரும் திருப்பலிக்கு தயார் நிலையில் நிற்கின்றனர்.

வாழ்வில் எந்த ஆசிய மகனும், மகளும் கண்டு அனுபவித்திராத காட்சியது. தூய ஆவியின் துணைவேண்டி வேனிக்கிறேயாற்றுஸ் என்ற இலத்தீன் கீதம் இசைக்கப்படுகின்றது.

ஆயர்கள் அனைவரும் தங்கள் ஆசனங்களை அடைந்ததும் திருத்தந்தையின் மேன்மைமிகு கர்தினால் செப்பே (His Eminence Crescenzio Cardinal Sepe) ஆரம்ப உரை நிகழ்த்தி திருத்தந்தையின் கீழ்வரும் வாழ்த்துச் செய்தியை வாசித்து மாநாட்டை உத்தியோகப்பூர்வமாக ஆரம்பித்து வைத்தார்கள்.

### திருத்தந்தையின் செய்தி

எமது வணக்கத்திற்குரிய சகோதரர், நேபிள்ஸ் நகர பேராயர் பரிசுத்த கத்தோலிக்க திருச்சபையின் கருதினால் கிறெசென்சியோ செப்பே அவர்களுக்கு,
இறைத்திருவுளத்தால் புனித பேதுருவைத் தொடர்ந்து திருச்சபையின் பொறுப்பை ஏற்றிருக்கும் நாம், ஆசிய மக்களைநிறைந்த நம்பிக்கையோடு நோக்குகின்றோம். இம்மக்களில் இரு வகையினரைக் காண்கின்றோம். இறைவனின் நற்செய்தியான யேசுவை அறிந்து அவரது படிப்பினைகளுக்கமைய உண்மையோடு அவரைத் தொடர்பவர்கள். ஏனையவர்கள் இறைவனின் நன்மைத்தனங்களை ஏழைகளுக்கு வாக்குப்பண்ணும் இறைவனின் நற்செய்தியான இறைவார்த்தையை அறிவிக்கும் நற்செய்தியாளர்களை இன்றும் எதிர்பார்த்திருக்கும் மக்கள் கூட்டம்.

தாய்லாந்தில் நடைபெறும் ஆசிய மறைத்தூது மாநாடு பற்றி எமக்கு அறிவிக்கப்பட்டது. மிக முக்கியமான இந்நிகழ்வு நடைபெறுவதையிட்டு நாம் அகமகிழ்கின்றோம். இதிற் பங்குகொள்ளும் குருக்களோடும் கிறீஸ்தவர்களோடும் நாம் உள்ளத்தாலும் எண்ணத்தாலும் ஒன்றிணைகிறோம்.

பாங்கொக் நகரப் பேராயர் மேன்மைமிகு மைக்கேல் கருதினால் மிச்சாய் கிற்புஞ்சு (Michael Cardinal Michai Kit bunchu) அவர்களின் வேண்டுகோளை ஆர்வத்துடன் ஏற்றுக்கொள்கின்றோம். இம்மாநாட்டிற்கு எமது உத்தியோகபூர்வ பிரதிநிதியாக கருதினால் ஒருவரை அனுப்பவேண்டுமென அவர் எம்மைக் கோரியிருந்தார். எமது உத்தியோகபூர்வ பிரதிநிதியாக நீங்களே மிகவும் பொருத்தமானவராக நாம் கருதுகின்றோம். கருதினால் அவர்களும் உங்களின் மறைபரப்புப்பணி அனுபவத்தைக் கருத்திற்கொண்டு உங்களையே முன்மொழிந்திருந்தார்கள்.

ஆகவே நாம் இக்கடிதத்தின் மூலம் தாய்லாந்தில் சியாங் மாய் (Chiang Mai) நகரில் ஐப்பசி மாதம் 19ந் திகதி முதல் 22ந் திகதி வரை நடைபெறும் ஆசிய மறையறிவிப்பு மாநாட்டிற்கு திருந்தந்தையின் சிறப்புப் பிரதிநிதியாகத் தங்களை நியமிக்கின்றோம்.

ஆகவே நீங்கள் தாய்லாந்தில் நடைபெறும் இந்த மிகமுக்கியமான இந்நிகழ்வுக்கு எமது உத்தியோகபூர்வ பிரதிநிதியாக இருப்பீர்கள். நீங்கள் திருவழிபாட்டுக் கொண்டாட்டங்களைத் தலைமை தாங்கி நடாத்தி, இம்மாநாட்டின் முக்கியத்துவத்தை விளக்கி திருச்சபையின் ஓர் அங்கமான ஆசிய திருச்சபைக்கு எமது அன்பையும் உங்கள் மறை உரையில் சொல்லுங்கள். அத்தோடு பிறமத அங்கத்தினர்களையும் ஏனைய மத நம்பிக்கையில் வாழும் மக்களையும் நமது பெயரால் வரவேற்பீர்களாக.

வணக்கத்திற்குரிய சகோதரரே! உங்களின் பிரதிநிதித்துவத்தை மாசற்ற கன்னிமரியாளின் பிரசன்னத்தில் சமர்ப்பிக்கின்றேன். இப்பாரிய கண்டத்தை அவருக்கு ஒப்புக்கொடுக்கின்றேன். இங்கு வாழ் மக்களுக்கு அவரது மகன் தனது ஆன்மீக ஆறுதலை அபரிமிதமாக வழங்கப் பரிந்துரைக்கும்படி அன்னையை மன்றாடிக் கேட்கின்றேன்.

இறுதியாக எமது நல்லெண்ணத்தின் சான்றாக தெய்வீக அருளை வழங்கும் சிறப்பு அப்போஸ்தலிக்க ஆசீர்வாதத்தை உங்களுக்கும் ஆசிய மறைத்தூது மாநாட்டில் பங்குபெறும் அனைவருக்கும் உளம் நிறைந்த அன்போடு வழங்குகிறேன்.

### திருப்பலியில் இசை

இதனைத் தொடர்ந்து மேன்மைமிகு கருதினால் ஐவன் டயஸ் (Ivan Cardinal Dias) அவர்கள் தலைமையில் கூட்டுப்பலி நடைபெற்றது. (பெருமை மிக்க கடவுளின் ஊழியன் ஒருவரின் பெயரை நான் கொண்டிருந்தது எனக்குப் பெருமையாகவும் மகிழ்வாகவும் இருந்தது.) திருப்பலிக்கு பாங்கொக் நகரிலிருந்து வருகை தந்திருந்த திருப்பாடற் குழுவினரே இசை வழங்கி கீதங்களை இசைத்தனர். மாநாட்டின் சகல திருச்சடங்குகளுக்கும் இவர்களின் இசை மெருகூட்டியது. ஆங்கில இலத்தீன் கீதங்கள் இசைக்கப்பட்டன. ஆசிய நாடுகள் அனைத்திலும் இருந்து அணிதிரண்டிருந்த மக்கள் பிரதிநிதிகள் அனைவரோடும் சேர்ந்து திருப்பலியில் பங்குகொண்டது முழு ஆசிய நாடுகளுமே ஒன்று திரண்டு இறைவனைப் புகழ்வதான உணர்வினைத் தந்து மகிழ்வித்தது.


சிற்றுண்டிப் பரிமாறல்களின்போது மட்டுமல்ல, எல்லா வகையான வழங்கல்களின்போதும் - பிரசுரங்கள் - உரைகளின் பிரதிகள், ஞாபகச் சின்னங்களை விநியோகிக்கும்போதும் இதற்கென அழைக்கப்பட்டிருந்த தாய்லாந்து நாட்டின் பிரதிநிதிகள் - இளைஞர்கள் - வளர்ந்தவர்கள் அனைவரிடமும் காணப்பட்ட பவ்வியமும் பணிவும் நம் நாட்டில் நான் எங்கும் காணவில்லை.

### மாநாடு ஆரம்பம்

சரியாகப் பதினொரு மணிக்கு (நமக்கும் தாய்லாந்திற்கும் 1.30 மணிநேர வித்தியாசம் உண்டு) ஆசிய மறைத்தூது மகாநாட்டின் நிகழ்வுகள் ஆரம்பித்தன. பாங்கொக்கின் பேராயர் மேன்மைமிகு கருதினால் மைக்கல் மிச்சாய் கிற்புஞ்சு (Cardinal Michael Michai Kitbunchu) அவர்களும் ஆசிய ஆயர் மன்றத்தின் செயலாளர் பேராயர் ஓலாண்டோ குவேடே OMI (Arch Bishop Oslando Quedo OMI) அவர்களும் வரவேற்புரைகளை நிகழ்த்தினார்கள். மாநாட்டு இசைவாக்கம் பற்றிய உரை ஆசிய மறைத்தூது மகாநாட்டின் முழுநிலை இணைப்பாளர் அருட்தந்தை மாறியோ சற்றேணியோ டயஸ் (Fr. Mario Saturnio Dias : Over all co-ordinator AMC) அவர்களால் நிகழ்த்தப்பட்டது.

இதைத் தொடர்ந்து பிலிப்பைன்ஸ் நாட்டு இம்முஸ் நகர ஆயர் மேதகு லூயிஸ் அன்ரோனியோ ஜி ரக்லே (Most. Rev. Luis Antonio Tacle) அவர்களால் ஆசிய மறைத்தூது மாநாட்டின் முன்னுரை நிகழ்த்தப்பட்டது. '*ஆசியாவில் மறைத்தூது யேசுவின் கதையைப் பிறரோடு பகிர்தல்*' என்ற தொனிப்பொருளை விளக்கியும் வலியுறுத்தியும் இதமாகவும் நகைச்சுவையோடும் எல்லோரையும் கவர்ந்திடும் வண்ணம் உரையாற்றினார்கள்.
பகல் 12. .30 மணிக்கு மதிய உணவுக்கான இடைவேளை தரப்பட்டது. மாநாட்டில் பங்குபற்றிய அனைவருக்கும் காலை,

**ஆசிய மறைத்தூது மாநாட்டின் சின்னம்**




### உணவும் விருந்தோம்பலும்

மதிய, இரவு உணவுக்கான சிட்டைகள் வழங்கப்பட்டிருந்தன. இந்த லோட்டஸ் (தாமரை) என்ற ஐந்து நட்சத்திர ஹொட்டலில் பல மாநாட்டு மண்டபங்களும் உணவு கொள்ளும் அலங்கார மண்டபங்களும் இருந்தமைபற்றி ஏலவே குறிப்பிட்டிருந்தேன். எமக்காக உணவு மூன்று மண்டபங்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. முதலாம் மாடியிலிருந்த சுதெப் பிரிவிலிருந்த கற் டொய் மண்டபம் (Kat Doi Suthep Wing 1st Floor) 2ம் மாடியில் சுதெப் பிரிவிலிருந்த சன் காம் பியாங் என்ற மண்டபம் (San Kam Pheang) 4ம் மாடியில் குவே கெயூ பிரிவிலிருந்த மியூன் காம் கொங் (Muen Kam Kong Huag Kaew Wing – 4th floor)

வழங்கப்பட்டிருந்த சிட்டைகளில் குறிப்பிட்ட அந்த உணவுக்குரிய சிட்டையை வாயிலில் காத்திருக்கும் வரவேற்பாளரிடம் வழங்கி மண்டபத்தில் நுழைந்து மேசைகளில் ஒழுங்குசெய்யப்பட்டிருக்கும் உணவு வகைகளில் உங்களுக்கு விருப்பமானவற்றை தெரிந்து உண்ணவேண்டியதுதான். அனேகமாகக் கிழக்காசிய உணவுகள்தான் இருந்தன. இந்திய இலங்கை உணவுகள் இருக்கவில்லை.

தாய்லாந்து ஒரு விவசாய நாடு என்பதோடு நெல்லும் ஒரு முக்கிய பயிராகச் செய்கை பண்ணப்படுகின்றது. அதனால் நெல்லரிசிச் சோறும் அங்கிருந்த உணவு வகைகளில் ஒன்று. பழ வர்க்கங்களும் இருந்தன. நம் நாட்டுப் பழங்கள் என்றால் மலைநாட்டில் விளையும் ஜம்பு பழம் (பச்சை நிறம் பெரியது), மூலாம் பழம் என்பன எல்லா உணவின்போதும் இருந்தன. வழங்கப்பட்ட முறைதான் வித்தியாசப்பட்டிருந்தது. நம் நாட்டு மீன் வகைகள் என்றால் இறால் கிடைத்தது. வேறு மீன்களும் இருந்திருக்கும். அவை சமைக்கப்பட்ட முறைகளில் அவை என்ன மீன் என்று அடையாளம் காண முடியவில்லை.

ஹொட்டலின் தளங்கள் எல்லாம் ஒன்றில் மாபிள் பதிக்கப்பட்டிருந்தன அல்லது கம்பளங்கள் விரிக்கப்பட்டிருந்தன. படிக்கட்டுக்கள்கூட அப்படியே.

ஹொட்டலுக்குள்ளேயே 20க்கு மேற்பட்ட தூக்கிகள் (Lift) இயங்கின. முதல் நாளில் இடங்களை அடையாளப்படுத்துவதில் சிறிது சிரமங்கள் இருந்தாலும் பழக்கப்பட்டு விட்டதும் சொந்த வீட்டில் இருப்பதுபோன்ற உணர்வு ஏற்பட்டுவிட்டது. காரணம் இடங்களை அடையாளப்படுத்திக்கொண்டது மட்டுமல்ல மாநாட்டுக்கு வந்தவர்களோடு ஏனையவர்களும் - சிப்பந்திகள் - இன்முகத்தோடும் பணிவான மொழியிலும் எப்போதும் உதவிசெய்யத் தயாராக இருந்தமைதான்.

### விசுவாசப் பகிர்வுகள்

பி. ப 2.30 மணிக்கு மீண்டும் மண்டபத்தில் ஒன்றுகூடியபோது கத்தோலிக்க விசுவாசம் எவ்வாறு ஆசிய நாட்டுக்கு கொண்டுவரப்பட்டது என்ற வரலாற்று உண்மைகள் நாட்டிய நாடகமாக மாநாட்டு மண்டப மேடையிலேயே எல்லோரையும் கவரக்கூடிய வகையில் அரங்கேறியது. 15ம் நூற்றாண்டின் ஆரம்பப்பகுதியில் போர்த்துக்கேயரின் ஆசிய வருகையோடு கத்தோலிக்க விசுவாசம் ஆசியாவுக்குக் கொண்டுவரப்பட்டது என்பது நாம் எல்லோரும் அறிந்ததே.

ஆசியா என்று எண்ணிப்பார்க்கும்போது அது இந்தியா இலங்கை அதைச் சூழவரவுள்ள நாடுகள் என்று எண்ணிப்பார்க்க முடியாது. இது ஒரு பரந்த விரிந்த கண்டம். பல நாடுகள், பல்லின மக்கள், பல்வேறு மொழிகள் கலாச்சாரங்கள், மதத்தழுவல்கள் கொண்ட கண்டம்.

மேற்காசியாவின் ஒரு சிறிய நிலப்பரப்பான மத்தியதரைக்கடலின் கிழக்குக் கரையோரத்தில் உள்ள பலஸ்தீனத்தில் பிறந்த கிறிஸ்தவம் கண்டங்களின் எல்லைகளைக் கடந்து 15ம் நூற்றாண்டுவரை ஐரோப்பாவில் வியாபித்து ஐரோப்பாவின் மேற்குக்கரை நாடான அத்லாந்திக் சமுத்திரத்தின் கிழக்குக் கரையிலுள்ள போர்த்துக்கல் நாட்டிலிருந்து நமது கண்டத்திற்கு அளிக்கப்பட்டிருக்கின்றது.

இதனைத் தொடர்ந்து மாலை 3.00 மணிக்கு ஆசிய திருச்சபையின் பல்வேறு நிலையிலுள்ளவர்களின் விசுவாசப் பகிர்வு இடம்பெற்றது. ஆயர் ஒருவர், அருட்சகோதரி ஒருவர், பொதுநிலையினர் மூவர் தங்களின் விசுவாசப் பகிர்வை நிகழ்த்தினர்.

இவர்களின் இந்தப்பகிர்வு கிறீஸ்து நம் ஒவ்வொருவருக்கும் எவ்விதம் விசுவாச அனுபவத்தைத் தந்துள்ளார் என்பதை இரைமீட்டலுக்கு தூண்டுகோலாயிற்று. புனித மத்தேயு தனது நற்செய்தியில் இறுதியில் குறிப்பிட்டுள்ள வார்த்தைகள்
நிறைவேற்றப்பட்டுள்ளமையைத் தொட்டுக் காட்டுகிறது. "விண்ணிலும் மண்ணிலும் அனைத்து அதிகாரமும் எனக்கு அருளப்பட்டிருக்கின்றது. எனவே நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் என் சீடராக்குங்கள் இதோ உலகம் முடியும் வரை எந்நாளும் நான் உங்களோடு இருக்கின்றேன்."

கிறீஸ்து எம்மோடு உண்மையாகவே இருக்கின்றார் என்பதை இந்த மகாநாட்டில் நான்கு நாட்களிலும் உணரமுடிந்தது. நாடுகளின் எல்லைகளைக் கடந்து மொழி, இன, நிற, அரசியல் பேதங்களைத் தாண்டி மலைகளுக்கும் பள்ளத்தாக்குகளுக்கும் மேலாக கிறீஸ்தவ விசுவாசம் நம் எல்லோரையும் ஒரே தந்தையின் பிள்ளைகளாக இணைத்திருப்பதை உணரமுடிந்தது. அந்த உணர்வின் வெளிப்பாடு ஒவ்வொருவரின் விழிகளிலும் சுடர்விட்டது. (அனுபவம் அடுத்த இதழிலும் தொடரும்)

# வாழ்வுதயம்

VALVUTHAYAM (Caritas - Mannar)

"நான் தாகமாய் இருந்தேன் என் தாகத்தை தணித்தீர்கள்"

VALVUTHAYAM (Caritas - Mannar)

போஷகர்
அதிவந்தனைக்குரிய
ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை

இயக்குனர்
அருட்தந்தை பெப்பி சோசை

Mannar Diocesan Centre For Justice, Peace And Human Development - Valvuthayam (Caritas - mannar), No. 17, Main Street, Mannar - Sri Lanka T.P: 023 - 2232140, Fax: 023-2232893, E-mail: valvum@slthet.lk


## உள்ளத்து சமாதானமே நிரந்தர சமாதானம்

### வவுனியா இளைஞர் சமாதானக் கருத்தமர்வில் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி

அண்மையில் 15-10-2006 அன்று வாழ்வுதய சமாதான செயற்றிட்ட பிரிவினரால் வவுனியா மாவட்ட இளைஞர் யுவதிகளுக்கு சமாதானம் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தமர்வு வவுனியா இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அவ்வேளையில் வளவாளராக கலந்துகொண்டு உரை நிகழ்த்தும்போது வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி திரு. பேர்னாட் அவர்கள் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில், சமாதானம் என்பது விற்பனையாகும் பொருள் அல்ல. மாறாக சமாதானம் என்னும் ஊற்று எமது உள்ளத்தில்தான் இருக்கிறது. நாம் முதலில் எமது குடும்பங்களிலும், சகோதரங்களிலும், அயலவர்களிலும், நண்பர்களிலும், ஏழை மக்களிலும் சமாதானத்தை காண வேண்டும். அப்போது சமாதானம் தானாகவே எம் மத்தியில் வந்து சேரும் என்று கூறி அன்றைய நாள் விழிப்புணர்வுக் கருத்தமர்வை ஆரம்பித்தார்.

இந்நிகழ்வில் மன்னார் வாழ்வுதய இயக்குனர் அருட்தந்தை எஸ். ஜே. பெப்பி சோசை அவர்களும், வவுனியா மறைக்கோட்ட முதல்வர் அருட்பணி. செபமாலை அடிகளார் மற்றும் வாழ்வுதய பணியாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். இச்சமாதானக் கருத்தமர்வு காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் 3.30 மணியளவில் நிறைவுபெற்றது. இதில் வவுனியா மாவட்ட இளைஞர் யுவதிகள் 84 பேர் கலந்துகொண்டு பயன் அடைந்தனர்.

## இலவச தொழில் நுட்பப் பயிற்சி

வாழ்வுதயத்தின் தொழில் நுட்ப பயிற்சிப் பிரிவினரால் நடாத்தப்படும் இலவசமான தொழில் நுட்பப் பயிற்சிக்கு புதிதாக இருபாலாரும் இணைத்துக்கொள்ளப்படுகின்றனர். இப்பயிற்சியில் இருபாலாரும் அடங்கலாக 14 வயது தொடக்கம் 18 வயதிற்கு உட்பட்டவர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். இவர்களுக்கான அனைத்துத் தொழில் பயிற்சிகளும் I LO வின் நிதியுதவியுடன் வாழ்வுதயத்தால் மேற்கொள்ளப்பட இருக்கின்றன.

### இப்பயிற்சி நெறிகளும் பயிற்சி நடைபெறும் பிரதேசங்களும்:

| | | | |
|---|---|---|---|
| 1. | கணணி வன், மென் பயிற்சி | 06 மாதங்கள் | வாழ்வுதயம் |
| 2. | அச்சகப்பயிற்சி | 06 மாதங்கள் | வாழ்வுதயம் |
| 3. | தையல் பயிற்சி | 06 மாதங்கள் | பேசாலை |
| 4. | தையல் பயிற்சி | 06 மாதங்கள் | எருக்கலம்பிட்டி |
| 5. | வீட்டு மின்னிணைப்பு பயிற்சி | 06 மாதங்கள் | நானாட்டான் |
| 6. | வீட்டு உபகரணம் திருத்துதல் | 06 மாதங்கள் | வாழ்வுதயம் |

இவ்வாறான பயிற்சிகளில் கலந்துகொள்ளும் இருபாலாருக்கும் தொழில்சார் பயிற்சி சான்றிதழ்கள் மற்றும் 5000/= பெறுமதியான உபகரணத் தொகுதிகள் மற்றும் சுயதொழில் ஊக்குவிப்புக்காக I LO ஸ்தாபனத்தினால் கடன் தேவைப்படும் பயனாளிக்கு கடனுதவிகள் போன்றவைகளையும் வழங்கப்படவுள்ளன. இப்பயிற்சி நெறி மூலம் எமது இளம் சமுதாயத்தின் பொருளாதார வளத்தை மேம்படுத்த முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

## கிராமிய விழிப்பூட்டல் குழுக்களுக்கான வலுவூட்டல் செயலமர்வு

மன்னார் தீவுப்பிரதேச கிராமிய விழிப்பூட்டல் குழுக்களுக்கான வலுவூட்டல் செயலமர்வு அண்மையில் வாழ்வுதய நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதில் 58 குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டு பயன் அடைந்தனர். இக்கருத்தமர்வில் வாழ்வுதய இயக்குனர் அருட்தந்தை S. J. பெப்பி சோசை அடிகளார் கலந்துகொண்டு பல்வேறு கருத்துக்களையும் வழங்கினார்.

இவ்வலுவூட்டல் செயலமர்வில் சமூக அபிவிருத்தி தொடர்பான கருத்துரையினை வாழ்வுதய தொழிற்பயிற்சிப் பிரிவு இணைப்பாளர் திரு. நீக்கிலஸ் துரம் வழங்கினார். பொருளாதார அபிவிருத்தி தொடர்பான கருத்துரையினை வாழ்வுதய கிராமிய விழிப்பூட்டல் பிரிவு இணைப்பாளர் திரு. அ. அன்ரன் ராஜகாரியர் (ராஜன்) வழங்கினார். மதிய உணவின் பின் *திறனை வளர்த்தல்* என்ற தலைப்பில் மன்னார் தீவு பிரதேச ஊக்குவிப்பாளர் திரு. ஜோர்ஜ் குரூஸ் அவர்கள் கருத்துரையினை வழங்கினார். இவ்வலுவூட்டல் கருத்தமர்வானது சிறு விளையாட்டுக்கள் மூலமும், குழு கலந்துரையாடல்கள் மூலமும் சிறப்பாக நடாத்தப்பட்டது.

## சமூக ஒற்றுமையை கட்டி எழுப்புங்கள்

### – இயக்குனர் அருட்பணி எஸ். ஜே. பெப்பி சோசை அடிகளார் –

கடந்த மாதம் வாழ்வுதய கிராமிய விழிப்பூட்டல் குழுக்களுக்கான மக்கள் அமைப்பு ஒன்றுகூடல் மன்னார் வாழ்வுதய கேட்போர் கூடத்தில் நடைபெற்றபோது குழுச் செயற்பாடுகள் மூலம் சமூக ஒற்றுமையை கட்டியெழுப்புங்கள் என வாழ்வுதய இயக்குனர் கூறினார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில் வாழ்வுதய கிராமிய விழிப்பூட்டல் குழுக்கள் எமது மறைமாவட்டத்தின் அனைத்துப் பங்குகளிலும் ஆரம்பித்து குழுக்களைப் பரவலாக்கி குழுச் செயற்பாடுகளை வலுப்படுத்த வேண்டும். அப்போதுதான் நாம் எமது சமூக ஒற்றுமையைப் பலப்படுத்த முடியும். சமூக, பொருளாதார, கலாச்சார ஆன்மீக செயற்பாடுகளை இக்குழுக்களிடையே நாம் வளர்த்தெடுப்பதற்கு மென்மேலும் எம்மை அர்ப்பணித்து பணிசெய்ய வேண்டும் என்று கூறினார்.



அண்மையில் செயற்கைக் கால்கள் இரண்டையும் பெற்ற பயனாளி திரு. செல்வக்குமாருடன் வாழ்வுதயப் பணியாளர்கள். கால்கள் இரண்டையும் இழந்து தற்பொழுது வாழ்வுதயத்தால் செயற்கைக் கால்களைப் பெற்ற திரு. செல்வக்குமாரின் 10 வயதுத் தோற்றம்.

## வாழ்வுதயம் அர்ப்பணிப்புள்ள ஒரு ஸ்தாபனம்

### செயற்கைக் கால் பெற்ற பயனாளி கூறுகின்றார்

அண்மையில் வவுனியா தம்பனைச் சோலை என்னும் கிராமத்தில் வசிக்கும் சிவலிங்கம் செல்வக்குமார் என்னும் பயனாளி தனக்கு தேவையான இரண்டு செயற்கை கால்களையும் வாழ்வுதயத்தில் இலவசமாக பெற்றுக்கொண்டபோது மன்னார் வாழ்வுதயம் அர்ப்பணிப்புள்ள ஓர் தொண்டு ஸ்தாபனம் எனக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில் வாழ்வுதயத்தின் பணிகளைப் பற்றி தங்களைப் போன்ற சில மக்களுக்குத் தெரியாது என்றும் தற்போது வவுனியா ORHAN நிறுவனம் ஊடாக அறிமுகமாகி இச்செயற்கைக் காலை வாழ்வுதயத்திடம் இருந்து பெற்றதாகவும் 1993ம் ஆண்டு தனக்கு 10 வயது நடப்பாண்டில் வவுனியா தாண்டிக்குளம் பிரதேசத்தில் புதைந்திருந்த (செல்) குண்டை தான் புரட்டி எடுக்க முற்பட்ட வேளையிலேயே தனது இரண்டு கால்களையும் இழந்ததாகவும் கூறினார். அன்று மற்றுறொரு நிறுவனம் ஊடாக அல்மினிய செயற்கை காலைப் பெற்றதாகவும், தற்போது வாழ்வுதயத்தின் ஊடாக மிகவும் தரமான செயற்கைக் காலை பெற்றதாகவும் கூறினார்.

இவர் தற்போது திருமணமாகி மனைவியுடன் வசித்து வருகின்றார். இப்பயனாளி மிகவும் திறமையாக நன்நீர் மீன்பிடித் தொழிலை தற்போது செய்து வருகின்றார். இவற்றைவிட ORHAN நிறுவனம் ஊடாக சிறு பொதிகள் (Bag) போன்றவைகளையும் தயாரித்து விற்பனை செய்து வருகின்றார். என்பது குறிப்பிடத்தக்கது.

## கறிற்றாஸ் சிறிலங்காவின் மன்னார் விஜயம்



அண்மையில் கொழும்பு கறிற்றாஸ் (SEDEC)இல் பணிபுரியும் புனர்வாழ்வு புனரமைப்பு பிரிவின் ஆலோசகர் திருவாளர் பற்றிக் சறிங்கொன அவர்களும், புனர்வாழ்வு புனரமைப்பு பிரிவின் நிதி அலுவலர் செல்வி காசியா அவர்களும் (கறிற்றாஸ் - மன்னார்) வாழ்வுதயம் நிறுவனத்திற்கு வருகை தந்தனர். இவர்கள் வாழ்வுதய நிறுவனம் மேற்கொள்ளும் புனர்வாழ்வு புனரமைப்பு செயற்பாடுகளை நேரில் பார்த்து சம்மந்தப்பட்ட பணியாளர்களுடன் கலந்துரையாடலிலும் ஈடுபட்டனர். அத்தோடு வாழ்வுதய நிதிப் பிரிவுப் பணியாளர்களுடனும் கலந்துரையாடல்கள் இடம்பெற்றது. இறுதியில் வாழ்வுதயத்தின் அனைத்து பிரிவுப் பணியாளர்களுடனும் இயக்குனர் தலைமையில் சிறு ஒன்றுகூடலும் இடம்பெற்றது.

## உலக உள நல தினத்தை முன்னிட்டு நடைபெற்ற பயிற்சி பாசறை

அண்மையில் வாழ்வுதய உளவள ஆற்றுப்படுத்தல் பிரிவினரால் தோட்டவெளியில் உலக உள நல தினத்தை முன்னிட்டு தோட்டவெளி கிராம இளைஞர் யுவதிகளுக்கு பயிற்சிப் பாசறை ஒன்று நடாத்தப்பட்டது. இதில் 65ற்கும் மேற்பட்ட இளைஞர் யுவதிகள் கலந்துகொண்டு பயன் அடைந்தனர். இப்பயிற்சிப் பாசறை உளவள ஆற்றுப்படுத்தல் என்ற கருப்பொருளை மையமாக வைத்து நடைப்பெற்றது. இப்பயிற்சியை வாழ்வுதய இயக்குனர் அருட்தந்தை பெப்பி சோசை அடிகளார் ஆரம்பித்து வைத்தார்.



அண்மையில் வவுனியா இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற சமாதான விழிப்புணர்வு கருத்தமர்வு.



கடந்த மாதம் வாழ்வுதய கிராமிய விழிப்பூட்டல் குழு உறுப்பினர்களுக்கு வலுவூட்டல் செயலமர்வு வாழ்வுதய மண்டபத்தில் நடாத்தப்பட்டபோது.

# கதையும் கருத்தும் களமும்

அருட்பணியாளர். அன்புராசா அ.ம.தி



ஒரு பெற்றோர் தமது மகனுக்குத் திருமணம் செய்து வைப்பதற்காகப் பெண் பார்க்கப் புறப்பட்டார்கள். எவ்வளவு சீதனம் அதிகமாகக் கொடுக்கிறார்களோ அங்கு திருமணப் பேச்சை ஆரம்பிக்கலாம் என்ற தோரணையில் செயற்பட்டார்கள்.

இவ்வாறு போனபோது ஒரு குடும்பத்தில் திருமண வயதடைந்த மூன்று பிள்ளைகள் இருந்தார்கள். மூத்தவளைத் திருமணம் செய்துகொடுத்த பின்னரே ஏனையவர்களுக்குத் திருமணம் செய்துவைக்கலாம் என அவர்கள் நினைத்ததால் அவர்களில் யாருமே மணம் முடிக்கவில்லை. இப்போது மூன்று பேரில் எவரையாவது கட்டிக்கொடுக்க பெற்றோர் ஆயத்தமாயிருந்தார்கள். எனினும் மூத்த பிள்ளையை முதலில் கரையேற்றிவிட வேண்டும் என்பதால் சீதனத்தை சற்றுக் கூடுதலாகக் கொடுக்கலாம் என்றிருந்தார்கள்.

பெண் பார்க்க வந்த தாய், தந்தையிடம் பெண் பிள்ளைகளின் தந்தை, “வீட்டில் மூன்று பிள்ளைகள் இருக்கினம். மூத்தவளைத்தான் முதலில் கட்டிக்கொடுக்க விரும்புறம். அப்படி அவளைப் பிடிக்கவில்லை என்றால் மற்ற இரண்டு பிள்ளைகளில் யாரையாவது கொடுக்கவும் தயாராய் இருக்கிறம். கொடுக்கப்போற சீதனத்தையும் அறிஞ்சிருந்திகள் எண்டால் பேச்ச ஆரம்பிக்க உதவியாக இருக்குமல்லோ!.....” என்று கூறியவர், “25 வயதுப் பிள்ளைக்குப் பத்து லட்சமும், 30 வயதுப் பிள்ளைக்கு பதினஞ்சி லட்சமும், 35 வயதுப் பிள்ளைக்கு 20 லட்சமும் கொடுக்க......” என அவர் முடிப்பதற்குள் பெண் கேட்க வந்த பெண்மணி, “உங்களுக்கு 45 வயதில பிள்ளை இல்லையோ?.....” எனக் கேட்டாள்.

‘திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன’ என சிறுவயதிலிருந்தே நான் சொல்லக் கேட்டிருக்கிறேன். மன்னிக்கவும், இனிமேலும் நான் அதனை ‘REPEAT’ (றிப்பீற்) பண்ண ஆயத்தமாக இல்லை. உண்மையில் இன்று திருமணங்கள் ரொக்கத்தில்தான் நிச்சயிக்கப்படுகின்றன! இதனால்த்தான் திருமணப் பேச்சுக்களில் பல அம்சக்கோரிக்கைகளில் முதல் முக்கிய அம்சக் கோரிக்கையாக சீதனம் முன்னிறுத்தப்படுகின்றது.

திருமணத்தில் பார்க்கப்பட வேண்டிய மிகவும் முக்கியமான மனப்பொருத்தம், குணநலன், விருப்பம் போன்றவை பின்தள்ளப்பட்டு அல்லது முற்றாகவே நீக்கப்பட்டு காசும், காணியும், நகையும், வீடும் முன்னிறுத்தப்படுவதனால் திருமணம் என்ற பந்தம் - உறவு பண்டமாற்றுப் பொருள்போல கையாளப்படுகிறது.

இது கணனி யுகம், எதற்கெடுத்தாலும் ‘கொம்பியூட்டர்’ (Computer) அந்த வகையில் தனக்கு எப்படியான மனைவி அமையவேண்டும் என ‘கொம்பியூட்டரு’க்கு சில தகவல்களை அளிக்கவேண்டி இருந்தது. 1. அழகாக இருக்கவேண்டும் 2. உருவம் சிறியதாக இருக்க வேண்டும் 3. மெல்லிய உடற்கட்டு இருக்கவேண்டும் 4. சுறுசுறுப்பாக இருக்க வேண்டும் 5. தேடிச்சேர்க்கும் மனோபாவம் இருக்கவேண்டும் 6. இன்பத்தை அனுபவிக்கும் ஈடுபாடு இருக்கவேண்டும் ஆகிய தகவல்களை அளித்திருந்தான். பட்டென்று ‘கொம்பியூட்டர்’, “நீங்கள் உங்கள் வரும்கால மனைவியாகத் தேடுவது சிட்டுக்குருவியை” எனப் பதிலுரைத்தது.

ஒரு விவஸ்தையே இல்லாமல் நிபந்தனை விதிப்பவர்களுக்கு சிட்டுக்குருவியைக்கூடத் துணையாகக் கொடுக்கக் கூடாது என்பதுதான் என் முடிவு. “திருமணம் என்பது விளையாட்டுக் காரியமல்ல. கடையில் காசுகொடுத்து வாங்கும் வியாபாரச் சரக்கல்ல. சிறிதுகாலம் பயன்படுத்திவிட்டு தூக்கி எறியும் பண்டமல்ல. நன்மையோ தீமையோ, சுகமோ துக்கமோ எதுவாயினும் மரணம்வரை பிரியாமல் வாழவேண்டிய ஒரு வாழ்க்கை நிலை. ஆதலால், திண்ணமுடன் ஆலோசனை செய்து, செபமும் தபமும் செய்து இறைசித்தம் எதுவென அறிந்து, நடத்தவேண்டிய காரியம்” என திருமணம் பற்றிப் பேசுகின்றபோது ஆயர் ரோச் அவர்கள் கூறுகிறார்.

இவ்வுண்மையைத்தானே “திருமணம் ஆயிரம் காலத்துப் பயிர்” என்று நம் முன்னோர் கூறியிருக்கிறார்கள். ஆகவே, இப்பந்தத்தில் இணைகின்ற ஆணும், பெண்ணும் சந்தோஷமாக வாழவேண்டும் என்று, “நூறு வருஷம் இந்த மாப்பிள்ளையும் பொண்ணும்தான் பேரு விளங்க இங்கு வாழணும்.....” என வாழ்த்துகிறது இடைக்காலப் பாடல் ஒன்று.

திருமணம் முடிந்த கையுடன் புதுத் தம்பதிகள் இருவர் உல்லாசப் பயணம் ஒன்று போனார்கள். இருவருக்குமாக பயணச்சீட்டு ஒன்றைப் பெற்றுக்கொண்டான் புதுமாப்பிள்ளை. பஸ்சின் நடத்துனர் அவர்களை மேலும் கீழுமாகப் பார்த்துவிட்டு, “இரண்டு பேர் இருக்கிறீங்க... ஒரு ரிக்கற் எடுத்திருக்கிறீங்களே!...” என வினவினான். “இல்ல... எங்க பங்கு பாதர் ‘நீங்க இனிமேல் இருவர் அல்ல ஒரே உடல்’ என்று மறையுரையில் கண்டிப்பாகச் சொல்லியிருக்கிறார். அதுதான் இரண்டு பேருக்கும் சேர்த்து ஒண்ணு....” என்று நிதானமாகப் பதில் கூறிவிட்டு இருந்தான்.

8ஆவது ஆசிய கத்தோலிக்க ஆயர் பேரவை மாநாடு 2004ம் ஆண்டு ஆவணி மாதம் இடம்பெற்றது. இம்மாநாட்டில், குடும்ப வாழ்வு பலவகைப்பட்ட தாக்கங்களுக்கு உள்ளாகி இருப்பதை திருச்சபையின் ஆயர்கள் உணர்ந்துகொண்டார்கள். குடும்ப ஒப்பந்தத்தை – உடன்படிக்கையை மணமுறிவு, கருச்சிதைவு, பாலியல் வல்லுறவு, குடும்ப வன்முறை, குடிபோதை, 3ஆவது நபரின் தலையீடு, பிரமாணிக்கமின்மை போன்றவை உருக்குலைப்பதாக சுட்டிக்காட்டி உள்ளார்கள்.

பொதுவாக, திருமண அழைப்பிதழ்களைப் பார்க்கின்றபோது, “இறையருள் துணைகொண்டு எமது புதல்வனும் புதல்வியும் திருமணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை வாழ்த்திச் செல்லுமாறு வேண்டுகிறோம்...’ என்ற பாணியில் அமைத்திருப்பார்கள். இது எதனைக் காட்டுகிறது? கடவுளின் திட்டப்படியே இவ்விணைப்பு – உறவு ஏற்படுகிறது என்பது தெரிகிறது. ஆகவேதான், ‘கடவுள் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கட்டும்’ என்ற இறைவார்த்தைகளைச் சற்று மாற்றி அமைத்து காலத்தின் கோலத்திற்கு ஏற்ப, ‘சாமியார் இணைப்பதை மாமியார் பிரிக்காதிருக்கட்டும்’ என்கின்றார்களோ?

இன்று, பல குடும்பங்களை எடுத்துப்பார்க்கின்றபோது மாமி – மருமகள் இழுபறியைத் தீர்ப்பதிலேயே பல குடும்பங்களின் பெரும் சக்தி செலவழிந்து விடுகிறது. சர்வாதிகார மாமியாரும், சண்டைக்கோழியான மருமகளும் வாய்த்தால் வீடு என்ன பாடுபடும் என எண்ணிப்பாருங்கள்! இவர்களுக்கு என்றே ஒரு உச்ச நீதிமன்றம் வேண்டும்!

திருமண பந்தத்தை – குடும்ப வாழ்வை சீர்குலைக்கின்ற காரணிகளைக் கண்டறிந்து சீர்செய்ய வேண்டியது ஒவ்வொரு குடும்பத்தினதுமான தலையாகிய கடமையும் பொறுப்புமாகும்.

ஒரு தடவை அறிஞர் பேர்னாட்ஷாவிடத்தில் உலக அழகு ராணியாகத் தெரிவுசெய்யப்பட்டவர் வந்து, “நாம் இருவரும் திருமணம் செய்தால் எவ்வளவு சிறப்பாயிருக்கும்!... எனது அழகும் உங்களது அறிவும் சேர்ந்து பிள்ளை பிறந்தால் ஆகா...” எனச் சொல்லி முடிப்பதற்குள் பேர்னாட்ஷா, “அம்மணியே, வேண்டாம். எனது அழகினையும் உனது அறியாமையும் இணைந்துவிட்டால் நிலமை மோசமாகிவிடும்!...” என்றாராம்.

திருமணம் முடித்த முதல் ஆண்டில் கணவன் பேச மனைவி கேட்பாளாம், இரண்டாம் ஆண்டில் மனைவி பேச கணவன் கேட்பானாம், மூன்றாம் ஆண்டிலிருந்து இருவரும் பேச அயலவர்கள் கேட்பார்களாம் என்று சொல்கிறார்கள்.

ஒரு கணவனும் மனைவியும் தமக்கிடையே ஏற்பட்ட பிரச்சனைக்குத் தீர்வுகாண பங்குத்தந்தையிடம் சென்றார்கள். அவர்கள் பங்குத்தந்தையோடு உரையாடிக்கொண்டிருந்தபோது அத்தந்தை வளர்க்கும் நாயும் பூனையும் விளையாடிக்கொண்டிருந்தன. இவற்றிடமிருந்து நல்ல பாடம் கற்பிக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு, “பாருங்க, எல்லா குடும்பங்களிலும் பிரச்சனை வருவதுண்டு. ஆனா, அவற்றை எத்தகைய மனநிலையோடு எதிர்கொள்கிறோம் என்பதில்தான் அப்பிரச்சனைக்கான தீர்வு தங்கியிருக்கிறது. விலங்குகளாக இருந்தாலும் இந்த நாயும் பூனையும் எவ்வளவு சந்தோஷமாக விளையாடுகின்றன...” என்று நிறைவு செய்வதற்குள் கணவன் குறுக்கிட்டு, “சேர்ந்து விளையாடு மட்டும் எல்லாம் ‘ஓகோ’தான் பாதர். அதுகட உண்மையான அன்பை அறிய கலியாணத்த செய்து வச்சிப் பாருங்க. அப்ப தெரியும்!...” என்றான்.

ஒரு முள் தன்னோடு மலர்ந்த மலரைப் பார்த்து, “நீ அழகாய் இருப்பதனால்தான் என்னை மதிக்கிறார்கள்” என்றது. மலர், “நீ எனக்கு பாதுகாப்பாக இருப்பதால்த்தான் நான் பத்திரமாக இருக்கிறேன்” எனப் பதிலளித்தது. இல்லறத்தின் தன்மை இவ்வாறல்லவோ அமைய வேண்டும்!... அமைப்போமா?...

## வாகரைவாணன் வழங்கும்

# அந்தோனியார் காவியம்

### காவியத் தொடர் – 7



சிறையென்ன செய்யும்? எண்ணச் சிறகது விரிக்கும்! வானப்
பறவையாம் பிரான்சிசுக்கு பற்றிட ஏதும் உண்டோ?
திறந்த வான் வீதி இன்பத் தேன்மலர்ச் சோலையெல்லாம்
பறந்தவன் வருவான்! தூரப் பார்வையில் கருடனாவான்.

ஆள்வது நாங்கள் எங்கள் அசிசியை! இல்லையென்றால்
மாள்வது கொள்கை! செல்வ மன்னராம் பிரபு தாளில்
தாழ்வதே இல்லை எங்கள் தாயின்மேல் ஆணை ஆணை
தூளெனப் பகைவர் என்றே துந்துபி முழக்கும் கூட்டம்!

வெறியது கொண்ட வீரர் வெற்றியே எண்ணமானோர்
குறியது தவறா வண்ணம் குதித்தனர் வாட்களோடே
நெறிமுறை இல்லைப் போரில் நிமையது வெட்டும் முன்னே
தறித்தனர் மரத்தைப்போல திரையினில் உடல்கள் வீழும்.

குருதியோ கடலாய் ஓடும் குடலது மலையாய்த் தோன்றும்
கருதிய வெற்றி இன்னும் கையது பற்றவில்லை
பொருதன படைகள்; தீயின் பொறி எழும் கண்கள் ஊடே
இறுதியை எட்டும் யுத்தம் இரண்டினில் ஒன்றே கண்டார்!

தோற்றனர் அசிசி வீரர் தோள்வலி குறைவால் அல்ல
மாற்றலர் படைகள் கோடி மற்றும் பல வாய்ப்புக் கோடி
ஆற்றலின் வடிவமான ஆண் குலம் கைதியாகும்
தோற்றனர் சிறையில் என்றால் நூதனம் உண்டுமாமோ?

கூண்டதில் வாழ்ந்த போதும் கொஞ்சமும் சோர்வேயின்றி
நீண்டதோர் உலகம் தன்னை நினைவினாற் பின்னிப் பின்னி
ஆண்டிடும் இளவல் தன்னை அநியாயமாக நோயும்
தீண்டிடும் வருடமொன்றுள் திருவுளம் அறிவார் யாரோ?

பிணியது க்ண்டதாலே பிணித்தொரு சிறையில் வைத்தோர்
பணி என எண்ணி அந்தப் பறவையைப் பறக்கச் செய்வார்
இனி என கட்டு என்றே இறக்கையை விரித்துக் கொள்வான்
தனி ஒரு உலகம் அங்கே தானவன் மூழ்கிப் போவான்!

### அழைப்பின் குரல்

தாயகம் வந்த பின்னால் தனி வழி நடவா வண்ணம்
நேயர்கள் சூழச் செல்வான் நினைத்தவையெல்லாம் செய்வான்
ஆயனே இல்லா மந்தை ஆனதைப் போலும் பிரான்சிஸ்
தீயவை நன்மை பேதம் தேர்ந்திடும் ஞானம் இல்லான்.

கோயிலில் ஓர் நாள் அசிசிக் கோமகன் இருந்தபோது
தூயவன் இறைவன் அன்புத் தனயனின் காதில் வீழ
நீயெந்தன் இல்லந்தன்னை நேர்செய வேண்டுமென்பான்
மாயமாய் வந்த வார்த்தை மனதினை மாற்றிப் போடும்.

அன்றிருந்தவனின் அற்ப ஆசைகள் அற்றுப் போகும்
கன்றது பசுவைத் தேடிக் கதறியே ஓடல்போல
நன்றவன் பாதம் தன்னை நண்ணியே செல்லலானான்
ஒன்றுமே இல்லா வாழ்வில் உள்ளமும் பதியுமாமோ?

சாக்கவன் ஆடையாக தரித்திரம் வாழ்க்கையாக
போக்கது புதுமையாக புனிதமே உள்ளமாக
பார்க்கின்ற விழிகளெல்லாம் பரதேசிக் கோலமாக
தீக்கதிர் போலும் நான்கு திசையிலும் ஒளிரலானான்

அசிசியின் வழியில் சீடர் அணியது வகுக்கலானார்
பசித்தவன் உணவைத் தேடும் பான்மையைப் போலும் மக்கள்
விசித்திரமான இந்த வேதியன் நிழலில் கூடி
வசிக்கவே முனையலானார் வையகம் வாழ்த்துப் பாடும்.

(காவியம் நீளும்......)



## மன்னா விளம்பரப் பலகை

“உலகப் பொருட்கள் எதன்மீதும் ஆசை வைக்காதே. துயரங்களுக்கெல்லாம் காரணம் ஆசைதான் என்பதை மறந்துவிடாதே.”
*தே. துஷ்யந்தி, கற்கடந்தகுளம், முருங்கன்.*

“இன்னல்களை இன்பத்துடன் ஏற்றுக்கொள்கின்ற போதுதான் தூய அன்பை உணர முடியும்.”
*அ. அனிஸ்ரா (தர்சினி), தரவன்கோட்டை, மன்னார்.*

“உங்களின் சிந்தனை எப்போதும் உயர்வானதாகவே இருக்கட்டும். இந்த உலகையே வென்று ஆளப் பிறந்தவர்கள் நாம் என்பதை நினைவில் நிறுத்தி துணிந்து செயற்படுங்கள்.” (விவேகானந்தர்)
*யே. நிலோஜினி, பொன்தீவுகண்டல்.*

“அறிவால் அறிய முடியாத விஷயங்களைக் காட்டும் ஆறாவது அறிவே ஆண்டவன் அன்பு உறவு.”
*செ. அனுபா, இல.ஏ-06, மடுக்கோவில், மடு.*

“அறிவால் ஒருவரைப் புரிந்துகொள் அல்லது அனுபவத்தால் தெரிந்துகொள் சந்தர்ப்பங்களே முக்கியம். சம்பவங்கள் அல்ல.”
*எம். பிறீம், நொச்சிக்குளம், உயிலங்குளம்.*

“உன்னை நீ நம்பினால் உலகையே ஆழலாம். விண்ணும் மண்ணும் போற்ற வாழ்ந்துதான் காட்டலாம்” - பிடித்த பாடல் வரிகள்”
அன்ரன் கொண்ஸ்ரன்ரயின், மேரி கொண்சீற்றா, இல. எம்.08, மடுக்கோயில், மடு.

“எங்கு ஒரு நூலகம் திறக்கப்படுகிறதோ அங்கு ஒரு சிறைச்சாலை மூடப்படுகிறது”
*- சுவாமி விவேகானந்தர்-*
*தே. ஜெர்மா, தரம் 13 கலை, மன்/ அடம்பன் ம.ம.வி.*

“உலகில் மிகவும் தெய்வீகமானது சக மனிதனிடம் நீங்கள் காட்டும் அன்பும் பரிவும்தான்!” - வால்ட்டேயர் -
*சந்தான் கொண்சிலா, வண்ணாகுளம், அடம்பன்.*

“பிரியத்துக்கு உரியவர்களை எல்லாம் பிரிப்பது இறைவனின் விளையாட்டு”( எனது அனுபவம்)
*எம். பிறீம், நொச்சிக்குளம், உயிலங்குளம்.*

“போதையோ வேதனை - நல் பாதையே சாதனை”
*ரீ. றூபா, பட்டித்தோட்டம், மன்னார்.*

“பிறப்பு தரித்திரமானாலும், இறப்பு சரித்திரமாகட்டும் முயற்சிகள் தவறலாம். முயற்சிக்கத் தவறலாமா?”

இந்த விளம்பரப் பலகை உங்களுக்கானது. இதில் நீங்களும் எழுதலாம், இதுபோல ‘சுருக் ‘நறுக் சுவையாய் ...... எழுதி அனுப்புங்கள்.
முகவரி :

மன்னா விளம்பரப் பலகை
மன்னா பணியகம்,
மறைக்கல்வி நிலையம்,
புனித செபஸ்ரியார் பேராலய வீதி,
மன்னார்.

# இளைஞர் பொழிவு

இளைஞர்களின் இதயத் தேடல்களுக்கு
வின்னி யோசப் அடிகளாரின்
விறுவிறுப்பான பதில்



## என் கேள்விக்கு என்ன பதில்?

*கேள்வி :* பிள்ளைகளை வீட்டில் ஏன் சந்தேகப்படுகிறார்கள்?

பதில் : வளரும் இளம் பருவத்தில் நம் மனதில் ஏற்படும் எண்ணம், ஏன் என்னை யாரும் புரிந்துகொள்ள மாட்டேன் என்கிறார்கள்? ஏன் என்னை சந்தேகப்படுகிறார்கள்? ஏன் பெற்றோர் இத்தனை கட்டுப்பாடுகள் விதிக்கிறார்கள்? போன்றவைதான்! ஏன் பிறர் செய்யக்கூடாது என்று சொல்வதை செய்ய வேண்டும் என்ற உணர்வு ஏற்படுகிறது? ஏன் மனம் அலை மோதுகின்றது? பெற்றோர்கள் நம் நலனுக்காக சொல்லுகின்ற அனைத்து அறிவுரைகளும் நம்மை அடிமைப்படுத்தி வைப்பதாகத்தான் தோன்றும். அவர்களுடைய கட்டுப்பாடுகள் நம்மை சந்தேகிப்பதாகத்தான் தோன்றும்.

பெற்றோர்கள் வாழ்க்கையை அனுபவத்திலிருந்து உணர்ந்தவர்கள். இந்த வளரும் இளமைப்பருவத்தில் பிள்ளைகளை நெறிப்படுத்தி வாழ்க்கையை வாழக் கற்றுக் கொடுக்கவில்லையென்றால் அவர்கள் வாழ்க்கை ஒழுக்கமற்று சீரழிந்துவிடுமே என்ற ஆதங்கத்தினால்தான் சில நேரங்களில் அளவுக்கு அதிகமாகவே கட்டுப்பாடுகள் விதிக்கிறார்கள். இதனால் பல நேரங்களில் நமது ஆளுமை வளர்ச்சியடையாமல் பாதிக்கப்படுகின்ற நிலை உருவாகின்றது.

ஆகவே நம்முடைய ஆளுமை சிறப்பாக அமைய இந்த இளமைப் பருவத்தை, நாம் நல்லமுறையில் புரிந்து வாழ முயற்சி செய்ய வேண்டும்.

**கேள்வி : படிக்கும் வயதில் நட்பு கூடாது என்று தாய்மார்கள் சொல்லக் காரணம் என்ன? ஏன் நண்பர்களோடு சேர்ந்தால் மாணவர்கள் கெட்டுப் போவார்களா?**

பதில் : கடவுள் நமக்குக் கொடுத்துள்ள விலைமதிக்க முடியாத கொடைகளில் ஒன்றுதான் நட்பு. வாழ்வில் நட்பை எடுத்துவிட்டால் மிஞ்சியிருப்பது உணர்வற்ற உடல்தான். மனிதன் ஒரு சமூக விலங்கு. நல்லுறவின் மூலம்தான் வாழ்க்கை நிறைவு பெறுகிறது. நீ வாழ, வளர, உயர நட்பு வேண்டும். உன்னைப் பாராட்ட, உற்சாகப்படுத்த நண்பன் தேவை. ஆகவே நட்பு கூடாது என்று தாய்மார்கள் கூறமாட்டார்கள். நல்ல நண்பனைப் பெற்றவன் வாழ்வில் சரி பாதியைப் பெற்றுக்கொண்டவன் என்பார்கள். உங்கள் பெற்றோர்கள் பயப்படுவது தீமையான நட்பு உங்களுக்கு ஏற்பட்டுவிடுமோ என்றுதான். ஏனென்றால் தீய நண்பனைத் தேர்ந்தெடுத்தால் தீமையும் இரட்டிப்பாகிவிடும். இன்று படிக்கும் மாணவர்கள் பலபேர் கெட்டுப்போவதற்குக் காரணம் தீய நண்பர்களின் பழக்கத்தால்தான். ஆகவே உங்கள் பெற்றோர்கள் இதில் எச்சரிக்கையாக இருப்பதில் தவறொன்றும் இல்லை.

நல்ல நண்பனைத் தேர்ந்தெடுத்து உங்கள் பெற்றோருக்கு அறிமுகப்படுத்துங்கள், சேர்ந்து படியுங்கள். அன்பையும் உறவையும் பகிர்ந்து ஒருவரை ஒருவர் உற்சாகப்படுத்தி, தவறு செய்யும்போது கண்டித்துத் திருத்துங்கள். கண்டிப்பாக உங்கள் பெற்றோர் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்க மாட்டார்கள்.

**கேள்வி : தந்தையே, நான் கல்லூரியில் உயர்தரம் முதலாமாண்டு பயின்று வருகின்றேன். எனக்கு எல்லா நண்பர்களும் நல்லவர்களாகவே தெரிகின்றனர். நான் எப்படி நல்லவர்களையும், கெட்டவர்களையும் கண்டறிவது? எனக்குத் தெரிந்தவரை அனைவருமே நல்லவர்களாகவே தெரிகின்றார்களே. தந்தையே உங்கள் கருத்துக்களைக் கூறுங்களேன்?**

பதில் : உங்கள் நேர்மறைச் சிந்தனையைப் பாராட்டுகிறேன். உங்களுடைய இந்த Positive thinking கினால் உங்களுடன் பழகுபவர்கள் அனைவருமே நல்லவர்களாக இருக்கலாம். கெட்டவர்கள் என்று மற்றவர்களைத் தீர்ப்பிட உங்களுக்கும் தகுதியில்லை, எனக்கும் தகுதி இல்லை. அதை கடவுள் பார்த்துக்கொள்ளட்டும்.

நம்மைத் தீமையான வழிக்கு இட்டுச்செல்கின்ற நண்பர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்களை இனம் கண்டுகொள்வது என்பது அவ்வளவு கடினமான காரியம் ஒன்றும் கிடையாது. உங்கள் கல்விக்கு இடையூறாக - ஒழுக்கமற்ற சிந்தனைக்கு, செயற்பாட்டிற்கு, தீயப்பழக்க வழக்கத்திற்கு இட்டுச் செல்கின்றவர்கள், தவறு செய்தபோதும் அதை சுட்டிக்காட்டி திருத்தாதவர்கள்தான் நீங்கள் குறிப்பிடுகிற தீய நண்பர்கள். அவர்களை இனம்கண்டுகொண்டு நல்ல நண்பனாக நீங்கள் இருந்து திருத்த முயற்சி செய்ய வேண்டும்.

---

### தாமரையின் உயரம் தண்ணீரின் உயரம்!
### உன் வாழ்க்கையின் உயரம் உன் எண்ணங்களின் உயரம்!

# முடியும் என்று சிந்தியுங்கள்

எந்த ஒரு மனிதனும் மூச்சு விடுவதால் வாழ்வதில்லை. அவன் துணிந்து செய்துள்ள நற்செயல்களால்தான் வாழ விரும்புகிறான். எல்லோரிடமும் ஏதோ ஒரு கனவோ அல்லது கடமையோ இருக்கிறது. அதை நிறைவேற்ற முடியும் என்ற எழுச்சியூட்டும் நம்பிக்கையும் இருக்கிறது. அதனால்தான் இந்த உலகில் ஒவ்வொரு மனிதனும் உயிர்வாழ விரும்புகிறான். எந்த ஒரு மனிதனும் என்னிடம் கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கள் உள்ளன. அதனால் வாழ விரும்புகிறேன் என்று சொல்வதில்லை. "எனக்கு ஒரு பெரிய கடமை, இலட்சியம், பொறுப்பு போன்றவை உள்ளன. அவற்றை எல்லாம் நிறைவேற்ற முடியும் என்று நம்புகிறேன். அதற்காகவே இவ்வுலகில் உயிர் வாழ்கிறேன்" என்பான்.

சோம்பேறியும்கூட நாளை எனக்கு வேலை கிடைக்கும், சோறு கிடைக்கும் எனவே உயிர் வாழ்கிறேன் என்பான். இப்படி எல்லோரிடமும் ஏதோ ஒரு நம்பிக்கையான எண்ணம் இருப்பதால்தான் வாழ்வில் எதிர்ப்படும் பிரச்சனைகளைக் கண்டு கலங்காமல் தொடர்ந்து வாழ்ந்து வருகிறோம். ஒவ்வொரு மனிதனும் அவன் நம்பிக்கையுடன் எதைச் சிந்தித்தானோ அதுவாகவே உருவாகி விடுகிறான்.

இரண்டு வாரங்களுக்கு ஒரு கண்டுபிடிப்பு வீதம் 1092 கண்டுபிடிப்புகளுக்குத் தொடர்ந்து கண்டுபிடிப்பு உரிமை பெற்ற ஒரே விஞ்ஞானி எடிசன்தான். அவரும் சாதாரண மனிதர்தான். மூன்று மாதங்கள்கூட பள்ளிக்குச் செல்லாதவர் எடிசன். "விநோதமான பெரிய தலை உனக்கு. உன் மண்டையில் எதுவும் ஏறாது. இனி பள்ளிக்கு வராதே' என்று



விரட்டியடிக்கப்பட்டவர்தான் எடிசன். அவருடைய உறுதியான, நம்பிக்கையான சிந்தனைகளால் எடிசன் என்ற மாபெரும் கண்டுபிடிப்பாளர் உருவானார்.

தோல்வி, பயம் போன்றவை தன் மனதில் கூடுகட்டி வசிக்காமல் பார்த்துக்கொண்டவர். அதனால்தான், தன் 59ஆவது வயதில் அவரது ஆய்வுகூடம் தீப்பற்றி எரிந்தபோது தன் மகனைக் கூப்பிட்டு, "உன் அம்மாவை அழைத்து வா. இதைப்போன்று நெருப்பு கொழுந்துவிட்டு எரிவதை அவள் பார்த்திருக்கவே மாட்டாள்" என்று சொன்னார். காரணம் தன் மனதில் தோல்வி மனப்பான்மை இடம்பிடிக்கக்கூடாது என்பதற்காகவே எடிசன் இவ்வளவு தூரம் நகைச்சுவையுடன் குறிப்பிட்டார். அன்னை தெரேசா என்றதும், 'ஏழைகளுக்கு உதவுவது' என்ற அவரின் தீர்மான எண்ணம் தான் நமக்குத் தெரிகிறது.

நாம் எதை உறுதியாக எண்ணுகிறோமோ அதன்படியே நமது வாழ்க்கையும் அமைகிறது. இதனால்தான் கால்கள் இல்லாதவரால் செயற்கைக் கால்களின் உதவியால் எவரெஸ்ட் சிகரத்தை அடைய முடிகிறது. 'எவரெஸ்டை அடையமுடியும்' என்று சிந்தித்தபடியே ஊனமுற்ற மனிதரும் அடைந்து விடுகிறார்.

ஆபாசமில்லாமல், வன்முறையில்லாமல், விறுவிறுப்பான நாவல்களை எழுதுவேன் என்று ராஜேஷ்குமார் எடுத்துக் கொண்ட உறுதி இன்றுவரை அவரை 1000 நாவல்களுக்கு சொந்தக்காரராக்கி உள்ளது. மேலும் கற்பனை வறட்சி இன்றி விறுவிறுப்பாக எழுத வைத்து வெற்றிச்சிகரத்திற்கு அழைத்துச் செல்கிறது. ராஜேஷ்குமார், 'ஆபாசமில்லாமல் அதே நேரத்தில் சுவையாக எழுதுவேன்' என்பதில் உறுதியாக இருப்பதால் அவரது ஆழ்மனம் குழப்பமின்றி பிரபஞ்ச மனத்துடன் தொடர்புகொண்டு அவர் விரும்பியபடியே எழுத வைத்துவருகிறது.

'முடியும்' என்று நீங்கள் சிந்திக்க ஆரம்பித்தால், நீங்கள் எண்ணும் எண்ணங்களை, அதற்கான வழிகளை ஆழ்மனம் பிரபஞ்ச மனத்திடமிருந்து பெற்றுத் தந்துவிடும். இதற்காக நீங்கள் ஒருமுகச் சிந்தனையுடன் சிந்திக்க வேண்டும் என்பதே முக்கியம். சார்லஸ் பிளான்டின் என்பவர் நயாகரா ஆற்றின் குறுக்கே கயிறு கட்டி அதன்மேல் நடக்க முடியும் என்று எண்ணினார். நம்பிக்கையுடன் தரையில்தான் பயிற்சி செய்தார். பிறகு நயாகரா ஆற்றின் குறுக்கே கயிற்றில் நடந்து காட்டினார்! முடியும் என்று வலிமையான சிந்தனையின் சாதனைதான் இது.

எனவே 'என்னால் முடியும். என்னால் முடியும்' என்று சொல்லி நம்பிக்கையுடன் உங்கள் இலட்சியத்தை அடைய முயற்சி செய்யுங்கள். மனதை ஒருமுகப்படுத்தி 'என்னால் முடியும், என்னால் முடியும்' என்று நம்பிக்கையுடன் சிந்திக்கும்போது பிரபஞ்ச மனதுடன் தொடர்பு ஏற்பட்டு மிகுந்த நம்பிக்கையுடன் செயல்பட ஆரம்பித்து வெற்றியும் பெற்றுவிடுவீர்கள்.

எனவே, எது ஒன்றைச் சிந்தித்தாலும் அறிவுடன் ஆழ்ந்து சிந்தித்து அது 'கிடைக்கும்', 'முடியும்' என்று நம்பிக்கையுடன் சிந்தியுங்கள். பிறகு, உறுதியுடன் செயல்படுங்கள். வெற்றி உங்களுக்கே!

---



# மதிப்பால் மதிப்பை பெறுவோம்



எஸ். றேணுகா சிமியோன், நவசன்னியாசி திருச்சிலுவை கன்னியர் மடம், வெலிமடை


உலகத்தில் நாம் தனித்தனியே பிறக்கின்றோம். தாய் தந்தை சகோதர சகோதரிகளோடு பழகுகின்றோம். குடும்பத்தோடு உறவாடுகின்றோம். உலகிலுள்ள மக்களுடன் சேர்ந்து வாழ்கின்றோம். நாட்டு மக்களில் ஒருவராக ஆகின்றோம். எனவே நாம், நல்ல குடிமக்களாக விளங்க வேண்டும். ஒவ்வொருவருக்கும் சொந்த மரியாதை, சுய கௌரவம் இருக்கின்றது. அதைப் பேணுவதில் நாம் கவனமாக இருக்க வேண்டும். நமது மரியாதை கெட்டுப்போக நாம் இடமளிக்கக்கூடாது. மனம் போனபடி நடப்பதும், ஊதாரியாகத் திரிவதும், ஒழுக்கமில்லாத செயல்களில் ஈடுபடுவதும் எமது சுயமரியாதையை நாம் இழப்பதற்குக் காரணங்களாக அமைகின்றன. உங்களை யாராவது "திருடன்" என்று சொல்வதை நீங்கள் விரும்புவீர்களா? விரும்பவே மாட்டீர்கள். சுயமரியாதை இழந்தவர்களை எவரும் மதிப்பதில்லை அவர்களுக்கு உரித்தான அந்தஸ்தையும் கொடுப்பதில்லை. நாட்டிலோ, ஊரிலோ, குடும்பத்திலோ அவர்களை கௌரவமான மனிதராக மதிப்பதும் இல்லை. பாடசாலையை எடுத்தக்கொண்டோமாகில் எத்தனையோ மாணவர்கள் இருக்கின்றார்கள். படித்த குடும்பத்தில் பிறந்தவராக இருக்கலாம். அல்லது பாமர குடும்பத்தில் பிறந்தவராக இருக்கலாம். அவர்களில் தம் மரியாதையைக் காத்துக்கொள்பவர்களே மதிக்கப்படுகின்றார்கள். ஆசிரியர்களும்கூட அப்படிப்பட்ட மாணவர்களைத்தான் கௌரவிக்கின்றார்கள். மாணவத் தலைவர் போன்ற பொறுப்பான வேலைகளையும் பதவிகளையும் கொடுக்கின்றார்கள். எவர் ஒருவர் தன் மரியாதையை காத்தும், பிறரை மதித்தும் நடக்கின்றாரோ அவரே பிறரால் புகழப்படுகின்றார்.

நல்ல பழக்கவழக்கங்களை ஆரம்பத்தில் இருந்தே கடைப்பிடித்து நடந்தால், காலப்போக்கில் அந்த நல்ல பழக்கவழக்கங்களே நம்மை நல்வழியில் வாழ வழிவகுத்துக் கொடுத்துவிடும். எல்லோருக்கும் எல்லா நேரத்திலும் மரியாதை கொடுப்போம். சாதாரண பேச்சுக்களிலும்கூட மற்றவர்களைக் கிண்டல் செய்யும் விதத்தில் எமது பேச்சு அமைந்துவிடாது மிகவும் நிதானமாக கதைக்கப் பழகுவோம்.

"இன்சொல் நண்பர் தொகையைப் பெருக்கும், பண்பான பேச்சு உன் மதிப்பை உயர்த்தும்" நட்பாகவும் பண்பாகவும் பழகுவதன் மூலம் சமூகத்திலிருந்து புறக்கணிக்கப்பட்டவனைக்கூட சிறப்பானவர்களாக மாற்ற முடியும். தன்னைப் பூரணமாக அறியாதவன் ஒருநாளும் பிறரை சரியாக அறிய முடியாது. உலகம் தெரிந்தும் உள்ளம் தெரியாதவர்கள் தமது நல்வாழ்வையே வீணடித்துக்கொள்கின்றார்கள். ஆகவே உலகம் தெரிய ஆசைப்படுவதுடன், எமது உள்ளத்தையும் அதன் உண்மையான தேவையையும் புரிந்து இயன்றவரை பூர்த்திசெய்யப் பழகிக்கொள்வோம். பிறரைப் பற்றியும் பிறர் விடையங்களைப் பற்றிய அபிப்பிராயங்களையும் நாம் கலந்துரையாடுகின்றோம். ஆனால் நம்மைப் பற்றிய அபிப்பிராயங்களை நாம் தெரிந்துகொள்ள முயற்சிக்கிறோமா?

மற்றவர்களிடம் நாங்கள் என்ன எதிர்பார்க்கின்றோம்? எம்மைப் புரிந்துகொள்ள வேண்டும். எமது திறமைகளை, ஆற்றல்களை பாராட்டவேண்டும். எம்மை மதிக்கவேண்டும் என்றுதானே? ஒன்றைச் சிந்தித்துப் பாருங்கள். நாம் மற்றவர்களுடன் எப்படி நடந்துகொள்கின்றோம்.? தற்காலத்தின் அழைப்பிற்கும் தேவைக்கும் ஏற்ப நாம் நம்மில் அன்புடையவர்களாகவும், மரியாதை உடையவர்களாகவும் இருக்க வேண்டும். எம்மை நாம் மதிக்காத நேசிக்காத போதுதான் தாழ்வுமனப்பான்மை, முரண்பாடுகள், திருப்தியின்மை என்பன உருவாகின்றன. இவற்றில் இருந்து விடுபட மூலப்பொருட்களாக அமைபவற்றை நாம் அறிந்து இருப்பது அவசியம். மரியாதை, நேர்மை, திறந்தமனம், புரிந்துணர்வு.... போன்ற பண்புகளே அவை! இவைகளில் நாம் உறுதியாக இருக்கும்பொழுதே நான் என்னில் அக்கறை காட்டுவதுடன் எச்சூழலிலும் மற்றவர்களுடன் அன்பைப் பகிரக்கூடிய தகுதி உடையவனாகின்றேன். மனநிறைவே வாழ்வு. எம்மில் உள்ள தாழ்வுமனப்பான்மையை எடுத்தெறிவோம். பிறப்பால் நாம் வேறுபட்டே பிறந்தோம் இதை முதலில் ஏற்றுக்கொள்வோம். வாழ்வு என்பது ஒரு அரும் கொடை அது நமது கையில் கிடைத்துள்ளது. அதை நன்முறையில் பயன்படுத்துவோம், வாழுவோம்!

## அர்ப்பண வாழ்வின் வெள்ளிவிழாக் காணும்
# அருட்சகோதரி சிறிய புஸ்பம்



நல்லாயன் சபையைச் சேர்ந்த அருட்சகோதரி சிறிய புஸ்பம் அவர்கள் கடந்த 07.10.2006 அன்று தமது துறவற வாழ்வின் 25வது ஆண்டு நிறைவினைக் கொண்டாடினார். கொழும்பு கொட்டாஞ்சேனை நல்லாயன் சபைக் கன்னியர் மடத்தில் அருட்சகோதரிகள், அவரது உடன் பிறப்புக்கள், சகோதர, சகோதரிகள், உறவினர் நல்வாழ்த்துக் கூறி நிற்க, அருட்பணி டெனி கலிஸ்ரஸ் திருப்பலி நிறைவேற்றி இறை நன்றி கூற இந்நிகழ்வு வெகு சிறப்பாக நடைபெற்றது.

மன்னார் மறைமாவட்டத்தின் விடத்தல்தீவுக் கிராமத்தில் 09.11.1960ம் ஆண்டு திரு. சவேரியானுக்கும் திருமதி. பிலோமினாவிற்கும் மகளாகப் பிறந்த இவர் தமது ஆரம்பக் கல்வியை விடத்தல்தீவு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் கற்றார். தமது உயர் கல்வியை கொட்டாஞ்சேனை நல்லாயன் கல்லூரியில் மேற்கொண்டார். பின்னர் இவர் தன்னை நல்லாயன் சபையில் இணைத்துக்கொண்டார். 1979 – 1981 வரை நவசந்நியாசப் பயிற்சி பெற்ற இவர், 1981.10.07ல் தமது முதல் வார்த்தைப்பாட்டை நிறைவேற்றினார். தொடர்ந்து சென்ற இவரின் பணிவாழ்வு பற்றிய விபரங்கள் :

1981 – 1982 கண்டி தோட்ட மக்களுக்காகச் சேவை. 1982 – 1983 பண்டாரவளை இளம் பெண்களுக்கான பயிற்சி நிலையத்தில் சேவை. 1984ல் புனித அக்குவினாஸ் கல்லூரி டிப்ளோமா ஆன்மீக கற்கை நெறி. 1985ல் வத்தளை ஆசிரியப்பணி – மறைக்கல்விப் பணி. 1986ல் நித்திய அர்ப்பணம். 1986 – 1993 ஆசிரியப்பணி வாழைச்சேனை, இந்துக்கல்லூரி, மறைக்கல்வி, அகதிகளுக்கான பணி. 1994 – 1995 ஆசிரிய பயிற்சிக் கலாசாலை. 1996 – 2001 சித்திரை வரை மீண்டும் வாழச்சேனையில் ஆசிரியப்பணி (பிரதி அதிபர் வாழைச்சேனை இந்துக்கல்லூரி. 2001 சித்திரை – 2006 கொட்டாஞ்சேனை நல்லாயன் மடம் ஆசிரியப்பணி (பிரதி அதிபர்), மறைக்கல்விப்பணி. துறவற வாழ்வில் வெள்ளிவிழாக் கண்டு இறைவனுக்கு நன்றிகூறும் அருட்சகோதரி சிறிய புஸ்பம் அவர்களுக்கு மன்னாவும் தனது நல்வாழ்த்துக்களும் செபங்களையும் மகிழ்வோடு தெரிவித்து நிற்கின்றது.

# திருமண வைரவிழா வாழ்த்து



**திரு. அதிரியான் சொய்சா (அப்பையா)**
**திருமதி. திரேசா றெவல் (றோசா) தம்பதிகள்**
**(வங்காலை) 20.11.1946 – 20.11.2006**

அன்பின் ஊற்றாக... இரக்கத்தின் இருப்பிடமாக .. தியாகத்தின் உறைவிடமாக... பாசத்தின் பிறப்பிடமாக ... திகழ்கின்ற எம் அன்புக்கும் பாசத்திற்கும் உரிய அம்மா, அப்பா!

அன்பு, பண்பு, பாசம், நேசம், ஒழுக்கம், நட்பு, தியாகம், இரக்கம், அனைத்தும் கற்றுத்தந்த அன்புப் பெற்றோரே, உங்கள் திருமண வாழ்வின் வைரவிழாவில் நெஞ்சம் நிறை மகிழ்வோடு வாழ்த்துகின்றோம், இறைவனுக்கு நன்றி கூறுகின்றோம்.

ஆனாள் அன்னையே நின்பாதம் பணிகின்றோம்.

இறைவன் உங்களை மென்மேலும் ஆசீர்வதிப்பாராக!.

*அன்புடன் - பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.*

# கல்விக்காய் காத்திரு....!

**றோ. பஸ்ரியன் (றீகன்),**
**தரம் 13கலை, மடுமாதா சிறிய குருமடம், மன்னார்**

கம்பனின் வரிகள் இல்லை என்னிடம்
காதலரின் கரங்கள் இல்லை என்னிடம்
கண்ணதாசனின் பேனா இல்லை என்னிடம்
கல்வியைக் கவிதையாய் வடிப்பதற்கு!

எனினும் மாணாக்கன் நான் இன்று
வடிக்கின்றேன் என் கவிதையை
கடனாய்க் கிடைத்த பேனாவினால்.
கல்விக்கடலில் என் கவி வரிகள்!

காலையில் தோன்றி மாலையில் மறைய
கல்வி ஒன்றும் கதிரவனுமல்ல
காலையில் மலர்ந்து மாலையில் உதிர
அதுவொரு செம்பரத்திப் பூவுமல்ல.

கல்மேல் பொறிக்கப்பட்ட எழுத்துப்போல்
கரையாமல், இருப்பதுதான் கல்வி
திருடனால் கன்னமிட முடியாதது
தீமூட்டி எரித்தாலும் வேகாதது!

சூரியனை விட்டு ஒளி பிரிந்தாலும்
காற்றை விட்டுப் புயல் பிரிந்தாலும்
பூவைவிட்டு மணம் பிரிந்தாலும்
எம்மை விட்டுப் பிரியாது கற்ற கல்வி.

கல்வி எனும் கடல் நிரம்ப
கண்ணீர் எனும் மழைபெய்து
கடின உழைப்பு எனும் நதியில் ஓடி
புகழ் என்ற பெருமையைப் பெறுவோம்.

கல்விச் செல்வமதை உதறிவிட்டு
ஏனைய செல்வமதைத் தேடுபவன்
கடைசியில் கடனாளியாகின்றான்
கற்றவன் அறிவாளியாகின்றான்.

மற்றவரின் மதிப்புதனைப் பெற்றிட
மாண்புடனே கல்விதனைக் கற்றிடு
உன் இலட்சியத்தைச் செம்மையாக்க
கல்வியே கடைசியில் கைகொடுக்கும்.

நற்பண்புடனே நீ ஒழுகிட
நன்முறையில் கல்விதனைக் கற்றிடு
நாலுபேருடன் நட்புடனே பழகிட
கல்வியே உனக்கு உதவி செய்யும்.

தோழர்களே! கல்விக்கு நிகர் கல்வியே,
மாத்திரைக்குச் சமனும் அதுவே
அதை யாம் கடினப்பட்டு உள்வாங்கினால்,
உலகமே நம்கையில் தவழுமே!

# வலய மட்டத்தில்
## பேச்சுப் போட்டியில் முதலிடங்கள்

### பிரிவு 1ல் 1ம் இடம்



ம. வேஜின் பிறியங்கா,
தரம் - 04, மன்/ சூரியகட்டைக்காடு
றோ.க.த.க.பாடசாலை, நானாட்டான்.
பேச்சுத் தலைப்பு :
**வாசித்துப் பயன்பெறுவோம்**

### பிரிவு 2ல் 1ம் இடம்



ம. மாறிமொய்றா,
தரம் - 06, மன்/ சூரியகட்டைக்காடு
றோ.க.த.க.பாடசாலை, நானாட்டான்.
பேச்சுத் தலைப்பு :
**மாணவர்களும் தேசிய ஒற்றுமையும்**

## ஆக்கங்களை அனுப்புவோரின் கவனத்திற்கு!

நீங்கள் எத்தனை ஆக்கங்களையும் அனுப்பலாம். ஒரே கவருக்குள் வைத்தும் அனுப்பலாம். ஆனால் அவை ஒவ்வொன்றும் ஒரே தாளில் எழுதப்படாமல் தனித்தனித் தாளில் எழுதப்பட வேண்டும் என்பதைத் தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும்.

அப்போதுதான் ஒவ்வொரு ஆக்கத்தையும் அதற்குரிய கோப்புகளுக்குள் (Files) வைக்க முடியும். ஒரே தாளில் 3 விடயங்களை எழுதினால் (உதாரணத்திற்கு பெரியப்பா பதில், நகைச்சுவை, கவிதை) அந்தத் தாளை - பேப்பரை எந்தக் கோப்புக்குள் வைப்பது என்ற சிக்கல் எழுகின்றது. எனவே எழுத்தாளர்கள் தனித்தனி தாளில் எழுதி (விரும்பினால் ஒரே கவருக்குள் சேர்த்து வைத்து) அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம். - பதிப்பாசிரியர்

## கண்டி அம்பிட்டியாவில் நடைபெற்ற ..............

4ம் பக்கத் தொடர்ச்சி

இக்கால சமூக சூழலில் கத்தோலிக்க தொழில் துறைப் பணியாளர்களின் அழைப்பு மற்றும் பணி என்ன என்பதைப் பற்றிச் சிந்திப்பதே இக்கருத்தமர்வின் குறிக்கோளாகும். இதில் இலங்கையின் 11 மறைமாவட்டங்களில் இருந்தும் 100 பேர் அளவில் பங்கேற்றனர். இலங்கைக்கான திருத்தந்தையின் பிரதிநிதி அவர்களும் இன்னும் பல்வேறு கத்தோலிக்க குருக்களும் இதில் உரையாற்றினர். உரைகள், கலந்துரையாடல்கள் என்ற அடிப்படையில் இக்கருத்தரங்கு நடைபெற்றது.

இதில் மன்னார் மறைமாவட்டத்தில் இருந்து மறைபரப்புப் பணிகளுக்கான ஆணைக்குழுவின் இயக்குனர் அருட்பணியாளர் பா. கிறிஸ்து நேசன் உட்பட 15 தொழில்துறைப் பணியாளர்கள் பங்கேற்றனர். அவர்கள் விபரம் வருமாறு:

மன்னார் மாவட்ட நீதிபதி உயர்திரு ரி. ஜே. பிரபாகரன் (வவுனியாப் பங்கு), மன்னார் பிரதேச செயலாளர் திரு. சி. ஏ. சந்திரய்யா (மன்னார் பங்கு), மன்னார் திட்டமிடல் உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். ரி. பீரிஸ், (பேசாலைப் பங்கு), மன்னார் மாவட்ட ஆதார வைத்தியசாலை வைத்திய அதிகாரி திரு, எஸ். நெல்சன் கில்லறி பீரிஸ் (பேசாலைப் பங்கு), மன்னார் மாவட்ட ஆதார வைத்தியசாலை வைத்திய அதிகாரி திரு. பி. ஏ. டினேஸ் கூஞ்ஞ (வங்காலைப் பங்கு), மன்னார் வீதி அபிவிருத்தி அதிகார சபைப் பொறியியலாளர் திரு. ஜி. றோய் ஜெவ்வறி, (மன்னார் பங்கு), மன்னார் சோவா நிறுவன பொறியியலாளர் திரு. ஏ. றொபேட் வலன்ரைன் பீரிஸ் (பேசாலைப் பங்கு), யு. என். டி. பி. அமைப்பின் பொறியியலாளர் திரு. ஜெகநாதன் கிளறன்ஸ் பீரிஸ் (பேசாலைப் பங்கு), மன்னார் தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் திரு. எஸ். எவ். செசாறியஸ், (வங்காலைப் பங்கு), மன்னார் மக்கள் வங்கி முகாமையாளர் திரு. ஜெயராஜ் பல்வர் (மன்னார் பங்கு), சட்டத்தரணி திரு. அன்ரன் புனிதநாயகம் (வவுனியாப் பங்கு), சட்டத்தரணி திரு. அந்தோனிப்பிள்ளை யூட்சன் (வவுனியாப் பங்கு), சட்டத்தரணி திரு. ஏ. அமலவளன் ஆனந்தராஜா (வவுனியாப் பங்கு) வவுனியா வளாக நிதிக் கிளையின் சிரேஸ்ட உதவி நிர்வாக அலுவலர் திரு. எஸ். வி. ராஜ்குமார் (பம்பைமடுப் பங்கு), மன்னார் மாவட்ட மனித நேய அமைப்புக்களின் இணைப்பாளர் திரு. பீற்றர் சிங்கிளாயர் (மன்னார் பங்கு), வவுனியா பிரதேச செயலகத்தின் காணி அலுவலர் திரு. எஸ். செபஸ்ரியன் பிறேம்ராஜ் (வவுனியாப் பங்கு), மன்னார் ஏ. எஸ். பி. அமைப்பின் திட்டமிடல் ஒருங்கிணைப்பாளர் திரு. டேவிட் அந்தோனிப்பிள்ளை (விடத்தல்தீவுப் பங்கு)

## வங்காலைப் பாடசாலையில் ..............

4ம் பக்கத் தொடர்ச்சி

இதில் முதல் அம்சமாக முதியோரை மாணவ மாணவிகள் மெடல் அணிவித்து வரவேற்றனர். புனிதமான முறையில் பாண்ட் வாத்தியம் முழங்க ஒவ்வொரு மாணவ மாணவியரும் ஒவ்வொரு முதியோரை சென்றடைந்து முழந்தாளில் அவர்கள் முன்னிலையில் தாள்பணிந்து வணக்கம் தெரிவிக்க முதியோர் அவர்களை கட்டித்தழுவி முத்தமிட்டு ஆசீர் வழங்கினர். பின் முதியோரைக் கரம் பிடித்தவாறு நடத்திவந்தனர். இருமருங்கும் மாணவ மாணவிகள் மரியாதை செலுத்தி வரவேற்பு மண்டபம் சென்றடைந்தனர்.

அங்கு முதல் நிகழ்வாக மங்கல விளக்கு ஏற்றிவைத்தல் நிகழ்வு நடைபெற்றது. இவ்விழாவுக்கு சிறப்பு விருந்தினர்களாக அருட்சகோதரர் பப்ரிஸ்ற் குரூஸ், வங்காலை உதவிப் பங்குத்தந்தை வண டக்லஸ் லோகு, கல்லூரித் தலைவர் அருட்சகோதரர் செ. கி. விஜயதாசன், வங்காலை திருக்குடும்ப கன்னியர் இல்ல அருட்சகோதரி ஜெனுவி, முதியோர் சார்பில் கொ. திருச்செல்வம் வாஸ், ப. ஞானம்மா மார்க், சிறுவர் கழக பொறுப்பாசிரியர் செல்வி மரியா சொய்சா ஆகியோர் கலந்துகொண்டனர்.

அடுத்து வங்காலை உதவிப் பங்குத் தந்தை வண. டக்லஸ் லோகு அடிகளார் அவர்களாலும் கல்லூரி முதல்வராலும் சிறப்புரைகள் நிகழ்த்தப்பட்டன. சிறப்புரைகளின் சாராம்சமாக "முதியோர் ஊரில், குடும்பத்தில், சமூகத்தில், மிகவும் வேண்டப்பட்டவர்களாக இருக்கிறார்கள். இவர்களிடம் செபம், நல் ஆசீர் நல்லமனம், மன்னிக்கும் மனப்பக்குவம் போன்ற நற்பண்புகள் விளங்குவதால் இவர்கள் எல்லோருக்கும் தேவைப்பட்டவர்களாக திகழ்கின்றனர் என்ற கருத்துபட உரையாற்றினார்கள்.

இதன்பின் விருந்துபசாரம் நடைபெற்றுக்கொண்டிருக்க கலைநிகழ்வுகளும் நடைபெற்றன. அருட்சகோதரர் பப்ரிஸ் குரூஸ் அவர்களால் சிறப்புரை ஆற்றப்பட்டது. முடிவில் அருட்சகோதரர் பப்ரிஸ் குரூஸ் அவர்களால் அழகிய பாடல்கள் பல பாடப்பட்டன. முதியோர்கள் சிலரும் சேர்ந்து நடனமாட விழா உச்சநிலையை அடைந்தது. முதியோர்களால் நாடகப் பாடல்கள் சிலவும் பாடப்பட்டன.

பொன்னாடை போர்த்தல் நிகழ்வில் வயதில் மூத்தோரான கொ. திருச்செல்வம் வாஸ் அவர்களுக்கு கல்லூரித் தலைவரும், ச. சலேற்றம்மா டலிமாவுக்கு கல்லூரி உபதலைவரும் பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர். ஈற்றில் நன்றி செபத்துடனும் நன்றிப் பாடலுடனும் விழா இனிதே முடிவுற்றது. **தகவல்: ஆ. காணிக்கை நாதன் கூஞ்ஞ, இளைப்பாறிய அதிபர்.**

# அன்பின் கங்கை அன்னை தெரேசா

**விறு விறுப்புத் தொடர் 34**

## சோலைநிலத்தில் பாலைவனம்

*சொல்லின் செல்வர் அமுது*



உலக சாதனையின் உச்சிக்கு ஏறிய அமெரிக்காவில் -
உலக சுதந்திரத்தின் அகராதியை உலகின் பல நாடுகளும் படிக்கக் கொடுத்த அமெரிக்காவில் -
இலட்சியங்களின் தந்தைகள் வாழ்ந்து வந்த ஒற்றுமை அமெரிக்காவில் -

காலமாற்றம் மனிதனின் நல்ல குணங்களை நசுக்கிவிட்டது. அங்கே பல இடங்களில் அநீதிகளும், அக்கிரமங்களும் ஊஞ்சலாடுகின்றன. வீதிகளில் இராக்காலங்களில் கால் வைப்பது பாம்புப் புற்றில் கால் வைப்பது போன்றது. இளஞ்சந்ததியினர் பலர் போதை மாத்திரைகளின் அவலங்களை முதுகில் சுமந்து செல்கின்றனர்.

நியூயோர்க் என்ற தலைநகருக்கு அண்மையில்தான் புறோனெக்ஸ் என்ற பட்டினமும் உள்ளது. இது வசையின் கூரையில் சுட்டிக்காட்டப்படுகிறது. வன்செயல்களை அங்கு மலிவு விற்பனையில் காணலாம். போதைப்பொருள் விற்பனை பூக்கடைகளிலும் அதிகம். மனித உயிர்களுக்கு வரவர மதிப்புக் குறைத்து ஏலம் போடப்பட்டது.

1971 ஆம் ஆண்டு ஐந்து கன்னியர்கள் கென்னடி விமான நிலையத்தில் வந்து கால் வைத்தனர். இந்தப் பட்டினத்தில் வழுக்கிய இளைஞர்களில் முழுக் கவனத்தையும் செலுத்தி, அந்த இளைஞர்களின் தேவைகளை நிறைவேற்ற நினைத்தனர். அங்கே கண்ட பல இளைஞர்கள் பிரிந்து வாழும் பெற்றோரிடம் இருந்து விலகித் தெருவுக்கு வந்தவர்கள். வேறு பலர், வீடுகளில் இருந்து தொட்டால் துயர்தரும் காஞ்சொறி (உடலில் பட்டால் சொறியும். காஞ்சோன்றி என்றும் கூறுவர்) என விலத்தி வைக்கப்பட்டவர்கள்.

கோடை கால விடுமுறையில் வீதியில் கும்மாளமடிக்கும் இளைஞர் அலை அடிப்பார்கள். அவர்களைக் கவரும் நோக்கத்தோடு சில கூடாரங்களை அமைத்தனர் கன்னியர். அவற்றில் இளைஞர் பங்குபற்றுவதற்கென வெவ்வேறு செயற்திட்டங்களைத் தொடக்கி வைத்தனர்.

ஒன்றில் மர வேலைகள். மற்றதில் இசையும் - பாட்டும், இன்னொன்றில் நாடகங்கள், வேறொன்றில் மட்பாண்டம் வனைதல், நாளாந்தம் செபத்துடனும், பாடல்களுடனும் நிகழ்ச்சிகள் தொடங்கின. கிராமப் புறங்களுக்கும், வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இடங்களுக்கும் அழைத்துச் செல்லவும் ஒழுங்குகள் செய்தனர். இளைஞர்களுடைய உடல் வளர்ச்சியிலும், ஆன்ம வளர்ச்சியையிட்டே அவர்களுடைய கருத்தும் கண்ணும் இருந்தன.

அவர்களில் ஒரு கன்னியர் விளக்குகிறார், "நியூயோர்க்கும் ஏனைய பட்டினங்களும் பெருந்தொகையான பணத்தை அங்குள்ள ஆயிரக்கணக்கான இளமட்டங்களுக்குச் செலவு செய்கின்றன. அசையும் நீந்தல் தடாகங்கள், திரைப்படங்கள், தெருப்பொம்மை ஆட்டங்கள், இலவசமாய் மிருகக் காட்சிச் சீட்டு, மத்தியான உணவு – பால் - குளிர்பானம், நூதனசாலைச் சீட்டு - இறைச்சிப் பாண் என்பனவும் விடுமுறையில் கொடுக்கிறார்கள். இவை அனைத்தும் அவர்களுடைய இன்பத்தையும், உடல் வளர்ச்சியையும் கருத்தில் கொண்டவை.

இளைஞர்களிடத்தில் வரண்டு போன சிந்தனை வளர்ச்சிக்கும், ஆன்ம வளர்ச்சிக்கும் ஒரு சிப்பியிலாவது நீர் ஊற்ற நினைப்பவரில்லை. துவக்குச் சண்டைகளும், ஆயுத முனையில் கொள்ளைகளும், வன்செயல்களும் இல்லாத நாளே கிடையாது. 41வது சுவர் வெளி எனும் அப்பச்சி கோட்டையிலும் கன்னியர்கள் பணி புரிந்தனர். அது எதிரிகளால் முற்றுகையிடப்பட்ட கோட்டை போன்றது. அங்கே நீண்ட காலம் வசித்தவர்கள், துவக்குச் சண்டைக்கும், ஆயுத முனையில் அச்சுறுத்தி அபகரித்தலுக்கும் பயந்து வீட்டைவிட்டே வெளியில் புறப்படுவதில்லை.

கன்னியர்கள் அவர்கள் வீடுகளுக்கு நாளாந்தம் சென்று அவரவர்கள் தேவைகளை நிறைவேற்றி வந்தனர். நீங்கள் எங்கள் வீடுகளை அன்பு என்ற கள்ளச்சாவி போட்டுத் திறந்தீர்கள் என்று ஒரு வயோதிப மாது குறிப்பிட்டார்.

பெயர் அறியப்படாத அறை வரிசைகளில் தனிப்பட்ட வாழ்க்கையை நடத்துவோர் அங்கு மிகுதியாயுள்ளனர். ஒரு கன்னியர் தான் மறக்க முடியாத செய்தியைச் சொல்லுகிறார், "நாங்கள் ஒரு அறையருகில் வந்தபோது அங்கு வந்த நாற்றத்தைத் தாங்க முடியவில்லை. அந்த அறையை உடைத்துத் திறந்த போது அங்கே ஒரு பெண் 4,5 நாட்களுக்கு முன்பு இறந்திருப்பதைக் கண்டோம். அவளைப் பார்க்க எவரும் அந்தப் பக்கம் வந்ததில்லை. அயலட்டத்தில் வசிப்பவர்களுக்கு இறந்தவரின் பெயரும் தெரியாது. அங்கு வசிக்கும் பலரை அறை இலக்கத்தைக் கொண்டும் அறைத் தொகுதியின் பெயரைக் கொண்டுமே அறிவார்கள்.

இவ்வாறு சோற்றுக்குப் பஞ்சமில்லாத பட்டினங்களில் மனித நேயம் வற்றி, வரண்டு போக அவை நெஞ்சில் ஈரமற்ற பாலைவனங்களாக மாறி வருகின்றன.

(கங்கை தொடர்ந்து பாயும்)

**1991**

இந்த ஆண்டின் தொடக்கத்தில் 3,000 சகோதரிகளுக்குமேல் தொண்டு புரிந்தனர். 400 சகோதரர்கள் அன்புப்பணியில் ஈடுபட்டிருந்தனர். 1,30,000 துணைத் தொண்டர்கள் சபைக்காக வேண்டுதல் செய்தனர். மனநோயாளருக்கு 200 பணிமனைகளில் சேவை புரிந்தனர். 450 நிலையங்களில் உணவு விநியோகம் செய்யப்பெற்றது. 1000 நடமாடும் மருத்துவ நிலையங்கள் உலக அரங்கில் ஊழியம் புரிந்தன. 95 நாடுகளில் அன்னை திரேசாவின் அன்புப்பணி ஆலமரமாகக் கிளைகள் பரப்பியது.

## உங்களுக்குத் தெரியுமா?
## மறையறிவுப் பகுதி இல.42

இம்மாதத்திற்கான மறையறிவுப் போட்டி வினாக்கள் 2006 செப்டெம்பர் மாத மன்னா இதழிலிருந்து தொகுக்கப்படுகின்றன. மறையறிவு நம் வாழ்வோடு இரண்டறக் கலந்த ஒன்று. இதனோடு இணைந்த சம்பவங்கள், கூற்றுக்கள், அறிவுத் துணுக்குகள் சிறியனவானாலும் ஏதாவது ஒரு வகையில் நம் வாழ்வுக்கு அர்த்தம் தருபவை. ஆகவே, இம்மறையறிவுப் போட்டி பயனுள்ளது. பங்குகொள்ளுங்கள்.

1. "ஒருவர் எவருக்கும் தேவையற்றவராய், விரும்பப்படாதவராய் இருப்பதுதான் மனித சமுதாயத்தில் உள்ள கொடிய வியாதி". இவ்வார்த்தைகள் யாருடையவை?
2. ஐந்தாவது உலகக் குடும்பங்கள் மகாநாடு ஸ்பெயின் நாட்டில் வெனின்சியா விமான நிலைய வளாகத்தில் நடைபெற்றது. அதற்குத் திருத்தந்தை அவர்களும் சமூகமளித்திருந்தார்கள். எப்போது, இம்மகாநாடு நடை பெற்றது?
3. அருட்தந்தை ஜெறோம் லெம்பேட் அவர்கள் தனது 25 வருடக் குருத்துவ வாழ்வில் 16 வருடங்கள் மறையுரைஞராகப் பணியாற்றியுள்ளார். இவர் எப்போது? யாரால்? குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்?
4. அருட்திரு ரூபன் மரியாம்பிள்ளை அவர்களால் ஊடகத்துறை பற்றிய 6வது நூல் அறிமுகம் செய்யப்படுகின்றது. இந்நூலின் தலைப்பு என்ன?
5. தமிழ்நாடு உதகை மறைமாவட்டத்திற்குப் புதிதாக நியமிக்கப்பட்டிருக்கும் ஆயர் யார்?
6. "நற்கருணைதான் அமைதிப் பாடத்தை நமக்குக் கற்றுத் தரும் பாடசாலை" இக்கூற்று யாருடையது?
7. "ஆசிய ஆபிரிக்க நாடுகளில் தேவைக்கதிகமான தேவ அழைத்தல்கள் உள்ளன." என திருச்சபையின் முக்கியஸ்தர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார் அவர் யார்?
8. 'தூது" ஒரு காலாண்டுச் சஞ்சிகை. இது யாழ்நகர் தூது நற்பணி நிலையத்தால் வெளியிடப்படுகின்றது. இதன் முதலாவது இதழ் எப்போது வெளியிடப்பட்டது?
9. "வெளியேயிருந்து மனிதருக்குள்ளே சென்று அவர்களைத் தீட்டுப்படுத்தக் கூடியது ஒன்றுமில்லை. மனிதருக்குள்ளேயிருந்து வெளியே வருபவையே அவர்களைத் தீட்டுப்படுத்தும்." இது நற்செய்தியில் எங்கேயுள்ளது?
10. மன்னார் மறை மாவட்டத்தில் முருங்கன் பங்கில் சலேசியன் சபைக் குருக்களின் பணிகள் பற்றி நாம் அறிந்திருக்கின்றோம். இவர்களின் மாணவர் இல்லத்தின் இயக்குனராகப் புதிய அருட்பணியாளர் அவர்கள் பொறுப்பேற்றுள்ளார். இவரின் பெயர் என்ன?

மாணவர் மறையறிவுப் பகுதி இல. 40 இற்கான கேள்விகளுக்கு 28 பேர் விடை அளித்திருந்தனர்.

**இவர்களுள் பரிசுக்குரியவராகத் தெரிவுசெய்யப்பட்ட**

**அதிஸ்ரசாலி:**

க. சிறோமி. இலுப்பைக்குளம். நேரியகுளம்.

பாராட்டுக்குரியவர்களாக

**தெரிவுசெய்யப்படும் 10 அதிஸ்ரசாலிகள்**

1. ப. நிலக்ஷினி, தரம் - 10, அடம்பன் ம. மகா. வித்தியால்யம்.
2. அ. ஜஸ்மின் சறோன், ஆவணம், நானாட்டான்.
3. அஜித்ரா பிரான்சிஸ், 5ம் குறுக்குத்தெரு, சின்னக்கடை, மன்.
4. பி. லூட்ஸ் அஞ்சலிக்கா, எமில் நகர், மன்னார்.
5. போ. றெபேக்கா கூஞ்ஞ, தி.கு.க. மடம், பெரிய பண்டிவிரிச்சான்.
6. ஞா. அன்ரன் வினோத், செல்வபுரம், முல்லைத்தீவு.
7. செ. இன்பென்ரா டயஸ், மரியாள் வீதி, தாழ்வுபாடு.
8. அ. மேரி அன்ரனியா (தர்சினி), முத்தரிப்புத்துறை.
9. திருமதி. அ. வதனி, முதலை குத்தி, உயிலங்குளம்.
10. திருமதி. மெ. அ. லெம்பேட், வின்சென்ற் வில்லா, வங்காலை - 02

# நீங்காத நினைவுகள்

### 10ம் ஆண்டு நினைவு

மலர்வு 18 - 06 - 1948



உதிர்வு 19 - 11 - 1996

**கிளமென்ட் செல்வநாயகம் (சூரி)**
**(உயிலங்குளம்)**


"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில்
விசுவாசம்கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"
(யோவான் : 11: 25)

பொறையன்புப் பாதையிலே நிறைகுடமாய் வாழ்ந்தவரே,
இறையன்புப் பாதையிலே ஏகினீரோ அப்பாவே!
தாழ்வுகள் நீக்கி எம்மை திறனோடு வளர்த்தீரே
வாழ்கின்றோம் நாம் இங்கு நீங்கா உம் நினைவினிலே.
நித்தமும் வாழவைத்த அணையாத ஒளி விளக்கே
அஞ்சலி நாம் செய்கின்றோம் ஆண்டவன் அருகிருக்க!

**நீங்காத நினைவுகளுடன்**
**மனைவி, மக்கள், மருமகன்.**

### 14ம் ஆண்டு நினைவு

மலர்வு 20 - 03 - 1918



உதிர்வு 08 - 12 - 1992

**அந்தோனி லோறன்ஸ்**
**(மாந்தை)**

"வாழ்ந்தாலும் ஆண்டவருக்கென்றே வாழ்கின்றோம்,
செத்தாலும் ஆண்டவருக்கென்றே சாகின்றோம்.
ஆகவே வாழ்ந்தாலும் செத்தாலும் நாம்
ஆண்டவருக்கே உரியவர்களாய் இருக்கின்றோம்"
(உரோமர்: 14:18)

நீ உனக்கென்று என்றுமே வாழ்ந்தவனல்லன், நண்பன் இயேசுவே உன் வழிகாட்டி, அவர் வழியில் வாழ்ந்த உன்னை, அவர் தம் அன்பின் ஒளியில் வைத்துள்ளாரென்பது எமது நம்பிக்கை. இறை அன்பில் நாம் என்றுமே ஒன்றித்திருப்போம்.

**நீங்காத நினைவுகளுடன்:**
*மனைவி, மக்கள், மருமக்கள்,*
*பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.*

### 31ம் நாள் நினைவு

மலர்வு 29 - 02 - 1929



உதிர்வு 06 - 10 - 2006

**திரேசம்மா சேவியர் குமாரசிங்கம்**
**(கங்காணிதீவு, நானாட்டான்)**

பாசமிகு அம்மா, அன்புத் தெய்வமே ஆதரவின் உறைவிடமே, பாரினில் பரமன் வழிகாட்டி பாசத்தை நாளும் பொழிந்து, எமை வளர்த்தெடுத்த தாயே துன்பத்தை நாம் உணராதிருக்க - நீங்கள் சுமை தாங்கியாய் நின்று எம் துன்பம் சுமந்தீர்கள் மாதம் ஒன்று கடந்தது. அம்மா என்று அழைக்க நீங்கள் அருகிலில்லை, உங்கள் அரவணைப்பை இழந்து துடிக்கின்ற எம் மனதிற்கு, ஆறுதல் ஏது? அம்மா! அன்பை மட்டும் கண்டிருந்தோம் ஆத்திரத்தை நாம் கண்டதில்லை. அருமை ஐயாவுடன் இணைந்துகொண்ட உங்கள் நினைவு எம் மனதில் என்றும் நீங்காது. உங்கள் ஆன்மா நித்திய சாந்தி பெற என்றும் இறைபாதம் பணிக்கின்றோம்.

*இவரது பிரிவால் துயருறும், பாசமிகு பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், உற்றார், உறவினர், நண்பர்கள்.*


# குடும்பக் குவலயம்





## புருசன் வீட்டில் வாழப்போகும் பெண்ணே!

சீ. செபமாலை.
இளைப்பாறிய ஆசிரியர். காத்தாங்குளம்.



பெண்களே, வாழ்வில் வெற்றியும் தோல்வியும் உங்கள் கைகளிலே உள்ளது. அருந்தாத கனியை அருந்த வைத்தவர்கள், மாமிசத்திலிருந்து படைக்கப்பட்டவர்கள், பார்வையிலும் பேச்சிலும் சக்தி மிக்கவர்கள்! ஆடாத மயிலைக்கூட ஆடவைப்பது பெண் மயில்தான். கார்முகில் கண்டால் மயில் ஆடுமென்பது புலவர்கள் நாட்டுவளம், நகர்வளம் பாட எடுத்துக்கொண்ட கற்பனைகளே.

ஆக்கவும் அழிக்கவும் வல்லமையுள்ளவள் பெண்ணே. அதனால் பெண்ணைச் சாடியாகவும் ஆணை மூடியாகவும் முன்னோர் சாடிக்கேற்ற மூடியென்றனர். இது குடும்ப கௌரவத்தைக் கட்டிக்காக்க தந்த விருது வாக்கியம்.

பெண்கள் கணவனை பெண்டாட்டி தாசனாகவோ அடிமை ஆடவனாகவோ மாற்ற முனையக் கூடாது. முன்சுட்டியதுபோல் அன்பு கலந்த பார்வையாலும் அன்பாதரவுள்ள வார்த்தைகளாலும் ஆளவேண்டும்.

பெண்ணிடம் அழகை இரசிக்கவும் அமுதைப் பருகவும் கணவன் கண்ணாக இருக்கிறான். இதனால் "அழைத்தால் வருவாள், கேட்டால் தருவாள் அவள்தானே மனைவி" எனக் கவிஞர் பாடுகின்றார். இந்த நிலையை வேற எந்த நிலையை வகிக்கும் பெண்ணாலும் தரமுடியாது.

மோகம் முப்பது நாள், ஆசை அறுபது நாள். இவை திருமணத்தின் மூன்று மாதங்கள் வரை நீடிக்கும். இதில் முரண்பாடு வளர இடம் கொடுக்கக்கூடாது.

அன்னந் தண்ணிதேடா அரைக்கண்தூக்க நிலையை அறிந்தால் மனைவி தாயாக, மந்திரியாக, தாதியாக, நண்பனாக, தாசியாக எந்த நிலையில் தூங்க வைக்க முடியும் என்பதை உய்த்துணர்ந்து தன்னை மாற்றிக்கொள்ளப் பழகிக்கொள்ள வேண்டும். இவ்வாறு நடக்கும் பெண் இருக்கும்போது எப்பேற்பட்ட கணவனும் தாசிவீடு நாடமாட்டான். இந்த நிகழ்வுகளுள்ளே மூன்றாம் நபர் ஒப்புரவாக்க முயற்சிப்பது மடமைத்தனம்.

**திருமணம் தொடர்பாக கவனிக்க வேண்டியவை.**

இதைக் கட்டளையாகத் தரவில்லை, கட்டளையாகத் தந்தால் மீறும்போது பாவமாகும். ஆகையால் தரப்படுபவைகளை ஆலோசனையாகக் கொள்ளுங்கள். சிந்தியுங்கள் செயற்பாடுகள் வெற்றி கிடைக்கும். திருமணம் என்பது புதியதொரு வாழ்வு.

மணம் என்பது மூக்காலே முகர்ந்து முப்பது நிமிடம் தம்மை மறந்து ஆண் பெண் உடல் இரகசியங்களை இரசித்து மூன்று நிமிடங்களில் தம் இருவரின் அடையாளமாக ஓர் உடலைச் சமைத்து விடுவது மட்டுமல்ல, செயல் முடிந்தபின் விழிப்பு வரும்போது தம் செயல் வடிவை அகற்ற, தம் இளமையைப் பாதுகாக்க எடுக்கும் முடிவு கருக்கலைப்பு! இந்த நிலையைத் திருமணம் ஏற்றுக்கொள்ளாது. இறை சித்தமே உடலுறவில் கருவை நிட்சயிப்பது.

விவிலியம் காட்டும் சாராள், அன்னாள், எலிசபெத், அன்னம்மா எல்லோருமே பல வருடங்களின்பின்தான் முறையே ஈசாக்கு, சாமுவேல், திருமுழுக்கு அருளப்பர், மரியாள் ஆகியோரைப் பெற்றெடுத்தார்கள். யாக்கோப்பின் மனைவி இறை வேண்டுதலின் பின்பே சூசை மற்றும் பெஞ்சமின் என்பவர்களைப் பெற்றெடுத்தாள். எல்லோருமே வரலாறு படைத்தார்கள்.

மரியன்னையின் பேறு மனித புத்திக்கு அடங்காதது. ஞானத்தின் வழி நின்றால் மட்டுமே அதை ஏற்றுக்கொள்ள முடியும். இதுவே விசுவாசம் - நம்பிக்கை! இதை விளக்க அறிந்துகொள்ள விவிலியத்தை ஊன்றிக் கற்க வேண்டும்.

இதைவிடுத்து கருத்தாங்கவும், வியாபாரப் பொருளை நம்பி கருவுறுதலைத் தவிர்க்கவும் முடியுமென்றால் ஆதிப்பெற்றோர் நிலையே எமக்கும் ஏற்படும். திருமண உறவில் புகவிருக்கும் இளைஞர் யுவதிகளுக்கு இதுவோர் பாடமாக அமையும்படி இறைனை வேண்டிப் பிரார்த்திக்கின்றேன். ●

## குடும்பம்!

### நறுமணம் கமழும் இன்பவனம்

வெ. மேரி, பாசையூர் , யாழ்ப்பாணம்

நம் ஒவ்வொருவரது குடும்பங்களும் நறுமணம் கமழும் இன்பமான பூங்காவனங்கள்தான்! இதை எவரும் மறுக்கவும் முடியாது மறக்கவும் கூடாது. இது என்னுடைய அனுபவம்.

முதலிலே கடவுள் நமக்குத் தந்த ஒப்பில்லாச் செல்வங்களாகிய எமது அன்புத் தாய், தந்தைக்காக இறைவனுக்கு நன்றி சொல்லவேண்டும். அடுத்து இறைவன் எமக்குத் தந்த அன்புச் சகோதரர்களுக்காக நாம் இறைவனுக்கு நன்றி சொல்ல வேண்டும். இறைவன் எமக்குத் தந்த தாய், தந்தை ஒவ்வொருவரும் இறைவனின் பிரதிநிதிகள்.

**பெற்றோரே,** நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு உணவோடு சேர்த்து அன்பையும் ஊட்டி வாருங்கள். பிள்ளைகளை எல்லா வேளையிலும் கண்டிக்காதீர்கள். கண்டிக்க வேண்டிய வேளையில் கண்டியுங்கள். இன்றைய இளம் பிள்ளைகளோ, சிறுவர்களோ சரி இந்த உலகில் அதிகமாகத் தேடுவது பாசத்தையும், அன்பையும்தான். நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு பாசத்தையும், அன்பையும், பக்தியையும் நாள்தோறும் ஊட்டி வளருங்கள். உங்கள் ஒவ்வொருவரது பிள்ளைகளும் மிகவும் நல்லவர்கள். இது உண்மை. நீங்கள் அனுபவித்துப் பாருங்கள் புரியும்.

**பிள்ளைகளே,** கடவுள் உங்களுக்குக் கொடுத்த உங்கள் தாய், தந்தையரை அன்பு செய்யுங்கள். அவர்களது அறிவுரைகளைக் கேளுங்கள். அதன்படி நடவுங்கள். உங்கள் பெற்றோருக்காகத் தினமும் இறைவனைப் பிரார்த்தியுங்கள். "தாய் மனசுபோல் நடக்கும் பிள்ளை என்றுமே நன்றாய் வாழும்" என்று ஒரு சினிமா பாடல் வரி கூறுகிறது.

எனவே பிள்ளைகளே! நீங்கள் ஒவ்வொருவரும் பெற்றோருக்குத் தகுந்த மதிப்பளித்து அவர்கள் சொல்லும் அறிவுரையைக் கேட்டு நடந்து பாருங்கள். உங்கள் வாழ்வு ஒளி மயமாக அமையும். நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் குடும்ப சூழ்நிலைகளை நல்ல முறையில் அறியுங்கள். அதற்கேற்ப உங்கள் வாழ்க்கையை நடத்துங்கள்.

பிள்ளைகளே நீங்கள் உங்கள் பெற்றோரைக் கவலைப்படுத்தாதீர்கள். நீங்கள் உங்கள் குடும்ப கஸ்ரத்தை புரியாமல் அம்மா அல்லது அப்பாவிடம் போய் எனக்கு இது வேண்டும், அதுவேண்டும் என்று கேட்கும்போது உங்கள் குடும்பத்தில் கஸ்ரம் என்றால், அதை உங்களுக்கு தங்களால் கொடுக்க முடியாவிட்டால், மிகவும் கவலை அடைவார்கள். நீங்கள் உங்கள் கஸ்ரத்தை அறிந்து, உங்கள் பெற்றோரை நீங்கள் அளவு கடந்தவிதமாக அன்பு செய்து அவர்களுடன் நண்பர்களுடன் உறவாடுவதுபோல் எல்லாவற்றையும் கூறி மகிழ்ந்திருங்கள். ஒளிவு மறைவின்றி வாழுங்கள். அப்போது உங்கள் குடும்பத்தின் இன்பத்தை நீங்கள் அனுபவிக்க முடியும்.

- பிள்ளைகளே! நீங்கள் உங்கள் சகோதர சகோதரிகளுடன் நண்பர்களைப் போன்று உறவாடுங்கள். உங்கள் கவலைகளை அவர்களுடன் பரிமாறிக்கொள்ளுங்கள்.
- நீங்கள் கல்வியில் நல்ல முறையில் முன்னேறி உங்கள் பெற்றோருக்கு நற்பெயர் எடுத்துக் கொடுங்கள்.
- நீங்கள் நல்ல ஒழுக்கத்தில் வாழுங்கள். நல்ல ஒழுக்க சீலர்களாகத் திகழ்ந்து எதிர்காலத்தில் நற்பிரஜைகளாக மாற முயற்சி எடுங்கள்.

உங்கள் குடும்பத்தோடு சேர்ந்து செபம் சொல்லுங்கள். உங்கள் பெற்றோருடனும் சகோதரருடனும் சேர்ந்து உணவருந்துங்கள். ஒருநாளில் இரவில் அல்லது பகலில் பெற்றோர் பிள்ளைகள் எல்லோரும் ஒன்றுகூடி கலந்துரையாடி மகிழுங்கள், விளையாடுங்கள். அப்போது உங்கள் குடும்பம் நன்றாய் அமையும். மேற்கூறிய அனைத்தையும் கடைப்பிடித்து வாழ்ந்து பாருங்கள் உங்கள் குடும்பம் நறுமணம் கமழும் ஓர் இன்ப வனமாக அமையும். ●

# மருத்துவப் பொழிவு

## எலுமிச்சை இருக்க பயமேன்?

### நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்!



எலுமிச்சை, நோய்களுக்கு ஒரு அற்புதமான மருந்து! சொறி, சிரங்கு, படை, கரப்பான் போன்ற தோல் பிரச்சனைகள் உள்ளவர்கள் இதைச் செய்து பார்க்கலாம்.

எலுமிச்சை சாற்றை உடலில் தேய்த்துக்கொண்டு சூரிய ஒளியில் 10 நிமிடம் நின்ற பிறகு குளிக்கலாம்.

குளிக்கும் நீரில் எலுமிச்சை சாறைப் பிழிந்து குளித்து வந்தால் தோல் சுருக்கம் ஏற்படாது. நோய் எதிர்ப்பு சக்தியையும் அதிகரிக்கும். பல நோய்கள் வராது.

பாத வெடிப்பு உள்ளவர்கள் எலுமிச்சைச் சாறு கலந்த நீரில் 10 - 15 நிமிடங்கள் காலை நனைத்து எடுக்கலாம். எலுமிச்சை தடவி 20 நிமிடம் கழித்துக் குளிக்கலாம்.

அம்மை தழும்பு மாற எலுமிச்சை தேய்த்து வரவேண்டும்.

**பல்நோய்க்கு :** வாதுமை கொட்டையை தோல் நீக்கி அரைத்து எலுமிச்சை பழரசம் கலந்து பல் தேய்க்கவும், ஈரில் இரத்தம் வடிதலை நிறுத்த எலுமிச்சைச் சாறில் தண்ணீர் கலந்து வாய் கொப்பளிக்கவும்.

- எந்த நோயினால் இரத்தம் பாதிக்கப்பட்டிருந்தாலும் அதை சுத்தப்படுத்தும் ஆற்றல் எலுமிச்சைக்கு உண்டு. உதாரணமாக மஞ்சட்காமாலையை குறிப்பிடலாம்.
- எலுமிச்சை புளிப்பு சுவையை உடையதாக இருந்தாலும் உடலுக்கு காரத்தன்மையைத்தான் தருகிறது. புளித்த ஏப்பம் அடிக்கடி வந்தால் எலுமிச்சை சாறு குடித்து நன்மை பெறலாம். எலுமிச்சையில் உள்ள சிட்ரிக் ஆசிட், உடலில் தொற்று நோய்க்கிருமிகளை வளரவிடாமல் தடுக்கும் சக்தி படைத்தது.

**உடல் பருமன் குறைய :** எலுமிச்சை பழரசத்தோடு தேன் கலந்து தினமும் அருந்த வேண்டும்.

**முகப்பருக்கள் மறைய:** எலுமிச்சை பழரசத்தோடு பசுவின் நெய் அல்லது கிளசரின் கலந்து பூசவும்.

**முகத்தில் வரும் கரும் புள்ளிகள் மறைய :** எலுமிச்சை பழரசத்தோடு இந்துப்பூபொடி கலந்து பூசவேண்டும்.

**முடி உதிர்தல், நரை தடுக்க :** நெல்லிக்காய் கொஞ்சம் எடுத்து அரைத்து அதனுடன் எலுமிச்சை பழரசம் சேர்த்து தலையில் தேய்த்துக் குளிக்கலாம்.

**பேன் தொல்லைக்கு :** வெள்ளைப்பூண்டை தேவையான அளவு அரைத்து எடுத்துக்கொண்டு அதில் எலுமிச்சை பழரசம் கலந்து தலையில் தேய்த்துக் குளிக்க வேண்டும்.

**ரொன்சில் பிரச்சனைக்கு :** எலுமிச்சை பழத்தை வதக்கி சாறு பிழிந்து தேன் கலந்து சாப்பிடலாம்.

**வாந்தியை நிறுத்த :** எலுமிச்சை இலைகளை அரைத்து தண்ணீருடன் உப்பு கலந்து குடிக்க வாந்தி உடனே நின்று விடும்.

**கொலராவின்போது :** கொலரா நாட்களில் இரண்டு எலுமிச்சை பழரசத்தை குடிக்கலாம்.


**கோடைக்கு :** எலுமிச்சை சாரோடு பனங்கற்கண்டு கலந்து குடித்தால் குளிர்ச்சியாக இருக்கும். மூலநோய் நீரிழிவு, புற்றுநோய், தலைவலி, விந்து முத்துதல், விஷக்கடி, சிறுநீர் எரிச்சல், முடக்கு வாதம், காமாலை பிரச்சனை உள்ளவர்களுக்கு எலுமிச்சை வைத்தியம் நல்ல பலன் தரும்.

### எலுமிச்சை பழச்சாறு அருந்தும்போது கடைப்பிடிக்க வேண்டியவை

உடற் பயிற்சி செய்யுமுன் அருந்த வேண்டும். காலை உணவுக்கு முப்பது நிமிடங்களுக்கு முன் அருந்த வேண்டும். ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை மாதங்களில் பகல் 12 மணியளவில் அருந்தலாம். எலுமிச்சை சாறு 1 பங்குக்கு 8 பங்கு வெந்நீர் கலந்து அருந்துவது சிறந்தது. இரவு கண்விழித்து காலையில் சளிப்பிடித்த போதும் எலுமிச்சை பழச்சாறு அருந்தவேண்டும். எலுமிச்சை பழச்சாறை தனியாக அருந்தக்கூடாது சிறிது உப்பு தேன் கலந்து அருந்த வேண்டும்.

**சிறுநீர் பையில் கல்:** சிலருக்கு சிறுநீர்ப்பையில் கல் இருக்கும். அதை கரைக்க என்ன செய்யலாம் தெரியுமா? வாழை மரத்தின் அடிப்பாகத்து கிழங்கைச் சமைத்து சாப்பிட வேண்டும். வாழைத்தண்டு, வாழைக்கிழங்கு ஆகியவற்றை அதிகம் சாப்பிடுவது சிறுநீரக தொந்தரவுகள் குறைய உதவும்.

**ஒற்றைத் தலைவலி:** ஒற்றைத் தலைவலி (மிக்ரின்) எனப்படும் இது சாதாரணமானதுதான் என்றாலும் அதனால் உண்டாகும் வலி பொறுத்துக்கொள்ள முடியாது. இதற்கு திராட்சைப்பழரசத்தை தினமும் ஓர் அவுன்ஸ் குடித்து வந்தால் தலைவலி பறக்கும்.



**மூல உபத்திரவம்:**

பப்பாளிப்பழத்தில் ஒரு துண்டு வீதம் தினசரி மூல நோயாளிகள் சாப்பிட்டு வர வேண்டும். மூல உபத்திரவம் இதன் மூலம் கட்டுப்பாட்டுக்கு வரும்.



# சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது
- சந்தான் கொண்சிலா, வண்ணாகுளம்.

## டின்பால் கேக்

### தேவையான பொருட்கள்



சீனி - 250 கிராம்
மா - 250 கிராம்
ரின்பால் - 1 ரின்
முட்டை - 2
வனிலா - 1/2 தே.க.
பேக்கிங்பவுடர்- 1 தே.க
மாஜரின் - 250 கிராம்

**செய்முறை :** மாஜரினையும், அரைத்த சீனியையும் நன்கு அடித்துக்கொள்ள வேண்டும். டின் பாலையும் முட்டையையும் நன்கு அடித்துக்கொள்ள வேண்டும்.

பின் பேக்கிங் பவுடரையும், மாவையும் அரித்தெடுத்து மேற்கூறிய கலவையில் சிறுது சிறிதாகச் சேர்த்து 5 நிமிடம் வரை அடிக்கவும். பின் வனிலாவை சேர்த்துக் கேக் தட்டில் கலவையை ஊற்றி கஜு", பிளம்ஸ் தூவி 25 நிமிடம் பேக் பண்ணவும்.

இவ்வாறான கேக் சுவையானதாகவும், வாசனையுடையதாகவும் காணப்படும். இதை பிள்ளைகள் கூடுதலாக விரும்பி உண்பார்கள்.

# பெரியப்பா பதில்கள்





**கே: பெரியப்பா, பிழைப்புத் தேடியே காலம் கரைந்து போகிறது! பொருள் தேடி அலையாமல் நாம் வாழ முடியாதா?**

*- மணிவண்ணன், மன்னார்.*

ப: உலகச் சிறையில் இருந்தால் பொருள் தேடத்தான் வேண்டும். அரசாங்கச் சிறையில் இருந்தால் பொருள் தேடத் தேவையில்லை.

**கே: கொள்கையை விட்டு கூட்டணி அமைத்துக்கொள்ளும் கட்சிகளைப் பற்றிய தங்கள் கருத்து என்ன?**

*- சி. இலக்கியா, வவுனியா.*

ப: நாம் பிழைக்கத் தெரியாதவர்கள் அதனால் உழைத்துக் கொண்டிருக்கிறோம். அவர்கள் உழைக்கத் தெரியாதவர்கள் அதனால் பிழைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

**கே: பெரியப்பா, உங்களுக்கு யாரைப் பிடிக்கும்? யாரைப் பிடிக்காது?** *- மீனா, மட்டக்களப்பு.*

ப: பகலை இரவாக்குபவர்களைக் கொஞ்சமும் பிடிக்காது இரவையும் பகலாக்குபவர்களை மிகவும் பிடிக்கும்.
அதாவது பகலில் கடமை செய்யாது தூங்குபவர்களைப் பிடிக்காது, இரவில் தூக்கம் தொலைத்து கடமை செய்பவர்களைப் பிடிக்கும்.

**கே : இக்காலத்தில் வெற்றிபெற கலை, இலக்கியம், அரசியல், விளையாட்டு - இதில் எதைத் தேர்ந்தெடுக்க வேண்டும்?**

*- அருள்வரதன், முருங்கன்.*

ப : நீங்கள் தேர்ந்தெடுக்க வேண்டியது பிறகு. உங்களுக்கு இவற்றில் ஏதேனும் ஒன்றில் திறமை இருக்கும் பட்சத்தில் அதற்கான பாதை உங்களை ஏற்கெனவே தேர்ந்தெடுத்திருக்கும். அதில் உங்கள் பயணமும் தொடர்ந்திருக்கும்.

**கே : பெரியப்பா, நீங்கள் ரசித்த புதுக்கவிதை ஒன்றைக் கூறுங்கள்?** *- மேகலா, வவுனியா.*

ப : "முதியோர் இல்லம்
திறக்கப் போனவனுக்கு
இன்ப அதிர்ச்சி
வரிசையில் நடந்து வந்தாள்
தாய்."

**கே : பெரியப்பா, சிலர் எனது வளர்ச்சியை தடைசெய்ய முயற்சிக்கிறார்களே..?** *- கவிதா, மன்னார்.*

ப : திறமையின்மீது நம்பிக்கையும், வெற்றியடைவதற்கான திட்டமிடலும் இருந்தால் யாராலும் நமக்குத் தடைபோட முடியாது.

**கே : சுனாமி வந்தும் இன்னும் கடற்கரை ஓரங்களில் மக்கள் வாழ்ந்துகொண்டுதானே இருக்கிறார்கள்?**

*- சிவலோகன், அடம்பன்.*

ப : சுனாமி எத்தனையோ வருடங்களுக்கு ஒரு முறைதான் வருகிறது. ஆனால் ஏழை மக்கள் வாழ்க்கையைத் தினமும் அல்லவா வாழ்ந்து தொலைக்க வேண்டி உள்ளது.



**கே. எட்டாத உயரத்தில் இருக்கும் கடவுளை எட்டிப்பிடிக்க என்ன வழி?**

*- திவ்வியன், முருங்கன்.*

ப. செபம்.

**கே: பெரியப்பா, துன்பப் படுகிறவர்களுக்குத்தான் துன்பம் புரியும் என்கிறேன்?**

*- மதனராஜ், வவுனியா.*

ப: ஒரு வீட்டு வாசலில், 'இங்கு நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு' என்ற அறிவிப்பு இருந்தது. வாசல் வழியாக ஒரு குட்டிப் பையன் எட்டிப் பார்த்து, வீட்டுக்காரரைக் கூப்பிட்டான். அவர் ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தார். "அங்கிள்! எனக்கு ஒரு நாய்க் குட்டி தருவீங்களா?' 'இதெல்லாம் விலைகூடிய நாய். உன்னிடம் அத்தனை காசு இருக்குமா?' 'என்னிடம் நூறு ரூபாய் இருக்கிறது!' என்றான். 'போதாதே' என்றார் வீட்டுக்காரர் 'சரி நாய்க்குட்டிகளை நான் பார்க்கவாவது விடுவீர்களா?' என்றான். அவர் வீட்டுக் கதவைத் திறந்து விசில் அடிக்க, சந்தோஷப் பந்துகளாக மூன்று நாய்க்குட்டிகள் சிறுவனை நோக்கி ஓடி வந்தன. அவனைப் பார்த்து வாலாட்டி, அவன் முகத்தை நக்கிக் கொடுத்தன. சற்று தூரத்தில் நான்காவது நாய்க்குட்டி, இதைச் சோகமாகப் பார்த்துக்கொண்டு இருந்தது. 'நீயும் வா குட்டி' என்று சிறுவன் அழைக்க, 'அது பிறந்ததிலிருந்தே ஓட முடியாது. யாரும் வாங்க மாட்டார்கள்' என்றார் வீட்டுக்காரர். 'எனக்கு அதுதான் அங்கிள் வேண்டும். என்னாலும் ஓட முடியாது' என்றான் சிறுவன், தன் சக்கர நாற்காலியில் இருந்து!

**கே. ஒரு சர்வாதிகார நாட்டிற்கும் ஒரு ஜனநாயக நாட்டிற்கும் என்ன வித்தியாசம்?**

*- வசந்தன், விடத்தல்தீவு.*

ப. சர்வாதிகார நாட்டில் கேள்வி கேட்பது சிரமம். ஜனநாயக நாட்டில் பதில் சொல்வது சிரமம். ஒரு ஜனநாயக நாட்டில் எவ்வளவு சிரமப்பட்டுப் பதில் சொல்கிறேன் என்பதை இப்போதாவது நினைத்துப் பாருங்கள் வசந்தன். கி... கி... கி....!

# நீங்காத நினைவுகள் நீங்காத நினைவுகள்

## 31ம் நாள் நினைவு

மலர்வு 30 - 08 - 1984 | உதிர்வு 06 - 10 - 2006



### மாட்டினா ஜெனிபர் (துளசி)
### (நறுவிலிக்குளம், வங்காலை)

"அன்பின் சிகரமாய் குடும்பத்தின் குலவிளக்காய் குவலயத்தில் உத்தமியாய் பொறுமைக்கு ஒரு பூமியாய் அமைதிக்கு ஒரு நிலையாய் கனிவுக்கு சிறந்த உள்ளமாய் வாழ்ந்தாய்! பாசத்தின் சகோதரியாய் - மகளாய் 22 வருடங்கள் வாழ்ந்து நீ கண்ட கனவுகள் நிறைவேறு முன்னே காற்றினில் செய்தி இடியென வந்தது எங்கள் இதயம் நின்று துடிதுடித்தது! ஒரு நொடிப்பொழுதில் பிரிந்து சென்று ஆறாத் துயரில் எம்மை ஆழ்த்தி விட்டாயே ஜெனி!" மாதம் ஒன்று அல்ல வருடங்கள் பல சென்றாலும் உன் நினைவு எம்மை விட்டு நீங்காது கண்மணியே!
உன் ஆன்மா இறைபதம் சேர்ந்து நித்திய சாந்திபெற இறைவனைப் பிராத்திக்கின்றோம.

உன் பிரிவால் துயருறும் - அப்பா, அம்மா, சகோதரி, உற்றார், உறவினர்.

## 26ம் ஆண்டு நினைவு

மலர்வு 10 - 05 - 1920 | உதிர்வு 12 - 12 - 1980



### யோசப் றோசா சோசை
### வங்காலை

அன்னைக்கு இலக்கணமாய் வாழ்வினில் வசந்தமாய் பாசவலை வீசி எம்மை பக்குவமாய் வளர்த்தாயே. அம்மா ஐம்பத்தொன்பது ஆண்டதனில் ஆழம்காணா அன்பினால் எம் நெஞ்சத்தில் நிறைந்து விட்டாய். ஈர் ஐந்து திங்கள் சுமந்து ஐவராய் எம்மை ஈன்றெடுத்தாய். இறுதிகாணும் முன் உன்னை ஆண்டவன் அழைத்துவிட்டானே. இருபத்தாறு ஆண்டு சென்றாலும் உன்னை உள்ளம் மறக்குமோ. உன் ஆன்மா இறைவனில் இளைப்பாற பிரார்த்திக்கின்றோம்.
இரங்கல் திருப்பலி 12.12.2006 அன்று ஆட்காட்டிவெளிப் பங்கிலும் வங்காலையிலும் ஒப்புக்கொடுக்கப்படும்.

பிரிவால் துயருறும், உற்றார் உறவினர்கள்.

## 10ம் ஆண்டு நினைவு

மலர்வு 23 - 07 - 1946 | உதிர்வு 06 - 11 - 1996



### யோசப் அன்னம்மா மீயஸ்,
### வங்காலை

ஆசையாய் எம்முடன் பழகி அக்கா எனும் உறவிற்கு அர்த்தமும் தந்தாயே!
உறவுகள் சேர்ந்திருந்தால் இன்பம், அது பிரிவதென்றால் உலகில் அனுபவிக்கா துன்பம். உன் பிரிவும் எம் மனம் தாங்குமோ?
காலங்கள் உன்னைக் கடக்கும்முன் காலனாய் கொடு நோய் உன்னை கொள்ளை கொண்டதே. உன் ஆன்மா ஆண்டவன் மடியில் சாந்தி பெற இறைவனிடம் இறஞ்சுகின்றோம்.

- இரங்கல் திருப்பலி 2006.11.06 அன்று வங்காலையிலும் ஆட்காட்டிவெளிப் பங்கிலும் ஒப்புக்கொடுக்கப்படும்.

பிரிவால் துயருறும், உற்றார் உறவினர்கள்.

## 1ம் ஆண்டு நினைவு

மலர்வு 02 - 03 - 1933 | உதிர்வு 10 - 11 - 2005



### திருமதி. அல்பேட் குணசீலி
### (பனங்கட்டுக்கொட்டு, மன்னார்.)

பொறுமைக்கு ஒரு பூமியாய், அமைதிக்கு ஒரு சிலையாய், பாசத்திற்கு இனிய தாயாய், கடமைக்கு ஒரு தாதியாய் கனிவுக்கு சிறந்த உள்ளமாய் பாசமுடன் நேசமுடன் பக்குவமாய் காலமெல்லாம் எங்களைப் பெற்று வளர்த்தெடுத்த அம்மா! அம்மம்மா! நீங்கள் எங்களுடன் வாழ்ந்த காலத்தின் நினைவலைகள் எங்கள் இதயச் சுவர்களில் அழியாத கோலங்களாக நிழலாடுகின்றன-தாயே!

இவரின் பிரிவால் துயருறும் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், மருமக்கள், பூட்டப்பிள்ளைகள்.

## 8ம் ஆண்டு நினைவு

மலர்வு 18 - 07 - 1942 | உதிர்வு 01 - 01 - 1998



## 11ம் ஆண்டு நினைவு

மலர்வு 05 - 11 - 1974 | உதிர்வு 06 - 11 - 1995



### நோபேட் அல்போன்ஸ்
### (தலைமன்னார்)

### இ. அ. ரவீந்திரக்குமார்
### (பாபு - தலைமன்னார்)

மண்ணிலே நீங்கள் இருவர் மறைந்தாலும் அன்போடு எமை வளர்த்த நாட்கள் எம் மனத்திரையில் விழுதே! வசந்தம் கமழும் பூக்களாய் அமைதி கொண்ட சுபாவம்! கோபமது கொள்ளா நேயம்! இரக்கம் கொண்ட நல் இதயம்! அன்பு கொண்ட உள்ளம்! எதையும் தாங்கும் இதயமாய் வாழ்ந்தீர்கள். உங்கள் இருவரையும் எம்மால் மறக்க முடியவில்லையே. காலத்தின் முடிவுரையில் இறைவனடி கலந்துவிட்டீர்கள். பிரிந்துவிட்ட எம் உறவு மறவாது உங்களை. உங்களது ஆன்ம சாந்திக்காகவும் விண்ணிலே இறைவனோடு வாழவும் என்நாளும் வேண்டி நிற்கின்றோம்.

பிரிவால் துயருறும், திரு. ச. சிங்கராயன் குரூஸ், திருமதி. சாராள் லியோன், அருட்சகோதரி தியோப்பின் (றெம்சி), கொன்சி, ஜென்சி, சௌமி, ஜென்ஸ்ரன், தலைமன்னார்.

## 1ம் ஆண்டு நினைவு

மலர்வு 01 - 12 - 1931 | உதிர்வு 20 - 11 - 2005



### சந்தியா அமிர்தம் சில்வா
### (தபால் தந்தி தொலைத் தொடர்பு அலுவலர்)

ஆலமரமென கிளைகளும் விழுதுகளும் பரப்பி காலம் முழுவதும் கடமை செய்தீர். கனமும் பெற்றீர்!
ஞானமதில் நாளும் யாவர்க்கும் நன்மை புரிந்தீர்! தேனமுதான அமிர்தம் என்னும் பெயருக்கேற்ப ஆனமட்டும் அன்பு மொழி கூறி நின்றீர்!
வானதேவன் அழைப்பையேற்று வாழ்வொழிந்து தானமென தரணிவிட்டேகிய உம்மையிறைவன் தீனம் நீக்கி நித்திய வீட்டில் ஏற்க நிதமும் வேண்டுகிறோம்.

*என்றென்றும் நினைவில் வைத்திருக்கும் அன்பின் மனையாள், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.*

## 2ம் ஆண்டு நினைவு

மலர்வு 21 - 05 - 1945 | உதிர்வு 22 - 11 - 2004



### ஆறுமுகம் லோகம்பால்
### (அடம்பன் - மாளிகைத்திடல்)

மரணமது முடிவில்லை, மறுவாழ்வின் தொடக்கமாகும். அந்த வழியிலே அன்பும் பொறுமையும் கருணையும் கொண்டு வாழ்ந்த எங்கள் அன்பு அப்பம்மா, நீங்கள் மரித்துவிடவில்லை மாபரன் தாழ்களில் மலர்ந்து விட்டீர்கள். ஆண்டு இரண்டானாலும் மாறாது மறையாது உங்கள் அன்பு முகம். உள்ளங்கள் துடிக்குதம்மா, உறவுகள் அழுகின்றன மறக்க முடியாத உங்கள் அன்பு, மரணத்தால் அழிந்திடுமா? என்றும் உங்கள் ஆன்ம சாந்திக்காக வேண்டுகின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்,
அன்புக் கணவர், ஆறுமுகம்,
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.

*தகவல்: த. சிந்திகா, பட்டிதோட்டம்.*

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி - இல - 55

## 1 அரசர்கள் - அதிகாரம் 9 - 15

உங்கள் விடைகளை 10. 12. 2006க்கு முன் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கவும். சரியான விடையை எழுதிய மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பி வைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும்.

(பதிப்பாசிரியர்)

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | | | | | | 02 |
| 03 | | | | | ✱ | | | | 04 | |
| | | | | | 05 | | | | | |
| | | | 06 | 07 | | | | ✱ | | |
| | | 08 | | | | | | 09 | | |
| ✱ | 10 | | | | | | 11 | | | |
| 12 | | | | 13 | | | 14 | | | |
| | | ✱ | | | 15 | | 16 | | | 17 |
| | 18 | | | | | ✱ | ✱ | | 19 | |
| | | 20 | | | | | | | 21 | |
| 22 | | ✱ | 23 | | 24 | | | | | 25 |

### இடமிருந்து வலம்

1. சாலமோன் கெசேரைப் ..............................க் கட்டினார்.
3. அரசர் சாலமோன் பொன் ...................... இருநூறு கேடயங்கள் செய்தார்.
5. அவர் திரும்பிப் போகையில் ஒரு ...................... வழியில் அவரைக் கண்டு அடித்துக் கொன்றது.
6. ஆசா தன் மூதாதை தாவீதைப்போல் ஆண்டவர் ......................... நேர்மையுடன் நடந்து வந்தான். (2வது எழுத்து 1வது எழுத்துக்கு முன்னே நிற்கிறது.)
7. என் ......................... யில் நீர் செய்த வேண்டுதலையும், விண்ணப்பத்தையும் கேட்டேன்.
8. தான் தேர்ந்த கொண்ட வெள்ளி, தங்கத்தாலான ......................... களையும், ஆசா ஆண்டவரின் இல்லத்திற்குள் கொண்டு வந்து சேர்த்தான்.
10. உண்மையில் நான் கேள்விப்பட்டதைவிட, உம் ......................... செல்வமும் மிகுதியாய் இருக்கின்றன.
12. ஒரு குறையுமில்லை; ஆயினும் ................ப் போக விடை தாரும்.
24. நீங்கள் ஜெருசலேமுக்குப் போய்வருவது பெருந் ......................... அல்லவா!

### மேலிருந்து கீழ்

1. இஸ்ரயேல் மக்களால் முற்றிலும் அழிக்கப்பட இயலாமல் நாட்டில் விடப்பட்டிருந்தோரின் ................ கள் சாலமோனின் அடிமை வேலைக்குக் கட்டாயப்படுத்தப்பட்டனர்.
2. உண்மையில் நான் கேள்விப்பட்டதைவிட உம் ஞானமும் ...................... மிகுதியாய் இருக்கின்றன.
4. பின்னர் அங்கிருந்து .............. பெனுவேலைக் கட்டியெழுப்பினான்.
9. இஸ்ரயேல் மக்களால் முற்றிலும் அழிக்கப்பட ................ நாட்டில் விடப்பட்டிருந்தோரின் புதல்வர்கள் சாலமோனின் அடிமை வேலைக்குக் கட்டாயப்படுத்தப்பட்டனர்.
10. எப்போதும் உமக்குப் பணிபுரிந்து உம்முடைய .................. நிறைந்த மொழிகளைக் கேட்கும் உம்முடைய பணியாளரும் நற்பேறு பெற்றவரே!
13. சாலமோன் வாழ்நாள் முழுவதும் அவர் இஸ்ரயேலின் .............. இருந்தான்.
15. யூதா ............. தவிர வேறு எந்தக் குலமும் தாவீது குடும்பத்தின் பக்கம் சேரவில்லை.
18. நீர் என்னோடு என் வீட்டுக்கு வந்து ..................... இளைப்பாறும்.

### வலமிருந்து இடம்

2. நான் இங்கு வந்து அவற்றை நேரில் காணும்வரை அச் ............ நம்பவில்லை.
4. சாலமோனின் காலத்தில் .................. யாரும் உயர்வாக மதிக்கவில்லை.
5. ஆனால், அதாது அவன் தந்தையின் ஏதோமியப் பணியாளருள் ...................... சேர்ந்து எகிப்துக்குத் தப்பி ஓடிப்போனான்.
9. அப்பொழுது, 'இஸ்ரயேல் மற்றெல்லா மக்களினங்களிடையே பழமொழியாகவும், ........... ச் சொல்லாகவும் அமையும்.
11. அவர் சாலமோனிடம் தன் மனத்திலிருந்த ............... குள் அனைத்தையும் வெளிப்படுத்தினார்.
14. எங்கள் ............... ச் சொத்து ஈசாயி மகனிடம் இல்லை.
16. நீர் உம் வீட்டில் ............ கொடுத்தாலும், நான் உம்மோடு வரமாட்டேன்.
21. இந்தத் ................ ஆண்டவரால் நிகழ்ந்தது.
25. ஆண்டவரின் ............. க் கேட்ட அவர்கள் அவரது சொற்படியே திரும்பிப் போய்விட்டார்கள்.

### கீழிருந்து மேல்

8. ஆயினும், உன் தந்தை தாவீதின் .............. உன் காலத்தில் நான் இதைச் செய்யமாட்டேன். (3ம், 4ம் எழுத்துக்கள் மாறியுள்ளன.)
10. சாலமோனுக்கு ஆண்டவர் அருளியிருந்த ............... நேரில் கேட்டறிய எல்லா நாட்டு மக்களும் அவரை நாடி வந்தனர்.
17. துயரமான செய்தியையே உனக்குச் சொல்ல ................ என்பது எனக்கு வந்த கட்டளை.
19. ஆயினும், தாவீதின் பொருட்டு அவருடைய கடவுளாகிய ஆண்டவர், ஜெருசலேமில் அவரது குல ......... ஒளிரச் செய்தார்.
20. அதன் மீதுள்ள சாம்பல் ............. கொட்டப்படும்.
22. அக்கப்பல்களில் சாலமோனின் பணியாளருக்குத் துணையாயிருக்கத் ............. மிகுந்த மாலுமிகளை ஈராம் அனுப்பி வைத்தார்.
23. நான் என் சொந்த ..................ப் போக விரும்புகிறேன்.
25. அத்தகைய ................... மரங்கள் அதன் பின் அங்கு வந்ததுமில்லை.

விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 54ற்கான முடிவுகளை 2006ம் ஆண்டு டிசம்பர் மாத மன்னாவில் எதிர்பாருங்கள்.

## மன்னா சந்தாதாரர்களே!

உங்கள் சந்தாக் காலம் முடிவடையும் மாதம் உங்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படும் மன்னாவின் உங்கள் முகவரிக்குக் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. அதைப்பார்த்து உங்கள் சந்தாவை உரிய காலத்தில் புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

### மன்னா தனிப்பிரதிகளுக்கான ஆண்டுச்சந்தா

உள்நாடு - இலங்கை ரூபா. 400

வெளிநாடு - இலங்கை ரூபா 2000 (20 யூரோ)

## விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 53ல்

சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசு பெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்

*முதலாம் பரிசு*

ம. ஆன் கிஷோ சக்சி.
புனித மரியாள் விடுதி.
திருகோணமலை.

*இரண்டாம் பரிசு*

யூ. றொ. டிலிஷா,
50 வீட்டுத்திட்டம்,
சாந்திபுரம், மன்னார்.

*மூன்றாம் பரிசு*

எம். ராகுல்,
கீளியங்குடியிருப்பு,
தலைமன்னார்.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 75 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 72 பேர்.


## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.53ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில்

## பாராட்டுப் பெறும் 50 அதிஸ்ரசாலிகள்

1. திருமதி. வசந்தி பேரின்ப நாயகம், ஆஸ்பத்திரி வீதி, மன்னார்.
2. அ. ஜஸ்மின் சறோன், ஆவணம், நானாட்டான்.
3. அ.றூபா குரூஸ், தே. ப. கன்னியர் மடம், தேவத்தை றாகம.
4. லோ. அமலராணி வாஸ், 4ம் வட்டாரம், வங்காலை.
5. வி. வீஜினி பிகிறாடோ, பள்ளிமுனை, மன்னார்.
6. க. சிறோமி, இலுப்பைக்குளம், நேரியகுளம்.
7. ஆர். ஜெனோவாமேரி, இல. 21/2 றொஹெம்ட்டன், அப்புத்தளை.
8. யே. அலன் கிஜினஸ், தரம் - 7, உயிர்த்தராசன் குளம், முருங்கன்.
9. ம. கொவின் அன்ஸ்கர், பொன்தீவுகண்டல், தரம் - 9, முருங்கன்.
10. தே. நிஷாந்தினி, பூவரசங்குளம், வவுனியா.
11. மதன் (யூட்), லூர்து மாதா வீதி, முதலை குத்தி, உயிலங்குளம்.
12. அ. கரோலின் கீர்த்திகா, 70 பேராலய வீதி, திருகோணமலை.
13. எம். ராதா, கவயன் குடியிருப்பு, தலைமன்னார்.
14. பற்றிசியா சில்வேஸ்ரர், பிரான்ஸ்.
15. ச. ஜோண்சன், அசீசீ இல்லம், குருக்கள் மடம், மட்டக்களப்பு.
16. பி. ஜெ. சிந்துஜா, எழுத்தூர், மன்னார்.
17. எஸ். யூலின் சியானி, தரம் - 9, புனித சவேரியார் பெ. பாடசாலை.
18. அ. யோகவதனி, ஆயுள்வேத மருந்தகம், பூங்கா வீதி, வவுனியா.
19. மெல்டன் சுரேக்கா குரூஸ், 8ம் வட்டாரம், பேசாலை.
20. ரி. ஜெ. சகாயராணி பெர்னாண்டோ, 8ம் வட்டாரம், பேசாலை.
21. வசந்தி சத்தியசீலன், எழுத்தூர், மன்னார்.
22. சு. கிருபதர்சினி, தி.கு.கன்னியர் மடம், பெரியபண்டிவிரிச்சான்.
23. யே. ஜெயராதா, தேவன்பிட்டி பங்கு, விடத்தல்தீவு.
24. எஸ். எஸ். காஜனா, ஆலங்குளம், வட்டக்கண்டல்.
25. டெபோறா மோகன் ராஜ், ராணிஸ்ரன், புகையிரத நிலையவீதி, மன்.
26. கமலா கிறிஸ்தோப்பர், மடுமாதா வீதி, சின்னக்கடை, மன்னார்.
27. யே. கமிலஸ்ரீனா, புனித மரியாள் விடுதி, திருகோணமலை.
28. றொ. கவிதா, அரிப்பு, சிலாவத்துறை.
29. யே. அலன் கிஜினஸ், தரம்-7, உயிர்த்தராசன் குளம், முருங்கன்.
30. இ. வினு, பிள்ளையார் கோவிலடி, உப்புக்குளம், மன்னார்.
31. லோ. அமலராணி வாஸ், 4ம் வட்டாரம், வங்காலை.
32. பி. சேவியர் றோஸ்மேரி, கீளியங்குடியிருப்பு, தலைமன்னார்.
33. ம.யஸ்ரீன் பிரபாகர், பறப்பாங்கண்டல், பெரிய குளம், உயிலங்குளம்.
34. ஜெ. ஜெறோஜினி, யோசவ்வாஸ் நகர், தோட்டவெளி, மன்னார்.
35. அ. யூட் றொட்றிக்கோ, பனங்கட்டிக்கொட்டு கிழக்கு, மன்னார்.
36. செ. ஆன் நியூசிக்கா துரம், மரியாள் வீதி, தாழ்வுபாடு.
37. செ. வளன் நியூமன் துரம், மடுத்தினார் குருமடம், யாழ்ப்பாணம்.
38. ப. நிறோமி, இத்திக்கண்டல், அடம்பன்.
39. செல்வி. தே. உதய ஷாளினி, நோர்வே.
40. ஞா. இ. லினோஜினி, செல்வபுரம், முல்லைத்தீவு.
41. பே. அலோறியஸ், கனகராஜன் குளம் தெற்கு, வவுனியா.
42. பி. சேவியர் றோஸ்மேரி, கீளியன் குடியிருப்பு, தலைமன்னார்.
43. தீ. றஞ்சினி, தரம் - 6, தி.கு. க. மடம், பெரியபண்டிவிரிச்சான்.
44. ப. த. திரேசா றீற்றா, இத்திக்கண்டல், அடம்பன்.
45. வை. எலிசபேத், தலைமன்னார் பியர், தலைமன்னார்.
46. றெமூந்துபிள்ளை மேரி யோசப்பின், கங்காணிதீவு, நானாட்டான்.
47. இ. றொக்சன், தோட்டவெளி, மன்னார்.
48. பூபதி தாமோதரம் பிள்ளை, தபால் கந்தோர் வீதி, மன்னார்.
49. தேவிகா பத்மராஜா, மடுமாதா வீதி, பெற்றா, மன்னார்.
50. ந. கனிஸ்ரா, தி.கு.க. மடம், பெரியபண்டிவிரிச்சான், மடு.

## 1ம் ஆண்டு நினைவு

மலர்வு 09 - 05 - 1968



உதிர்வு 06 - 12 - 2006

### அமரர். சிறில் றொபட் பீரிஸ்
### பிரபல வர்த்தகர், 8ம் வட்டாரம், பேசாலை

ஓராண்டு அதற்குள் ஓடி மறைந்ததே! நூறாண்டானாலும் நும் நினைவகலாதே! பேர் சொல்லும் பிள்ளைமுகம் பொலி விழந்ததே! ஊர் திரண்ட இளைஞரும் உற்சாகமிழந்தனரே! அன்னை தந்தை சோதரருடன் உறவுகளும் உன்னைக் கைப்பிடித்த உற்ற மனையாளும் தன்னிலை தளர்ந்து தனியாகி நிற்கின்றார் நன்னிலைதான் என்று வருமென ஏங்குகின்றார்
வாராத செல்வம் எது வந்தாலும் உன் போலாகாது
தீராது தீராது உன்னையிழந்த துயர் என்றென்றும்
மாறாத துயருடன் மண்டியிட்டோம் இறையிடம்
தேறவேண்டும் உன் ஆன்மா தேவனில் என்றென்றும்

*அமரர். சி. றொபட் பீரிசின் நித்திய இளைப்பாற்றிக்காக 06.12.2006 (புதன் கிழமை) அன்று பேசாலை புனித வெற்றியன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். இதைக்கண்ணுறும் அனைவரும் அவரின் ஆன்மா சாந்தியடைய வேண்டுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.*

## 4ம் ஆண்டு நினைவு

மலர்வு 05 - 10 - 1920



உதிர்வு 19 - 11 - 2002

### திருமதி அந்தோனிப்பிள்ளை மேரி மாகிறேட்
### (பாலைக்குளி - அடம்பன்)

அன்பின் திருவுருவாய், பாசத்தின் பிறப்பிடமாய் பண்பின் சிகரமாய் ஊர் புகழும் உத்தமியாய் வாழ்ந்து, எமக்கெல்லாம் வழிகாட்டிய அன்புத் தெய்வமே அம்மா! கார்த்திகை பத்தொன்பதில் பறந்து விட்டாய் எம்மை விட்டு! நாலாண்டு அல்ல நாநூறு ஆண்டு சென்றாலும் நாம் உம்மை மறவோம் அம்மா! சத்தியத்தின் நாயகியே சாவினிலே ஏன் புகுந்தாய்? உத்தமியே உம் பிரிவால் உயிரே துடிக்குதம்மா உம்மை தெய்வமென நாம் வணங்குவோம், உம் மலரடிக்கு எம் கண்ணீர் அஞ்சலி.

இவரின் ஆன்ம சாந்திக்காக 19.11.2006 அன்று Kioster Hilig Kureuz புனித அந்தோனியார் ஆலயம், புதுக்கோட்டை, புனித செபஸ்தியார் ஆலயம், மன்னார் ஆகிய இடங்களில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இவரின் பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
*தகவல்: அற்புதமலர் குமார், சுவீஸ்.*

## அனைத்துத் தொடர்புகளுக்கும்

The Editor,
MANNA
Pastoral Centre,
St. Sebestian's Street
Mannar, Sri Lanka.

பதிப்பாசிரியர்,
மன்னா
திருமறைப்பணி நிலையம்,
புனித செபஸ்ரியார் வீதி
மன்னார்.

தொலைபேசி. இல. 023 - 2232377

## மன்னா அபிமானிகளே!

இறந்துபோன உங்கள் அன்புக்கு உரியவர்களின் நினைவுகள், யூபிலி, மற்றும் பிறந்தநாள் நினைவுகள் போன்றவற்றிற்கான கட்டணமாக ரூபா 1500 அறவிடப்படும். மன்னாவின் பக்கங்களை நாம் அதிகரிக்கின்ற போதும், மன்னாவின் விலையை அதிகரிக்கவில்லை என்பதை வாசகர்கள் அறிவீர்கள்.


எனவே இந்த மேலதிக செலவை மேற்கூறிய விளம்பரங்கள் மூலம் ஈடுசெய்ய் விரும்புகின்றோம். எனவே மன்னா அபிமானிகள் எம்மோடு ஒத்துழைப்பார்கள் என நம்புகின்றோம்.

- மன்னா நிர்வாகம்.

மன்னா

# ஏ- 9 பாதை மூடப்பட்டமையால் வடபகுதி மக்கள் விரக்தியில் உள்ளனர்

**யாழ் கறிற்றாஸ் (கியூடெக்) நிறுவன இயக்குனர் அறிக்கை**



அனேகமான மக்களுக்கு நாளாந்த உணவே கிடைப்பதில்லை. அனேகமான மக்கள் குறிப்பாக மாணவர்கள் காலை உணவைத் தவிர்ப்பதன் விளைவாக தமது கல்வியில் கவனம் செலுத்த முடிவதில்லை. சிலர் வகுப்பறைகளில் மயங்கி விழுகின்றனர். இவ்வாறு யாழ்ப்பாண கறிற்றாஸ் அமைப்பின் (கியூடெக்) இயக்குனர் அருட்பணியாளர் சி. ஜி. ஜெயக்குமார் அண்மையில் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியிட்ட யாழ் நிலைவரம் தொடர்பான அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இன்று முழு யாழ்ப்பான மக்களும் முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். கூட்டுறவுச் சங்கங்களின் முன்னாலும், எரிபொருள் நிரப்பும் நிலையங்களின் முன்னாலும் நீண்ட வரிசையில் மக்கள் நிற்கும் காட்சியை யாழ்ப்பாணத்தில் நாளாந்தம் காணலாம். யாழ்ப்பாணத்தில் உள்ள உளவளத்துணை நிலைய அதிகாரி ஒருவரின் கூற்றுப்படி ஓகஸ்ட் மாதம் 11ம் திகதியில் இருந்து நிலவிவரும் தொடர்ச்சியான - குழப்பமான சூழ்நிலையினால் அனேகமான மக்கள் விரக்தி அடைந்தவர்களாக உள்ளனர் என ஜெயக்குமார் அடிகளார் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## வத்திக்கானின் முக்கிய செய்திகள்

- "செபத்திற்கும், புனிதத்திற்கும் தங்களை அர்ப்பணிப்பது இறையன்பு மற்றும் பிறரன்பின் வெளிப்பாடாகும்" – திருத்தந்தை 16ம் பெனடிக்ற் சாம்பியா ஆயர்களுக்கு வலியுறுத்தல்

- 84 வயது கர்தினால் தினோ மண்டுசி அக்டோபர் 12ஆம் திகதி காலமானார். இதனால் கர்தினால்களின் எண்ணிக்கை 188 ஆகக் குறைந்துள்ளது.

- அக்டோபர் 13ஆம் திகதி திருத்தந்தையை இத்தாலியில் பிரதமர் ரோமானோ பரோடி சந்தித்தார். சமய நல்லிணக்கம், குடும்பம் மற்றும் ஒழுக்கம் பற்றிய கருத்தை திருத்தந்தை பகிர்ந்துகொண்டார்.

- திருத்தந்தை 16ம் பெனடிக்ற் 2006 நவம்பர் 28 முதல் டிசம்பர் 1ம் திகதி வரை துருக்கி நாட்டிற்கு பயணம் மேற்கொள்கிறார்.

- "வெறுப்புக்கும், பயங்கரவாதத்திற்கும் மதங்கள் தவறாகப் பயன்படுத்தப்படுவதை தடுக்க இறைவன் துணை புரிவாராக"
  - திருத்தந்தை 16ம் பெனடிக்ற்

- "பிற மதங்களுடனான உரையாடலில் ஒருபோதும் நமது கத்தோலிக்க அடையாளங்களை மறந்து விடக்கூடாது" –
  - திருத்தந்தை 16ம் பெனடிக்ற்

## நான்கு புதிய புனிதர்கள்!

இலத்தீன் அமெரிக்க நாட்டில் பிறந்த முதல் ஆயரும், அமெரிக்கக் கல்லூரியின் நிறுவுனருமான இரபேல்கைசர் வெலன்சியா உட்பட நான்கு பேர் புனிதர் நிலைக்கு திருத்தந்தை 16 ஆம் பெனடிக்றால் உயர்த்தப்பட்டுள்ளனர். ஒக்ரோபர் 15 ஆம் திகதி புனித இராயப்பர் பேராலயத்தில் புனிதர் பட்டம் வழங்கும் சடங்குகள் நடைபெற்றன. புனிதர்கள் விபரம்:

1. **முத்திப்பேறுபெற்ற இரபேல் கைசர் வெலன்சியா** : இவர் மெக்சிகோவைச் சேர்ந்தவர். இலத்தீன் அமெரிக்க நாட்டில் பிறந்த வெராகுரூஸின் முதல் ஆயர் (1878 - 1983).
2. **முத்திப்பேறுபெற்ற பிலிப் சமால்டன்** : இத்தாலி மறைமாவட்டக் குரு. திரு இருதய சலேசிய சபையை நிறுவியவர் (1848 - 1923)
3. **முத்திப்பேறு பெற்ற ரோசா வெனேரினி** : இத்தாலி நாட்டினர். இவர் துறவற ஆசிரியர்கள் வெனேரின் சபையைத் தோற்றுவித்தார்.
4. **முத்திப்பேறுபெற்ற டியோடோரா குயரின்** : இவர் பிரான்சில் பிறந்தவர். இவர் அமெரிக்காவில் மரியாவின் பாதுகாப்பு சகோதரிகள் சபையை நிறுவினார் (1798 - 1856)

இந்தப் புனிதர்கள், புனிதர்களின் புத்தகத்தில் இடம்பெறுவார்கள். அனைத்தையும் துறந்து கிறிஸ்துவைப் பின்பற்றுவதற்கு கிறிஸ்தவர்களுக்கு மாதிரிகளாய் இருப்பார்கள்.

## பேராயர் ஆஸ்வர்ட் கிராசியஸ் மும்பை பேராயராக நியமனம்!

திருத்தந்தை 16ம் பெனடிக்ற் அக்டோபர் 15 ஆம் தேதி ஆக்ரா பேராயர் ஆஸ்வர்ட் கிராசியஸ் அவர்களை மும்பையின் பேராயராக நியமித்துள்ளார் என்று வத்திக்கான் செய்தி வெளியிட்டுள்ளது.


மும்பையின் பேராயர் கர்தினால் ஐவன் டயஸ் வத்திக்கான் நற்செய்தி பரப்பு ஆணையத்தின் தலைவராக கடந்த மே மாதம் நியமிக்கப்பட்டார். பேராயர் கிராசியஸ் ஆக்ராவின் பேராயராகவும், இந்திய ஆயர் பேரவையின் தலைவராகவும் இருந்து வந்தார்.

61 வயதாகும் கிராசியஸ் மும்பையில் பிறந்தவர். 1970இல் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். திருச்சபைச் சட்டத்தில் 1981இல் முனைவர் பட்டம் பெற்றவர். மும்பை உயர் மறைமாவட்டத்தின் பேராயரின் செயலர் மற்றும் வேந்தராகப் பணியாற்றிய பின் 1997 இல் மும்பை உயர் மறைமாவட்டத்தின் துணை ஆயராக நியமிக்கப்பட்டார். பின்னர் ஆக்ரா உயர் மறைமாவட்டத்தின் பேராயராக நியமனம் பெற்றார். மறுபடியும் தனது மறைமாவட்டத்தின் பேராயராகத் திரும்பி வருகின்றார்.

தற்போது இவர் இந்திய ஆயர் பேரவையின் தலைவர் பணியுடன், இந்திய ஆயர் பேரவை கலைத் தொடர்பாணையத்தின் தலைவராகவும் பணிபுரிந்து வருகின்றார். பல பெரிய குருமடங்களிலும் திருச்சபைச் சட்ட பேராசிரியராகப் போதித்து வருகின்றார்.

## வத்திக்கானுக்கான புதிய செயலர்

**கர்தினால் ரார்சிசியோ பேர்ற்றோனே**



# சமய ஸ்தாபனங்களுக்கும் எச்சரிக்கையா?

## அருட்பணியாளர் ஜிம்பிறவுண் காணாமலாக்கப்பட்டது தொடர்பாக

**மன்னார் மறைமாவட்ட பொதுநிலையினர் பேரவை கேள்வி**



யாழ் அல்லைப்பிட்டியில் அண்மையில் இடம்பெற்ற வான் தாக்குதல் அசம்பாவிதத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் தம் உயிரைத் துச்சமென மதித்துப் பணியாற்றிய அருட்தந்தை ஜிம்பிறவுண் அவர்கள் காணாமல்போன செய்தி மக்கள் மனங்களில் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியுள்ளது என மன்னார் மறைமாவட்ட பொதுநிலையினர் பேரவை விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கிறிஸ்தவ விழுமியங்களைத் தம் உணர்வோடு கலந்து அன்பு, பாசம், கருணை, தியாகம் போன்ற நற்பண்புகளுடன் இறைபணி ஊடாக மக்கள் பணிபுரிந்த அருட்தந்தையர்கள் பஸ்ரியன், ஜெயராசசிங்கம் ஆகியோர் வரிசையில் இன்று காணாமல்போன அருட்தந்தை ஜிம்பிறவுண் அடிகளாரும் இடம்பெற்று விட்டாரா?

மக்களை இறைவாழ்வுக்கு இட்டுச்செல்ல தன் உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணித்து கடந்த இரண்டு வருடங்களாக செய்த அரும்பெரும் சேவையினை மன்னார் மக்கள் இலகுவில் மறந்துவிடமாட்டார்கள்! முப்பத்து நான்கு வயது நிரம்பிய இளம் குருவாக, இயேசுவின் ஊழியனாக பணிபுரிந்த அருட்தந்தை ஜிம்பிறவுண் அவர்கள் மன்னார் பேராலயப் பங்கின் துணைப் பங்குத்தந்தையாக அயராது பணிபுரிந்தார். மலர்ந்த முகமும், உண்மையினை ஏற்றமுடன் ஆணித்தரமாக எடுத்தியம்பும் அஞ்சாநெஞ்சமும், அனைவரையும் அரவணைக்கும் சுபாவமும் ஒருங்கே அமையப்பெற்றவர் எம் தந்தை அவர்கள்.

திருநிலையினர், பொதுநிலையினர் என்ற வர்க்க பேதம் பாராது மனம் திறந்து பொதுநிலையினரான சாதாரண மக்களை அன்பு பாராட்டி அவர்களை மதித்து அவர்களது அபிப்பிராயங்களுக்கு மதிப்பளித்து இறையரசைக் கட்டியெழுப்பும் பணியில் இணைந்து பணியாற்றி மக்கள் நெஞ்சங்களில் நீங்காத இடம்பிடித்தவர் ஆவார்.

இளமைப்பருவமே மனித வாழ்வின் முக்கியமான பகுதி என்பதை உணர்ந்து கத்தோலிக்க இளைஞர்களை ஒன்றுசேர்த்து இளைஞர் ஒன்றியம் மூலம் அவர்களது அளப்பெரிய சக்திகளை இறைபணியில் திருப்பி பணிகளைச் செய்தவர் இவர். ஆசிரியர்களின் மற்றும் பெரியோர்களின் துணையுடன் பங்கு மக்களின் அன்பியப் பணிகளை முன்னெடுத்துச் சென்றதுடன் பின்தங்கிய பகுதிகளில் நல் ஆயனாகப் பணிபுரிந்து அனைத்து மக்களையும் ஒரே அணியிற் கட்டிக்காத்த பெருமைக்கு சாந்திபுரக் கிராமம் சாட்சியம் கூறும். திருப்பலியில் அவர் தரும் திருவுரைகள் ஒவ்வொன்றிலும் மக்கள் மனங்களைச் சீராக்கும் நல்ல செய்தி நிட்சயம் இருக்கும்.

இரண்டு வருடங்கள் சிறந்த முறையில் இறைபணியாற்றி யாழ் மறைமாவட்டத்தில் அல்லைப்பிட்டிக்கு மாற்றலாகி இரண்டு மாதங்கள்கூட ஆகவில்லை எவருமே எதிர்பாராத வகையில் இக்கொடுமை நிகழ்ந்துள்ளது.

இந்த நிகழ்வு மன்னார் மறைமாவட்ட மக்களை மட்டுமல்ல அகில இலங்கை வாழ் கத்தோலிக்க மக்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளதுடன் பல அனர்த்தங்களாலும் பாதிக்கப்பட்டு உடல், உள நோயுற்றவர்களுக்கு உகந்த வைத்தியர்களாக சேவைபுரிய முன்வரும் குருக்களுக்கு ஓர் எச்சரிக்கைக் குறியீடாகவும் அமைந்துள்ளது.

மத சுதந்திரம் மனிதனது பிறப்புரிமை இதைப் பேணிப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசைச் சார்ந்தது. அந்த வகையில் காணாமல்போன அருட்தந்தை அவர்களையும், ஐந்து பிள்ளைகளின் தந்தையான திரு. வென்சஸ்லஸ் விமலதாஸ் அவர்களையும் கண்டுபிடிக்க உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அரசை கேட்டுக்கொள்கின்றோம் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாவ உணர்வற்றுப் போனதற்குக் காரணம் கடவுள் உணர்வற்றுப் போனதே!

**திருத்தந்தை கூறுகின்றார்**

கடந்த ஒக்ரோபர் 9ஆம் திகதி மேற்கு கனடா நாட்டு கத்தோலிக்க ஆயர்களைச் சந்திக்கையில், "உலகில் பாவ உணர்வு அற்றுப் போனதற்குக் காரணம் கடவுள் உணர்வு அற்றுப் போனதேயாகும்" என்று திருத்தந்தை 16 ஆம் பெனடிக்ற் கூறியுள்ளார்.

"பொது வாழ்விலிருந்து கடவுளைப் பிரிக்க முடியாது. காரணம், கடவுளுக்கு எதிரான குற்றங்களே. பாவம் என்னும் கருத்தானது மறக்கப்பட்டுள்ளது. ஒழுக்கம் பற்றிய சட்டங்கள் சார்பு மனப்பான்மையுடன் பார்க்கப்படும்போது நன்மை – தீமை என்பதை தனி மனித பொறுப்புணர்வுபோல் மறைந்து போகிறது" என்று திருத்தந்தை கூறியுள்ளார்." உலகில் மன்னிப்பு பெறுவதன் தேவையும், கடவுள் மன்னிக்க தயாராக உள்ளார் என்ற நம்பிக்கையும் மறக்கப்படும்போது பழி சுமத்தும் கலாச்சாரமும், குற்றமற்றவன் என்று வாதிடும் தன்மையும் பெருகும்" என்று கூறிய திருத்தந்தை, "இந்த நிலையை ஒழிக்க நற்செய்தியின் ஊதாரி மகன்போல தந்தையிடம் திரும்பி வரவேண்டும் என்றார். கிறிஸ்துவின் குணப்படுத்தும் உண்மையைப் பின்பற்றுவது என்பது தந்தையோடு இருப்பதாகும்.

மகனே! நீ என்னோடு எப்போதும் இருக்கிறாய். என்னுடையதெல்லாம் உன்னுடையதே. நாம் விருந்து கொண்டாடுவது முறையே. உன் தம்பி காணாமல் போயிருந்தான் கிடைத்து விட்டான். பாவ உணர்வுள்ளவர்களாக மாற்றுவது மேய்ப்புப் பணியின் முக்கிய நோக்கம். இதனால் கடவுள் உணர்வும் புதுப்பிக்கப்படும்" என்று ஆயர்களிடம் திருத்தந்தை பகிர்ந்துகொண்டார்.

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு கொழும்பு நந்தா அச்சகத்தில் அச்சிடப்பட்டு பதிப்பாசிரியரால் வெளியிடப்பட்டது.